விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினெட்டு — Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 புரட்டாதி 27 புதன்கிழமை (13.10.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 298

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# பொன்சேகாவுக்கு ஆதரவு வழங்க வாரம் ஒன்றுக்கு 10 இலட்சம் ரூபாய்

## சண்டே லீடருக்கு ஐ.தே.க. வழங்கியதாக சாட்சியம்

(கொழும்பு)

**கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது ஜனநாயக தேசிய கூட்டமைப்பின் தலைவர் சரத் பொன்சேகாவுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு சண்டே லீடர் பத்திரிகைக்கு வாரம் ஒன்றுக்கு 10 இலட்சம் ரூபாய் ஐக்கிய தேசியக் கட்சியினரால் வழங்கப்பட்டதாக அதன் ஆசிரியர் ப்ரெட்ரிக்கா ஜேன்ஸ் நேற்று நீதிமன்றில் தெரிவித்தார்.**

இறுதி யுத்தத்தின்போது வெள்ளைக்கொடியுடன் சரணடைய வந்த புலிகளின் சிரேஷ்ட உறுப்பினர்களை பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய சுட்டுக்கொல்ல உத்தரவிட்டார் என சண்டே லீடருக்கு கூறியதாக முன்னாள் ராணுவத் தளபதி சரத் பொன்சேகா மீது தொடரப்பட்ட வழக்கின் விசாரணை நேற்று கொழும்பு மேல் நீதிமன்றத்தில் இடம்பெற்றது.

இதன்போது சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியர் ப்ரெட்ரிக்கா ஜேன்ஸிடம் சரத் பொன்சேகாவின் சட்டத்தரணி, குறுக்கு விசாரணையை (18ஆம் பக்கம் பார்க்க)

## மிலிந்தவுக்கு விரைவில் எம்.பி.பதவி கிடைக்கும்?



(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் மிலிந்த மொறகொடவுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் அந்தஸ்தை வழங்கும் நோக்கில் தேசிய பட்டியல் மூலம் நாடாளுமன்றத்துக்கு தெரிவான முக்கிய அமைச்சர் ஒருவரை பதவி விலகும்படி அமைச்சர் பசில் ராஜபக்ஷ நிர்ப்பந்திப்பதாக அமைச்சர் விமல் வீரவன்சவின் கட்சியின் உத்தியோகபூர்வ இணையத்தளம் (18ஆம் பக்கம் பார்க்க)

## பொதுநலவாய விளையாட்டின் பிரதம விருந்தினராக ஜனாதிபதி!



### இன்று இந்தியா செல்கிறார்

(கொழும்பு)

இந்தியாவில் நடைபெற்று வருகின்ற பொதுநலவாய போட்டிகளின் இறுதி நிகழ்வில் மகிந்த ராஜபக்ஷவை விசேட பிரதம விருந்தினராக அழைக்கவிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையின் டெய்லி நியூஸ் அரச செய் தித் தாளை கோடிட்டு த ஹிந்து செய்தித் தாள் தகவல் வெளியிட்டுள்ளது. அதேவேளை இது தொடர்பில் இந்திய அரசாங்கம் அவருக்கு அழைப்பிதழ் ஒன்றை அனுப்பி வைத்துள்ளதாகவும் (18ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியின் விஜயத்துக்கு தமிழகத்திலிருந்து எதிர்ப்பு

(சென்னை)

புதுடில்லியில் நடைபெற்று வரும் காமன் வெல்த் போட்டிகளின் நிறைவு விழாவில் கலந்து கொள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு அழைப்பு அனுப்பப்பட்டிருப்பதற்கு தமிழகத்தில் சில தரப்புகளிலிருந்து கடும் எதிர்ப்பு எழுந்திருக்கிறது.

ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ வெளியிட்டுள்ள அறிக்கையில், போர் குற்றங்கள் நடைபெற்றனவா? என்று ஆராய ஐ.நா. மன்றமே மூவர் குழுவொன்றை அமைத்திருக்கும் நிலையில் பொதுவாக உலக நாடுகள் மத்தியில் இலங்கை அரசின் மனித உரிமை மீறல்கள் குறித்து கண்டனங்கள் எழுந்துள்ள நிலையில் மகிந்த ராஜபக்ஷவுக்கு இப்படி சிறப்பு செய்வது ஏற்றுக்கொள்ள முடியாதென்றும், ஈழத்தமிழர்களுக்கு சிங்கள அரசு கொடுமை செய்யவில்லை என்ற எண்ணத்தை உலக நாடுகளிடம் ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகவே (18ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளே

சிவல்புரி சிங்காரம் எழுதும் ஐப்பசி மாதப் பலன்கள் -பக்கம்

சேரத் துடிக்கிறார் ரம்லத்; நழுவப்போகிறார் நயன்தாரா - பக்கம் 07

பிறந்தநாள் பலன் உங்களுக்கு எப்படி -பக்கம்

## உள்ளூராட்சி மன்ற எல்லைகள் இரகசியமாக மீள் நிர்ணயம்

### அரசின் திட்டத்திற்கு ஐ.தே.க.எதிர்ப்பு

(கொழும்பு)

அரசாங்கம் இரகசியமான முறையில் உள்ளூராட்சி மன்ற எல்லைகளை மீள் நிர்ணயம் செய்து வருவதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை நடத்தும் நோக்கில் அரசாங்கம் இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

உள்ளூராட்சி மன்ற மீள் நிர்ணயம் தொடர்பில் நாடாளுமன்றில் இதுவரையில் சட்டம் நிறைவேற்றப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உள்ளூராட்சி (18ஆம் பக்கம் பார்க்க)

## காணாமல் போனோரின் விபரத்தை வெளியிடக்கோரி ஆர்ப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)

வடக்கில் காணாமல் போனவர்கள் தொடர்பாக யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் பாரிய அளவில் ஆர்ப்பாட்டங்கள் நடத்துவதற்கு அனைத்துப் பல்கலைக்கழகங்களின் ஒன்றியம் தீர்மானித்துள்ளதாக அதன் தலைவர் உபுல் பிரேமரத்தின தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக பத்திரிகையாளர் மாநாடு ஒன்று நேற்று முற்பகல் 10.30 மணிக்க யாழ்ப்பாணம் கே.கே.எஸ். வீதியில் அமைந்துள்ள திலக் விடுதியில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். நாம் கிளிநொச்சிக்கு விஜயம் செய்து அங்கு காணாமல் போனவர்கள் தொடர்பான விபரங்களை எடுத்துக் கொண்டோம். யாழ்ப்பாணத்திலும் அவர்கள் தொடர்பான விபரங்களை எடுக்க (18ஆம் பக்கம் பார்க்க)

## ஒரு இலட்சத்து 20 ஆயிரம் ஏக்கரில் வடக்கில் மேலதிக நெற்செய்கை

### ஆளுநர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் பெரும்போகத்தில் வடக்கில் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் ஏக்கரில் மேலதிக நெற்செய்கை மேற்கொள்ளப்படும் என வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி தெரிவித்தார்.

யாழ்ப்பாண பொது நூலகத்தின் கேட்போர் கூடத்தில் நேற்றுக்காலை நடைபெற்ற அமெரிக்க வர்த்தகக் குழுவினருக்கான வரவேற்புக் கூட்டத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார். இக்கூட்டத்துக்கு தலைமை வகித்த அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

புலிகளுடனான யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்தபோது வடக் (18ஆம் பக்கம் பார்க்க)



முல்லைத்தீவில் கண்டெடுக்கப்பட்ட புலிகளின் விமானக்குண்டுகள்...
(விரிவான செய்தி 14 ஆம் பக்கத்தில்)

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**



வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம் சொந்த இடத்தில் மீள இயங்கத் தொடங்கிய ஆரம்ப நாள் நிகழ்வில் இராணுவ அதிகாரி தேசியக் கொடியையும் அதிபர் பாடசாலைக் கொடியையும் ஏற்றுவதையும் மாணவர்கள் அணிவகுத்து நிற்பதையும் படங்களில் காணலாம்

# கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு விரைவில் ரயில் பயணம் ஆரம்பம்

## இலங்கைத் தூதுவர் கருத்து

கொழும்பு - யாழ்ப்பாணம் ரயில் சேவை மீண்டும் ஆரம்பிக்கும் காலம் வெகுதொலைவில் இல்லை என அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் ஜாலிய விக்கிரமசூரிய நேற்றுத் தெரிவித்தார்.

யாழ் பொது நூலகத்தின் கேட்போர்கூடத்தில் நடைபெற்ற அமெரிக்க வர்த்தகக் குழுவினருக்கான வரவேற்புக் கூட்டத்தில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார். வடமாகாண ஆளுனரின் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

1972 ஆம் ஆண்டு நான் ரயில் மூலம் யாழ்ப்பாணம் வந்தேன். அதன் பின்னர் ஒரு முறை விமானத்தில் வந்தேன். இன்றும் விமானத்தில் நான் வந்துள்ளேன். எனினும் மிக விரைவில் ரயில் மூலம் யாழ். வருவேன். அமெரிக்க வர்த்தகக் குழுவினர் இலங்கை வந்ததும் அவர்கள் வடக்கில் வர்த்தக முதலீடுகளைச் செய்யவுள்ளதும் எவரும் முற்றிலும் எதிர்பார்க்காத விடயமாகும்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் திறமையான வழிநடத்தல் காரணமாக இலங்கையின் பொருளாதாரம் ஒரு ஸ்திர நிலையை அடைந்துள்ளது. இப்போது இலங்கையில் வருடாந்த வருவாய் இரு மடங்காக அதிகரித்துள்ளது. இது விரைவில் மேலும் இரு மடங்காய் அதிகரிக்கும் என எதிர்பார்க்க முடியும். (ச-5)

### ஆக்கத்திறன் போட்டி

### வட்டக்கச்சி மாணவி முதலிடம்

மாகாண மட்டத்தில் நடைபெற்ற ஆரம்பக்கல்வி மாணவர்களுக்கான ஆக்கத்திறன் போட்டியில் வாய்பாடு மனனப் போட்டியில் வட்டக்கச்சி மகாவித்தியாலய தரம் 4 மாணவி கருணாநிதி தாருஷா முதலாமிடத்தை பெற்றார்.

யுத்தத்தால் இடம் பெயர்ந்து மீளக் குடியமர்ந்துள்ள நிலையில் மாகாண மட்டத்தில் முதலிடம் பெற்று பிரஸ்தாப மாணவி பெருமை சேர்த்துள்ளதாக அதிபர் தெரிவித்தார். (ச)

# முதலீட்டு நடவடிக்கை குறித்து ஆராய அமெரிக்கக் குழு யாழ்ப்பாணம் வருகை

(யாழ்ப்பாணம்)

அமெரிக்க அரச மற்றும் தனியார் வர்த்தகப் பிரதிநிதிகளைக் கொண்ட முதலீட்டுத் தூதுக்குழுவினர் யாழ். குடாநாட்டில் முதலீடுகளை மேற்கொள்வது தொடர்பாக ஆராய்வதற்கு நேற்று யாழ்ப்பாணத்திற்கான விஜயத்தை மேற்கொண்டனர்.

30 பேர் அடங்கிய மேற்படி அமெரிக்க வர்த்தக முதலீட்டு தூதுக்குழுவினர் நேற்று முன்தினம் இலங்கை வந்தடைந்தனர். இந்நிலையில் நேற்றுக் காலை விமானம் மூலம் பலாலியை வந்தடைந்தனர். விமான நிலையத்தில் வைத்து யாழ். அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரினால் வரவேற்கப்பட அமெரிக்க முதலீட்டாளர்கள் யாழ். பொது நூல்நிலையத்துக்கு அழைத்து வரப்பட்டனர். அச்சமயம் அங்கு வருகைதந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாமற்றும் வடமாகாண ஆளுனர் மேஜர் ஜெனரல் சந்திரசிறி உட்பட அமெரிக்க முதலீட்டு தூதுக்குழுவினரை யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா சம்பிரதாயபூர்வமாக வரவேற்றதுடன் அதிதிகள் மங்கல விளக்கேற்றி நிகழ்வினை ஆரம்பித்தனர்.

இதனைத் தொடர்ந்து வட மாகாணத்திலுள்ள முதலீட்டு வாய்ப்புக்கள் குறித்தும் வட பகுதியில் முதலீடு செய்வது குறித்தும் ஆராயும் மாநாடு ஆரம்பமாகியது. யாழ். அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரின் வரவேற்பு உரையுடன் ஆரம்பமான நிகழ்வில் அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் ஜாலிய விக்கிரமசூரிய மத்திய மற்றும் தெற்காசியாவுக்கான அமெரிக்க வர்த்தக அமைப்பின் பிரதிநிதியும் தூதுக்குழுவின் தலைவருமான மைக்கல் டிலானே வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோர் முதலீட்டு நடவடிக்கைகள் குறித்து சிறப்புரையாற்றினார்கள்.

இதனைத் தொடர்ந்து இலங்கை முதலீட்டுச் சபையின் நிறைவேற்று அதிகாரி துமிந்த ஆரியசிங்க வடபகுதியில் முதலீட்டு ஊக்குவிப்பு நடவடிக்கைகள் எனும் தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

மேலும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி அவர்கள் யாழ்ப்பாணம் உட்பட வடமாகாணத்தில் முதலீட்டுக்கான வாய்ப்புக்கள் எனும் தொனிப்பொருளில் விரிவாக உரை யாற்றினர். சமாதானமின்றி அபிவிருத்தி கிடையாது என்பதை வலியுறுத் திய சிவஞானசோதி அவர்கள் புதிய முதலீடுகளை வரவேற்கும் அதேவேளை ஏற்கனவே காணப்பட்ட காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை, பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை, ஒட்டுசுட்டான் மட்பாண்டத் தொழிற்சாலை, ஆனையிறவு உப்பளம் போன்ற தொழில்வாண்மைகளை மீண்டும் இயங்கவைக்க அரசாங்கம் முயற்சி எடுத்துவருவதாக அவர் மேலும் தெரிவித்தார். அத்துடன் வடபகுதி சுற்றுலா அபிவிருத்தி மற்றும் பனைவளத்தினை பயன்படுத்தி மேற்கொள்ளக்கூடிய உற்பத்திகள் தொடர்பாகவும் அவர் விரிவாக விளக்கமளித்தார்.

யாழ். பொது நூலகத்தில் இடம்பெற்ற முதலீட்டு மாநாட்டைத் தொடர்ந்து அச்சுவேலி கைத்தொழில் பேட்டைக்கு அமெரிக்க வர்த்தக தூதுக்குழுவினர் அழைத்துச் செல்லப்பட்டு முதலீட்டு நடவடிக்கைகள் குறித்து நேரில் கண்டறிந்தனர். அத்துடன் யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் வர்த்தகத்துறையினரையும் தூதுக்குழுவினர் சந்தித்துப் பேசியுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

அமெரிக்காவிலுள்ள இலங்கை தூதரகத்தின் ஏற்பாட்டில் இலங்கை வருகைதந்துள்ள இந்த வர்த்தக முதலீட்டுத் தூதுக்குழுவி னர் சுமார் 5 நாட்கள் தங்கியிருக் கவுள்ளதுடன் இரு நாட்டு அரசாங் கங்களுக்கும் இடையில் கைச்சாத் திடப்பட்ட அமெரிக்க-இலங்கை வர்த்தக் மற்றும் முதலீட்டுதிட்ட ஒப்பந்தத்திற்கு அமைய தனியார் வர்த் தகத் துறையினரின் வருகை இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். வடக்கில் முதலீட்டுத் துறையை மேம்படுத்தும் பொருட்டு அரசாங்கம் பல்வேறு திட்டங்களையும் செயற்பாடுகளையும் முன்னெடுத்து வரும் நிலையில் தற்பொழுது அதிகமான உள்நாட்டு வெளிநாட்டு நிறுவனங்கள் முதலீடு செய்து தமது பணிகளை ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# சஷீந்திரவின் செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டாம்

## ஜனாதிபதி ஊடகங்களுக்கு உத்தரவு

(கொழும்பு)

ஊவா மாகாண முதலமைச்சரும், ஜனாதிபதியின் மூத்த சகோதரரும் பாராளுமன்றத்தின் சபாநாயகருமான சமல் ராஜபக்ஷவின் மூத்த புதல்வருமான சஷீந்திர ராஜபக்ஷ தொடர்பான செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டாம் என்று ஜனாதிபதி அரச ஊடகங்களுக்கு உத்தரவிட்டுள்ளதாக தகவல்கள் கசிந்துள்ளன.

தற்போதைய நிலையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆகியோருக்கே ஒழுங்கு முறையில் முன்னுரிமையளித்து செய்திகளை வெளியிட வேண்டுமென்றும் அதன் பின்னர் இடமிருந்தால் மாத்திரமே பிரதமர் மற்றும் அமைச்சர்களின் செய்திகளுக்கு இடமளிக்க வேண்டும் என்றும் ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல அண்மையில் அரச ஊடகங்களின் பிரதானிகளுக்கு ஆலோசனை வழங்கியிருந்தார்.

இந் நிலையிலேயே ஜனாதிபதி தனிப்பட்ட முறையில் மேற்கண்ட உத்தரவை பிறப்பித்துள்ளார். நாமலை விட சஷீந்திர அரசியலில் முன்னுக்கு வந்துவிடக் கூடாது என்ற ஜனாதிபதியின் அச்சமே அதற்கான காரணம் என ஊகிக்கப்படுகிறது.

ஏனெனில் பிரதமர் காலம் தொட்டு அண்மைக்காலம் வரை ஜனாதிபதியின் அந்தரங்க செயலாளராக இருந்தவர் என்ற வகையில் சஷீந்திர ராஜபக்ஷ நாமலைவிட அரசியல் நெளிவு சுழிவுகளில் கைதேர்ந்தவர் என்பது அரசாங்க தரப்பில் ஏற்றுக் கொள்ளப்படும் உண்மையாகும். (ச-5)


**தனியார் நிறுவனங்களை பதிவு செய்தல்**

பெறுமதி மிக்க உங்கள் வியாபார நிறுவனத்துக்கான கௌரவத்தையும் நம்பிக்கையையும் பெற்றுக் கொள்வதற்காக உங்கள் தனியார் நிறுவனங்களை இலகுவான முறையில் பதிவு செய்து கொள்ள நாடுங்கள்,

VTL MANAGMENT
Daanston House
Colombo -03
T.P. 072 9994777

(சி/1384)








**விற்பனைக்கு**

வடமராட்சி பருத்தித்துறை வீதி வல்வெட்டித்துறை ஊறணி ஆஸ்பத்திரிக்கும் பொலிகண்டிச் சந்திக்கும் இடையில் பிரதான வீதியில் அமைந்துள்ள 3 1/2 பரப்புக் காணியும் வீடும் உடனடியாக விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :
T.P : 07750997845

(2667)



**திருத்தி வாசிக்கவும்**

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் 06.10.2010 அன்று பட்டம் பெற்ற எமது சமுர்த்தி முகாமையாளர்களை பாராட்டிவாழ்த்துகின்றோம் என்ற விளம்பரத்தில் சின்னராசா உதயமதி என தவறாக பிரசுரிக்கப்பட்டுள்ளது. அதனை சிவப்பிரகாசம் உதயமதி (MA) என திருத்தி வாசிக்கவும்.

சக முகாமையாளர்களும்,
சமுர்த்தி உத்தியோகத்தர்களும்
பிரதேச செயலகம்,
பருத்தித்துறை. (C-1403)



**காரைநகரில் தோட்டம் விற்பனைக்கு**

காரைநகர் ஆயிலி புகலி சுப்பிரமணிய ஆலய வீதியில் கட்டுக் கிணற்றுடன் கூடிய 10 பரப்புத் தென்னந்தோட்டம் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:- 077 9064963

(சி/1392)


## மரண அறிவித்தல்

### கந்தையா குணநாதன்

(துணவி சாத்திரியார்)

கந்தையா குணநாதன் அவர்கள் 12.10.2010 அன்று காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்றவர்களான கந்தையா அன்னலட்சுமி தம்பதிகளின் புதல்வனும் லீலாவதியின் அன்புக் கணவரும் சிவனேசன் (S.S) எஸ்.எஸ் அவர்களின் அன்புத் தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் மூளாயில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வழுக்கையாறு மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் : கு.லீலாவதி (மனைவி)
கு.சிவனேசன் (SS) மகன்

(2672)

# இன்று ஒரு தகவல்

## குழந்தையின் சுபாவம்

ஒருத்தர் தன்னுடைய சிநேகிதரை கடைத் தெருவில் சந்தித்த போது குடும்ப விடயங்களைப் பற்றி விசாரித்துக் கொண்டிருந்தார். கடைசியாக " கடைக்குட்டிப் பையன் எப்படி இருக்கிறான்?" என்று கேட்டார்.

"அவன் தான் சேர் எனக்குப் பெரிய தலைவலி. சரியான குழப்படி. ஏதாவது குறும்பு செய்து கொண்டே இருக்கிறான். என்ன செய்வதென்றே தெரியவில்லை" என்று இவர் புலம்ப ஆரம்பித்தார்.

பொதுவாக குழந்தைகளுக்கு நல்ல பழக்க வழக்கங்களைக் கற்றுக் கொடுப்பது பெற்றோரின் கையில் தான் இருக்கிறது.

சின்ன வயதில் அவனை உதைக்கச் சொல்லி வேடிக்கை பார்ப்பது. அவன் பெரியவனாகி உதைக்க வந்தான் என்றால் வருத்தப்படுவது. இதற்கு யார் சேர் பொறுப்பு?

சிறியவர்களுக்கு திட்டுவது எப்படி என்று சொல்லிக் கொடுத்து... அவர்கள் திட்டும் போது அதை ரசிக்கும் பெரியவர்கள் இப்பொழுதும் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். அந்த சின்னப் பையன் பெரியவனானதும் அதே வார்த்தையை சொல்லி அப்பாவைத் திட்டினால்.. பெரியவர்களை மதிக்கத் தெரியவில்லை என்று சொல்வது. இதுதான் நம்முடைய வழக்கம். சரி, இப்ப விடயத்துக்கு வருவோம். கொஞ்சம் நிதானமாக யோசித்துப் பாருங்கள்.

குழந்தைகளுடைய உடம்பு நன்றாக இருக்க வேண்டும் என்பதில் நாம் அதிக அக்கறை செலுத்துகிறோம். மனமும் நன்றாக இருக்க வேண்டும் என்று யோசித்து அற்குத் தகுந்தாற் போல் நாம் எதுவும் செய்வதில்லை.

இப்ப உள்ள பல குடும்பப் பிரச்சினைகளுக்கு இது ஒரு முக்கியமான காரணம். குழந்தைகளுக்கு பால் கொடுக்கிறோம். பழம் கொடுக்கிறோம். பழக்க வழக்கத்தைப் பற்றி யார் யோசிக்கிறார்கள்?

ஒரு குழந்தைக்கு நல்ல பழக்க வழக்கத்தைக் கற்றுக் கொடுப்பது எப்படி? அது ஒன்றும் பெரிய விடயமல்ல. கொஞ்சம் கவனம் செலுத் வேண்டும் அவ்வளவுதான். ஒரு குழந்தை நல்லவிதமாக நடந்து கொண்டால் அதைப் பாராட்ட வேண்டும். சிரித்த முகத்துடன் அதைத் தட்டிக் கொடுக்க வேண்டும். அவன் மிகவும் நல்ல பையன் என்று நீங்கள் நினைப்பதை அவன் புரிந்து கொள்ளும்படி ஏதாவது செய்ய வேண்டும். ஆனால், நாம் எதிர்மறையாக நடந்து கொள்கிறோம். ஒரு குழந்தை நல்ல விதமாக நடந்து கொண்டால் அதைப் பாராட்டுவதில்லை. ஆனால், ஏதாவது தவறு செய்தால் மட்டும் உடனே கண்டிக்கின்றோம்.

பையனைக் கடைத் தெருவுக்கு அழைத்துக் கொண்டு போகிறீர்கள். அவன் ரொம்ப சாதுவாக நடந்து வந்து கொண்டிருக்கிறான். அப்பொழுது நீங்கள் ஒன்றும் சொல்வதில்லை. அவன் ஏதாவது குதித்துக் கொண்டு அங்குமிங்கும் ஓடினால்... அப்பொழுது மட்டும் திட்ட ஆரம்பிக்கிறீர்கள். இது சரியா? சாதுவாக, நல்ல பிள்ளையாக நடந்து வந்து கொண்டிருந்தானே அப்பொழுதே அதைப் பாராட்டி ஒருவார்த்தை சொன்னால், அது அவன் மனதுக்குள் ஒரு பெரிய மாறுதலை ஏற்படுத்தியிருக்கும். நல்ல சுவாபம் அவனுக்குத் தானாக வந்து விடும்.

ஒழுங்காக தரையில் உட்கார்ந்து சாதம் தரையில் சிந்தாமல் சாப்பிடும் குழந்தையை பாராட்ட மாட்டீர்கள்.

ஆனால், சாதத்தை தரையில் கண்டால் மட்டும் சத்தம் போட ஆரம்பிப்பீர்கள். அப்படிச் சத்தம் போடுவதை விட சும்மா இருந்து விடுவது நல்லது.

குழந்தைகளின் நல்ல சுபாவத்தை ஊக்கப்படுத்துவதற்கு, அது சம்பந்தமான நிபுணர்கள் சில யோசனைகளைச் சொல்லியிருக்கிறார்கள்.

குழந்தைகளிடம் நல்லவிதமான பழக்கம் வைத்துக் கொள்ளுங்கள். அவர்களது லெவலுக்கு (Level) இறங்கி பழகுங்கள். நீங்கள் பெரிய உத்தியோகத்தராக இருக்கலாம். அதற்காக உங்கள் குழந்தைகளிடம் அதிகார தோரணையுடன் பழக வேண்டாம். அலுவலகத்தை மறந்து விட்டு முடிந்தால் மண்டியிட்டு நடந்து குழந்தைக்கு வேடிக்கை காட்டுங்கள். கதை சொன்னால் குழந்தைகளுக்கு மிகவும் பிடிக்கும். நீங்கள் குழந்தையாக இருந்தபோது நடந்த வேடிக்கையான சம்பவங்களை சொல்லுங்கள்.

ஆனால், இன்னொரு விடயம். குழந்தைகளை ஏமாற்றக் கூடாது. அவர்களிடம் கொடுத்த வாக்குறுதியை காப்பாற்ற வேண்டும். வாங்கித் தருகிறேன் என்று சொல்லியிருந்தால் வாங்கிக் கொடுத்து விட வேண்டும்.

டாக்டர் ஊசி போட வருகிறார். பையன் பயப்படுகிறான். "கொஞ்சம் கூட வலிக்காது" என்று அவனிடம் பொய் சொல்லாதீர்கள் "இலேசாக வலிக்கும். அது ஒன்றும் பெரிய கஷ்டமாக இருக்காது" என்று உண்மையைச் சொல்ல வேண்டும்.

அப்பொழுதான் அவனுக்கு உங்கள் மீது ஒரு நம்பிக்கை வரும். இல்லையென்றால்... பின்னர் வேறொரு சந்தர்ப்பத்தில் நீங்கள் உண்மையைச் சொன்னாலும் அவன் நம்பமாட்டான்.

கொஞ்சம் வளர்ந்த குழந்தையாக இருந்தால் அவனிடம் வாக்குவாதம் செய்து கொண்டிருப்பதை விட ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டிருப்பது நல்லது.

எல்லாப் பாடத்திலும் 50 வீதத்துக்கு மேல் புள்ளிகள் வாங்கினால் உனக்கு ஒரு பரிசு தருவேன் என்று சொல்லி விடலாம். அதை விட்டு விட்டு அவனிடம் தினமும் படி , படி என்று சொல்லி அறுத்துக் கொண்டிருக்கக் கூடாது.

இவ்வளவும் நிபுணர்கள் சொல்லியிருக்கிற நுணுக்கங்கள். ஒரு அம்மா , பிள்ளையைக் கூப்பிட்டார்.

"என்னம்மா?" என்று கேட்டுக் கொண்டே வந்து நின்றான். அம்மா அவனிடம் ஒரு ஒப்பந்தம் போட்டார்.

"இதோ பாரப்பா. நான் என்ன சொன்னாலும் நீ எதிர்த்துப் பேசக் கூடாது. 'ஆமாம், ஆமாம்' என்றே சொல்ல வேண்டும். 'சரி, சரி' என்று சொல்லி தலையை ஆட்ட வேண்டும். இதைத்தவிர வேறு வார்த்தையே பேசக் கூடாது. ஒரு நாள் முழுவதும் அப்படி இருந்து விட்டால் எத்தனை தடவை எனக்கு நீ 'ஆமாம்' போட்டிருக்கிறாயோ, அத்தனை ரூபா உனக்குப் பரிசு கொடுப்பேன். 20 ஆமாம் போட்டால் 20 பரிசு. என்ன சொல்கிறாய்?" என்றார். அதற்கு அந்தப் பையன்,

"அட போம்மா. நீ எப்ப பந்தயம் கட்டினாலும் அப்பா ஜெயிக்கிற மாதிரியான பந்தயமாகவே கட்டுகிறாய்" என்றான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# பாடசாலை மாணவர்களுக்கான சுவரொட்டி சித்திரப் போட்டி

வட மாகாணக் கல்விப் பணிப்பாளரின் அறிவுத்தலுக்கமைவாக "சுகமாக வாழ்வதற்காய் சூழலைப் பேணுவோம்" என்ற தலைப்பில் சுவரொட்டிப் போட்டி பாடசாலைகளில் நடாத்தப்படவுள்ளது.

இப்போட்டியானது எமக்கு சவாலாகக் காணப்படும் நோய் தொடர்பாகவும் அதில் இருந்து நம்மையும் சூழலையும் எவ்வாறு பாதுகாத்து கொள்ள வேண்டுமென்பதை மையப்படுத்தி அமைதல் வேண்டும்.

மேலும் இதற்கான விதிமுறைகளாவன ;

சுவரொட்டி சித்திரங்கள் 24" X 24" என்ற அளவினைக் கொண்டதாளில் பல வர்ணங்கள் அமையப் பெற்றதாகவும் சித்திரத்தின் பின்புறத்தில் மாணவர் பெயர், பாடசாலை மற்றும் தரம் என்பன குறிப்பிடப்பட்டு அதிபர் உறுதிப்படுத்தி இருத்தல் வேண்டும்.

இப்போட்டியானது வகுப்பு ரீதியில் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு நடாத்தப்படவுள்ளது. இதற்கமைய தரம் 8,9,10,11 கீழ்ப்பிரிவாகவும் தரம் 12,13 மேற்பிரிவாகவும் நடாத்தப்படவுள்ளது.

அத்தடன் வலய ரீதியாக முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கு ரூபா 5 ஆயிரம், ரூபா 3 ஆயிரம், ரூபா 2 ஆயிரம் என்ற அடிப்படையில் பணப்பரிசுகளும் முதல் 10 இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்களும் வெற்றியீட்டிய மாணவர்களின் பாடசாலைகளுக்கு பரிசுகளும் வழங்கப்படும்.

அத்துடன் மாகாண மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களுக்கு ரூபா 15 ஆயிரம், ரூபா 10 ஆயிரம், ரூபா 5 ஆயிரம் என்ற அடிப்படையில் பணப்பரிசும் முதல் பத்து இடங்களுக்கு சான்றிதழ்களும் அத்துடன் வெற்றியீட்டிய பாடசாலைகளுக்கும் பரிசுகள் வழங்கப்படும்.

இதுதொடர்பாக அதிபர்கள் , பாடசாலை மாணவர்களிடமிருந்து ஆக்கங்களைப் பெற்றுச் சிறந்த ஆக்கங்களைத் தெரிவு செய்து ஒவ்வொரு பிரிவிலிருந்தும் முதல் மூன்று ஆக்கங்களை இன்று புதன்கிழமை வலயக் கல்வி அலுவலக கல்வி அபிவிருத்திப் பிரிவில் ஒப்படைக்குமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2-19)

# இராசி பலன்

*13.10.2010*
*(புரட்டாதி 27, புதன்கிழமை)*
*சஷ்டி மாலை 6.04 மணிவரை*
*மூலம் பின்னிரவு 4.38 மணிவரை*
*இராகுகாலம் 12.02-1.32 மணிவரை*
*சுபநேரம் 4.32- 6.02 மணிவரை*
*சஷ்டி விரதம்.*

**மேடம்** நல்லவர்களை சந்தித்து நலம் காணும் நாள், பூர்வீக சொத்துக்களில் ஏற்பட்ட வில்லங்கங்கள் விலகும், உடல் நலம் சீராகி உற்சாகப்படுத்தும், விருந்து விழாக்களில் கலந்து கொண்டு மகிழ்வீர்கள்.

**இடபம்** ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், குடும்பப்பொறுப்புகள் அதிகரிக்கும், உற்றார், உறவினருடன் பேசும் போது கவனம் தேவை, வழிபாட்டின் மூலம் அமைதிகாண வேண்டிய நாள்.

**மிதுனம்** சந்தித்தவர்களால் சந்தோஷம் கிடைக்கும் நாள், இல்லத்தில் நல்ல காரியமொன்று நடைபெறுவதற்கான அறிகுறி தோன்றும், புதிய பொருட்களை வாங்கி மிகிழும் வாய்ப்புண்டு.

**கடகம்** உறவினர்கள் சந்திப்பால் உள்ளம் மகிழும் நாள், அயலவருடன் ஏற்பட்ட தகராறுகள் குறையும், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், உடல் நலம் சீராகி உற்சாகப்படும் நாள்.

**சிங்கம்** பிள்ளைகள் வழியில் நல்ல செய்திகளை கேட்கலாம், அரைகுறையாக இருந்த பணியை மீண்டும் தொடங்குவீர்கள், வாழ்க்கைத் தரம் உயர வழிவகைசெய்து கொள்ளும் நாள்.

**கன்னி** காலை நேரத்திலேயே காதினிக்கும் செய்தி வந்து சேரும் நாள், பெற்றோர் மீது பிரியம் கூடும், வாகன யோகம் எற்படும், மங்கல நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**துலாம்** சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், வீட்டுத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள், சுபநிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு கிட்டும், உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும்.

**விருச்சிகம்** சுபகாரியத்துக்கு பிள்ளையார் சுழி போடும் நாள், வருமானம் திருப்தி தரும், வாக்கு மேன்மையுண்டு, சொத்துக்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், சுபநிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**தனுசு** கனிவான பேச்சுக்களால் காரியம் சாதித்துக் கொள்ள வேண்டிய நாள், உடல் நலம் சீராகி உற்சாகப்படுத்தும், அலைச்சல் சற்று அதிகரிக்கும், தொழிலில் கூட்டாளிகளின் ஒத்துழைப்பு ஆச்சரியப்பட வைக்கும்.

**மகரம்** பயணத்தால் பலன் கிடைக்கும், புதிய மாற்றங்கள் ஏற்படலாம், உறவினரின் சந்திப்பால் உள்ளம் மகிழும் சம்பவமொன்று நடைபெறும், நித்திரைக் குறைவுண்டு.

**கும்பம்** தடைப்பட்ட காரியம் கைகூடும், பணத் தேவைகள் பூர்த்தியாகும் நாள், நண்பர்களின் ஒத்துழைப்போடு நல்ல காரியம் ஒன்றைச் செய்து முடிப்பீர்கள்,விழாக்களில் கலந்து கொண்டு மகிழும் வாய்ப்புண்டு.

**மீனம்** முத்தான வாய்ப்புகள் இல்லம் தேடி வரும் நாள்,சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் மேலோங்கும், தொலைபேசித் தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும்.

**வளவன்**

# உள்ளூராட்சி வார நிறைவு நாள் நிகழ்வுகள்

(கொழும்பு)

உள்ளூராட்சி வார நிறைவு விழாவை முன்னிட்ட நிகழ்வுகள் இன்று காலை 9 மணிக்கு திருநெல்வேலி பழங்கிணற்றுபிள்ளையார்கோயில் மண்டபத்தில் நல்லூர் பிரதேச சபை செயலாளர் மெ. சாந்தசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் எவ். ஜோன்சன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக யாழ். உள்ளூராட்சி திணைக்கள் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி ம.வசந்தகுமார் கௌரவ விருந்தினராக நல்லூர் பிர்தேசசபை சனசமூக நிலைய சமாசத் தலைவர் இ. சத்தியாணந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஸ்ரீ-2)

# எதுவித முன்னறிவித்தலுமின்றி துண்டிக்கப்படும் மின்சாரம்

## மக்கள் விசனம்

(ஏழாலை)

ஏழாலை பகுதியில் எதுவித முன் அறிவித்தலுமின்றி மின்வெட்டு நடைபெறுவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இப்பகுதியில் அதிகாலை 6.45 மணி தொடக்கம் 7.45 மணிவரையும் காலையில் 9 மணி தொடக்கம் 11 மணிவரையும் பிற்பகல் 2 மணி தொடக்கம் மாலை 4 மணி வரையும் தினசரி மின்வெட்டு நடைபெறுவதாக கூறப்படுகிறது.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதில் கூடிய கவனம் செலுத்தி உரிய நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர் (ஸ்ரீ-2)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 90 | 80 |
| உருளைக்கிழங்கு | 90 | 90 | 80 |
| பச்சைமிளகாய் | 80 | 80 | 40 |
| தக்காளி | 80 | 100 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 60 | 50 |
| கோவா | 60 | 70 | 60 |
| கரட் | 60 | 100 | 50 |
| பூசணி | 40 | 50 | 30 |
| புடோல் | 30 | 50 | 30 |
| வாழைக்காய் | 40 | 50 | 40 |
| சின்ன வெங்காயம் | 80 | 80 | 80 |
| பெரிய வெங்காயம் | 80 | 90 | 70 |
| பாகற்காய் | 160 | 140 | 100 |
| வெண்டிக்காய் | 60 | 80 | 55 |
| கருணைக் கிழங்கு | 60 | 80 | 60 |
| பயற்றங்காய் | 100 | 110 | 90 |
| லீக்ஸ் | 100 | 120 | 100 |
| பீற்றூட் | 30 | 50 | 30 |
| கறிமிளகாய் | 80 | 90 | 70 |
| முருங்கைக்காய் | 130 | 120 | 130 |
| போஞ்சி | 150 | 150 | 100 |
| கத்தரிதம்புள்ள | 60 | 80 | 40 |
| கீரை - 1 பிடி | 20 | 25 | 20 |
| தேசிக்காய் | 100 | 100 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 40-45 | 30 | 40 |

# ஐப்பசி மாத ராசி பலன்கள்

## 18.10.2010 முதல் 16.11.2010 வரை




அசுவதி, பரணி, கார்த்திகை 1-ம் பாதம் வரை

(பெயரின் முதல் எழுத்துக்கள்: சு, சே, சோ, ல, லி, லு, லே, லோ, அ உள்ளவர்களுக்கும்)

**சந்தித்தவர்களால் சந்தோஷம் கிடைக்கும்!**

எந்தக் காரியமாக இருந்தாலும், நாளை பார்ப்போம் என்று சொல்லாமல் உடனடியாக செய்ய வேண்டுமென்று சொல்லும் மேஷ ராசி நேயர்களே!

நண்பர்களிடமும், உறவினர்களிடமும் வளைந்து கொடுத்து போகும் தன்மை உங்களிடம் உண்டு. வாய்ப்புகள் வரும் பொழுது உபயோகப்படுத்திக் கொள்ள வேண்டுமென்று எடுத்துரைப்பீர்கள்.

உங்கள் தன்னம்பிக்கையை யாராலும் வெல்ல முடியாது. நாலு பேர் நம்மைப் பற்றி என்ன நினைப்பார்கள் என்று கவலைப் படாமல் செயல்படுவீர்கள். அதனால்தான் வெற்றி வாய்ப்புகளை நீங்கள் வீடு தேடி வர வழைத்துக் கொள்ள இயலுகிறது.

ஐப்பசி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாத தொடக்கத்திலேயே ராசிநாதன் செவ்வாய் தனாதிபதி சுக்ரனோடும், சகாய ஸ்தானாதிபதி புதனோடும், பஞ்சமாதிபதி சூரியனோடும் இணைந்து செயல்படுவதால், வளர்ச்சி கூடும். வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள்.

கூட்டு கிரக யோக அடிப்படையில் பார்க்கும் பொழுது, நல்ல காரியங்கள் பலவும் உங்கள் இல்லத்தில் இம்மாதம் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. தனவரவு தாராளமாக வந்து சேரும். பிள்ளைகள் வழியில் பெருமைக்குரிய செயல்கள் நடைபெறுவது கண்டு ஆச்சரியப்படுவீர்கள்.

**விருச்சிக செவ்வாயின் சஞ்சாரம்!**

அக்டோபர் 20-ந் திகதி ராசிநாதன் செவ்வாய் விருச்சிக ராசியில் சஞ்சரிக்கப்போகிறார். அஷ்டமத்தில் செவ்வாய் சஞ்சரிக்கப் போவதால், ஆரோக்கியத்தில் சில அச்சுறுத்தல்கள் ஏற்பட்டு அகலும். நோயின் அறிகுறி தெரிகிற பொழுதே, மருத்துவ ஆலோசனைகளைப் பெற்றால், ஆரோக்கியத்தை சீராக்கி கொள்ள இயலும்.

அங்காரக வழிபாட்டை முறையாகச் செய்வதன் மூலமும், உங்கள் சுய ஜாதகத்தில் அங்காரகன் இருக்கும் நிலையறிந்தும், அதற்குரிய சிறப்பு வழிபாட்டை மேற்கொள்வதன் மூலமும் மன நிம்மதி பெற முடியும்.

**மறைந்த புதனால் நிறைந்த தனலாபம்!**

ஒக்டோபர் 31-ந் திகதி அஷ்டமத்தில் புதனும் சஞ்சரிக்கப்போகிறார். இதன் விளைவாக, பொருளாதார நிலை உயரும். புதிய திருப்பங்கள் ஏற்படும். பழுதான வாகனங்களை புதுப்பிப்பீர்கள்.

வீட்டு பராமரிப்புச் செலவிலும் அக்கறை காட்டுவீர்கள். சகோதர வழி ஒற்றுமை பலப்படும். கொடுக்கல் - வாங்கல்களை ஒழுங்கு செய்து கொள்வீர்கள்.

**கும்ப குருவின் ஆதிக்கம்!**

இதுவரை மீன ராசியில் வக்ர கதியில் இயங்கிய குரு நவம்பர் 7-ந் திகதி மீண்டும் கும்ப ராசிக்கு வருகிறார். இந்த கும்ப குருவின் ஆதிக்கம் உங்களுக்கு எண்ணற்ற வழிகளில் இன்பங்களை வழங்கப்போகிறது. அதன் பார்வைக்கு 3, 5, 7 ஆகிய இடங்களில் பதிவதால் திருமண வாய்ப்புகள் முதல் தித்திக்கும் செய்திகள் அனைத்தும் வந்து சேரும்.

வக்ர குருவின ஆதிக்கததிலுள்ள வளர்ச்சியைக் காண வியாழன் தோறும் குருவை வழிபட்டு வருவது நல்லது. குருவருளும் திருவருளும் உங்களுக்கு குடும்ப முன்னேற்றத்தை வழங்கும்.

பணத்தேவைகளைப் பூர்த்தி செய்யும் நாட்கள்

ஒக்டோபர் : 18, 19, 25, 26, 30, 31.

நவம்பர் : 10, 11, 12, 15, 16.

மகிழ்ச்சி தரும் வர்ணம் : மஞ்சள்

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

பெண்களுக்கு இம்மாதம் மகிழ்ச்சி தரும் மாதமாக அமையும். குடும்ப உறுப்பினர்கள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். பணப்புழக்கம் சரளமாக இருக்கும்.

ஒக்டோபர் கடைசியில் ஆரோக்கியத்தில் கூடுதல் அக்கறை செலுத்துவது நல்லது. வக்ர குருவின் ஆதிக்கம் லாபஸ்தானத்திற்கு வருவ தால், வரவு வந்த நிமிடமே செலவாகலாம். எனவே, சுப விரயங்களை மேற்கொள்வது நல்லது.

பழைய ஆபரணங்களைக் கொடுத்து விட்டு புதிய ஆபரணங்கள் வாங்குவதில் ஆர் வம் காட்டலாம். அம்பிகை வழிபாட்டை மேற்கொண்டால் அனுகூலங்கள் தொடரும்.




கார்த்திகை 2, 3, 4 பாதங்கள், ரோகிணி, மிருகசீர்ஷம் 1,2 பாதங்கள் வரை

(பெயரின் முதல் எழுத்துக்கள்: இ, உ, ஏ, ஓ, வ, வி, வு, வே, வோ உள்ளவர்களுக்கும்)

**நல்ல மாற்றங்கள் இல்லம் தேடி வரும்!**

விடா முயற்சியால் வெற்றிப்படிக்கட்டின் விளிம்பில் ஏறும் ரிஷப ராசி நேயர்களே!

சுக்ரனின் ஆதிக்கத்தில் நீங்கள் பிறந்திருப்பதால் சுகபோகங்களை அதிகம் அனுபவிக்க வேண்டுமென்ற எண்ணம் உங்களுக்கு இருக்கும். எதிரியை எளிதில் வசப்படுத்துவீர்கள். வாழ்க்கை வாழ்வதற்கே என்பதை நீங்கள் கடைபிடிப்பதோடு, மற்றவர்களுக்கும் எடுத்துரைப்பீர்கள். வரவுகளையும், உறவுகளையும் பலப்படுத்துவதே உங்கள் குறிக்கோளாகும்.

ஐப்பசி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, ராசிநாதன் சுக்ரன் வக்ரம் பெற்று சஞ்சரிப்பது ஒரு வகைக்கு யோகம் தான். 6, 8, 12-க்கு அதிபதிகள் 6, 8, 12-ல் ஒன்று கூடும் பொழுது, விபரீத ராஜயோகம் செயல்படுகிறது. அந்த அடிப்படையில் பார்க்கும் போது சுக்ரனும், செவ்வாயும் ஆறில் இணைந்து மாதம் தொடங்குவதால், திட்டமிடாது செய்யும் காரியங்கள் வெற்றி பெறும். தித்திக்கும் செய்திகள் பலவும் வந்து சேரும்.

அஷ்டமத்தில் ராகு இருப்பது அவ்வளவு நல்லதல்ல, இரண்டாம் இடத்திலும் கேது சஞ்சரிக்கிறார். எனவே கொடுத்த வாக்கை காப்பாற்ற இயலுமா என்பது சந்தேகம் தான். கொள்கைப் பிடிப்போடு செயல்படவும் இயலாத வண்ணம் பாம்புக் கிரகங்களின் ஆதிக்கம் இருப்பதால் சர்ப்ப சாந்தி செய்து கொள்வது நல்லது.

**வரன்கள் வாயில் தேடி வரும் நேரம்!**

ஒக்டோபர் 20-ந் திகதி சப்தமாதிபதி செவ்வாய் சப்தம் ஸ்தானத்திலேயே சஞ்சரிக்கப் போகிறார். விரயாதிபதியாகவும் செவ்வாய் விளங்குவதால் வீட்டில் வரன் தேடும் நிலையில் இருப்பவர்களுக்கு வாயில் தேடி வரன்கள் வந்து சேரும். இடம், பூமி வாங்கும் எண்ணம் ஈடேறும். உடன் பிறப்புகள் வழியில் பாகப்பிரிவினைகள் ஏற்படவில்லையே என்ற கவலை அகலும். நண்பர்கள் நல்ல தகவல்களைக் கொண்டு வந்து சேர்ப்பர். பஞ்சம ஸ்தானத்தில் சனிபலம் பெறுவதால் பிள்ளைகளின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வீர்கள். மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறி உங்கள் கூட்டு முயற்சிக்கு ஒத்துழைப்புச் செய்வர். பெண் தெய்வ வழிபாடு பெருமை சேர்க்கும்.

**வரவு திருப்தி தரும் நேரம்!**

ஒக்டோபர் 31-ந் திகதி தனாதிபதியும், பஞ்சமாதிபதியுமான புதன் சப்தமஸ்தானத்தில் சஞ்சரித்து உங்கள் ராசியைப் பார்க்கப் போகிறார். இதன் விளைவாகப் பொருளாதார நிலை உயரும். புதிய, புதிய திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்துவீர்கள். வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள். மாமன், மைத்துனர் வழியில் மங்கல நிகழ்ச்சிகள் நடைபெறுவதோடு, அவர்களின் ஒத்துழைப்போடு தொழில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கும்ப குருவின் ஆதிக்கம்!**

இதுவரை மீன ராசியில் வக்ர கதியில் இயங்கிய குரு நவம்பர் 7-ந் திகதி மீண்டும் கும்பராசிக்கு வருகிறார். இந்த கும்ப குருவின் ஆதிக்கம் உங்களுக்கு எண்ணற்ற மாற்றங்களை வழங்கப் போகிறது. அதன் பார்வை பலத்தால் நல்ல பலன்கள் ஏற்பட்டாலும், பத்தாமிடத்தில் குரு சஞ்சரிப்பதால், பதவி மாற்றம், இடமாற்றம், ஊர்மாற்றம் கூட ஒரு சிலருக்கு ஏற்படலாம்.

தெசாபுத்தியின் பல மறிந்து தெய்வ வழிபாடுகளை மேற்கொண்டால் வரும் மாற்றங்களை நல்ல மாற்றங்களாக மாற்றிக் கொள்ள இயலும்.

இம்மாதம் இனிய மாதமாக மலர பிரதோஷம் தோறும் நந்தீஸ்வரர் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். நந்தி வழிபாடு நலம் சேர்க்கும்.

பணத்தேவைகளைப் பூர்த்தி செய்யும் நாட்கள்

ஒக்டோபர் : 20, 21, 22, 27, 28.



நவம்பர் : 1, 2, 13, 14.





மகிழ்ச்சி தரும் வர்ணம் : பிரவுன்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் மறக்க முடியாத மாதமாக உங்களுக்கு அமையப் போகிறது. கணவன் -மனைவிக்குள் உள்ள கருத்து வேறுபாடுகள் மாறும். பக்கத்து வீட்டாருடன் ஏற்பட்ட பகையும் மாறும். பிள்ளைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் அளவிற்குப் பொருளாதாரம் உயரும்.

நவம்பர் முதல் வாரத்தில் பதவி மாற்றம், மற்றும் வீடு மாற்றங்கள் உரு வாகலாம். ஒரு சிலருக்குப் பணி நிரந்தரம் கிட்டும். இம்மாதம் சுக்ரன் வக்ரம் பெறுவதால் ஆரோக்கியத்தில் பாதிப்பு ஏற்படாதிருக்க ஆரம்பத்திலேயே கவனித்துக் கொள்வது நல்லது.

தேசியமட்ட விளையாட்டுப் போட்டியில் வெற்றியீட்டிய யாழ். மாவட்ட மாணவர்கள் நேற்றுக் கௌரவிக்கப்பட்டனர். விளையாட்டு வீரர்களுக்கு வட மாகாண ஆளுநர் பரிசில்களை வழங்குவதையும், வட மாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் உரையாற்றுவதையும் விளையாட்டு வீரர்கள், ஆளுநர் மற்றும் கல்வி அமைச் சின் செயலாளர் எல்.இளங்கோவன் உள்ளிட்ட அதிகாரிகளுடன் காணப்படுவதையும் படங்களில் காணலாம். படங்கள் :- என்.குமார்

# சரத்பொன்சேகாவின் விடுதலை கோரி நவம்பர் 8 இல் பாரிய ஆர்ப்பாட்டம்

## ஐ.தே.க.அறிவிப்பு

(கொழும்பு)

வெலிக்கடை சிறைச்சாலையில் சிறை வைக்கப்பட்டுள்ள முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் விடுதலையை வலியுறுத்தி எதிர்வரும் நவம்பர் மாதம் 8 ஆம் திகதி மாவட்ட ரீதியிலான பாரிய ஆர்ப்பாட்டத்தை முன்னெடுக்க ஐ.தே.க. நடவடிக்கை எடுத்துள்ளதாக அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்த நாயக்க தெரிவித்தார்.

20 மாவட்டங்களில் முன்னெடுக்கப்படவுள்ள இந்த ஆர்ப்பாட்டங்களில் எதிர்க்கட்சிகள் அனைத்தும் பங்குபற்றுவதுடன் சரத் பொன்சேகாவின் விடுதலைக்காக தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் குரல் எழுப்பவும் நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் அவர் கூறினார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர்கள் மாநாட்டில் ஊடகவியலாளர் ஒருவர் சரத் பொன் சேகா தொடர்பில் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயேதிஸ்ஸ அத்தநாயக்க இதனைக் கூறினார்.

மேலும் அங்கு உரையாற்றிய அவர்,

சரத் பொன்சேகாவின் விடுதலையை வலியுறுத்தி நேற்று முன்தினம் கொழும்பில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் ஐ.தே.க. கலந்து கொள்ளவில்லை என்ற குற்றச்சாட்டில் எவ்வித உண்மை யும் இல்லை. மக்கள் விடுதலை முன்னணி, ஜனநாய மக்கள் முன்னணி, ஐ.தே.க.உட்பட அனைத்து எதிர்க்கட்சிகளும் இணைந்து சரத் பொன் சேகாவின் விடுதலையை வலியுறுத்தி பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன.

இந்நிலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆர்ப்பாட்டம் குறித்து ஐ.தே.கவுக்கு முன்னரே அறிவிக் கப்பட்டது. ஏற்கனவே கட்சியால் ஏற்பாடு செய்யப்பட்ட சிவில் அமைப்புக்களுக்கிடையிலான கலந்துரையாட லொன்று இடம்பெற்றதால் இவ் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ள முடியவில்லை.

சரத் பொன்சேகாவின் விடுதலையை வலியுறுத்தி சிவில் அமைப்புக்களுடன் இணைந்து பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுக்க ஐ.தே.க. நடவடிக்கை எடுத்துள்ள நிலையில் சர்வதேச மனித உரிமைகள் தினமான டிசம்பர் 10 ஆம் திகதி தேசிய ரீதியில் பாரிய ஆர்ப்பாட்டப் பேரணிகளும் மத வழிபாடுகளும் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றார். (ஸ்ரீ-2)


# ஆஸியின் பல்வேறு பகுதிகளிலும் 723 சிறுவர்கள் தடுத்து வைப்பு

அவுஸ்திரேலியாவின் பல்வேறு பகுதி களில் இலங்கைத் தமிழர்கள் உட்பட 723 சிறுவர்கள் தடுப்பு மையங்களின் மாற்று இடங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக லேட் லைன் இணையத்தளம் தெரிவித்துள்ளது.

கடந்த 2007 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த தொழிலாளர் கட்சி அரசாங்கம் சிறுவர்களை தடுப்பு முகாம்களில் வைப்பதில்லை என்ற உறுதி மொழியை வழங்கியிருந்தது எனினும் மூன்று வருடங்கள் கழிந்த நிலையில் சிறுவர்களை தடுப்பு முகாம்களின் மாற்று இடங்களில் வைத்துள்ளதாக அவுஸ்திரேலிய அரசாங்கம் குறிப்பிட்டுள்ளது.

அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் தகவல் படி அவுஸ்திரேலியாவின் டார்வின், மெல் பேர்ன், பேர்த், போட் ஒ க்ஸ்டா, லியனோரா மற்றும் கிறிஸ்மஸ் தீவிலும் 723 சிறுவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# கொழும்பு மாநகர சபையை அதிகார சபையாக மாற்றமுடியாது



## ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

கொழும்பு மாநகர சபையை அதிகார சபையாக மாற்றும் அரசின் முயற்சிக்கு இடமளிக்கப்போவதில்லையென ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கொட்டாஞ்சேனையில் இடம்பெற்ற கூட்டத்தின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க உள்ளிட்ட பலர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

வறிய மக்கள் வாழும் வீடுகளில் இருந்து அவர்களை விரட்டி விடவே முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக இந்தக் கூட்டத்தில் உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டார்.

கொழும்பு நகரில் வறிய மக்கள் வாழும் வீடுகளில் இரண்டு அல்லது மூன்று பரம்பரையினர் வாழ்ந்துள்ளனர். எனக் குறிப்பிட்ட ரணில் விக்கிரமசிங்க கொழும்பில் குறைந்த வருமானம் பெறுவோர் உழைக்கும் மக்கள் மற்றும் மத்தியதர மக்கள் ஆகியோருக்கு இடமில்லையா என்றும் கேட்டார். (ஸ்ரீ-2)

# நுகர்வோர் சேவை அபராதத்தை அதிகரிக்க நடவடிக்கை

(கொழும்பு)

நுகர்வோர் அதிகார சபை இந்த வருடத்தில் அபராதத் தொகையாக 30 கோடி ரூபாவை ஈட்டிக்கொடுக்க எண்ணியுள்ளதாக தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டில் சபை 2 கோடியே 20 இலட்சம் ரூபாவை அபராதத்தொகையாக ஈட்டிக்கொடுத்ததாகச் சபையின் தலைவர் ரூமிமர்சூக் தெரிவித்துள்ளார்.

விலைப்பட்டியல்கள் காட்சிப்படுத்தாமை பற்றுச்சீட்டு விநியோகிக்காமை போன்ற காரணங்களின் அடிப்படையில் அதிகார சபையினரால் மேற்கொள்ளப்படும் சுற்றி வளைப் புக்களின் போது இந்த அபராதத் தொகையை அறவிட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

சுற்றி வளைப்புக்களை மேற்கொள்வதற்காக நுகர்வோர் சேவை உத்தியோகத்தர்களைப் புதிதாக இணைத்துக் கொள் வதற் கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ள தாக ரூமிமர் சூக் குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)

# புதிதாக பதிவாளர்களை சேவையில் இணைத்துக்கொள்ள நடவடிக்கை

(கொழும்பு)

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் விவாகம்,பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர்களுக்குப் பற்றாக்குறை நிலவுவதாக பதிவாளர் திணைக்களம் தெரிவிக்கிறது.

நாடு முழுவதிலும் 50 பதிவாளர்களுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகப் பதிவாளர் நாயகம் ஈ.எம்.குணசேகர தெரிவித்தார்.

இதன் பிரகாரம் புதிதாகப் பதிவாளர்களை இணைத்துக்கொள்வதற்கு உடனடி நடவடிக்கை கள் முன்னெடுக்கப்படுவதாக அவர் சுட்டிக்காட் டினார்.

முன்னர் நடத்தப்பட்ட போட்டி பரீட்சையில் சித்தியடைந்த 32 பட்டதாரிகளுக்கு நேற்று முன்தினம் நியமனங்கள் வழங்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# மரண அறிவித்தல்கள்



## லயன் சொர்ணலிங்கம் பாலகிருஸ்ணன்

(B.Sc.Dip-In-Ed)

(ஓய்வு பெற்ற பிரதி அதிபர்- மானிப்பாய் இந்துக் கல்லூரி, முன்னாள் ஆசிரியர்- கொக்குவில் இந்துக்கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி, சர்வதேச லயன்ஸ் கழகங்களின் மாவட்டம் 306-B1-முன்னாள் மாவட்ட இணைப்பாளர்)

நவாலியைப்பிறப்பிடமாகவும் லோட்டன் வீதி மானிப்பாயை வதிவிடமாகவும் கொண்ட லயன் சொர்ணலிங்கம் பாலகிருஸ்ணன் அவர்கள் 10.10.2010 அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நவாலி கலையரசு சொர்ணலிங்கம் சிவபாக்கியம் தம்பதியினரின் ஏகபுத்திரனும் லோட்டன் வீதி மானிப்பாயைச் சேர்ந்த சாமுவேல் சின்னத்தம்பர் இராஜரட்ணம் இரத்தினமணி தம்பதியினரின் மருமகனும் அன்னலட்சுமியின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற லலிதா, நடராஜா, Dr.சாரதா ராஜசிம்மன்(லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற ஜெயபாலசிங்கம், காராளசிங்கம், காலஞ்சென்ற நடராஜா(முகாமையாளர், இலங்கை வங்கி), Eng இராஜசிம்மன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் Dr. பாமினி செல்லத்துரை (லண்டன்), Dr.நடராஜா அரவிந்தன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.10.2010) வியாழக்கிழமை மு.ப 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

லோட்டன் வீதி,<br>
மானிப்பாய்.<br>
தொலைபேசி:- 0779027835<br>
0774611224<br>
0773164619

தகவல்:-<br>
(மனைவி)<br>
பா.அன்னலட்சுமி<br>
(தங்கா அக்கா)

(2666)

## ஏபிரகாம் மேரி அன்னம்மா மாசிலாமணி



கரணவாய் கிழக்கு கரவெட்டியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட **ஏபிரகாம் மேரி அன்னம்மா மாசிலாமணி** 11.10.2010 அன்று காலமாகி விட் டார்.

அன்னார் காலஞ்சென்ற ஏபிரகாம் (இ.போ.ச.ஊ) அவர்களின் அன்பு மனைவியும், காலம் சென்ற மரியாம்பிள்ளை ஏசுவேளப்பிள்ளை (சமாதானம்) அருமை மகளும், காலஞ்சென்ற இன்னாசி முத்து அந்தோனிக்கம் அவர்களின் அன்பு மருமகளும், தேவராசா (பிரான்ஸ்), தேவநேசன் (சுவிஸ்), தேவதயாளன் (லண்டன்), தேவபாலன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் பிறினிதா (பிரான்ஸ்), ஜொய்சி (சுவிஸ்), ஜெனனி (லண்டன்), நிசாந்தி (லண்டன்) ஆகியோரின் மாமியாரும் ஜெனோசியா (சுவிஸ்), ஹெய்டன்(லண்டன்), செறினி(லண்டன்) ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஜோர்ஜ் தேவரட்ணத்தின் (லண்டன்) பாசமிகு சகோதரியும் தியாகராணி யின் (லண்டன்) மைத்துணியும் மார்க்பிரகாஷ்சின் (லண்டன்) அருமை மாமியுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் வியாழக்கிழமை (14.10.2010) மு.ப. 9 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இருந்து இரங்கல் திருப்பலிக்காக புனித மாரியன்னை ஆலயத்திற்கு எடுத்து செல்லப்பட்டு பின்பு மரியன்னை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும் .

நுகவில் மாதா கோவிலடி,<br>
கரணவாய் கிழக்கு,<br>
கரவெட்டி.

தகவல்<br>
மருமகள்<br>
ப.பிறிடா


(சி-1401)















தேசிய சேமிப்பு வங்கியின் "நாட்டிற்காக அதிகம் சேமிப்போம்" என்ற தொனிப் பொருளிலான நிகழ்வு அண்மையில் சுன்னாகத்தில் நடைபெற்றது. தேசிய சேமிப்பு வங்கியின் சுன்னாகம் கிளை முகாமையாளர் ந.பகீரதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தேசிய சேமிப்பு வங்கியின் உயர் அதிகாரிகள் அழைத்து வருவதனை முதற்படத்திலும் கொழும்பு வடவலய முகாமையாளர் லால் கருணாதிலக மங்கல விளக்கேற்றி ஆரம்பிப்பதனையும் வடவலய முகாமையாளர் U.L.ரபிக் மகாஜனாக் கல்லூரியில் பாடசாலை வங்கிக் கிளையை நாடாவெட்டி திறந்து வைப்பதனையும்,சேமிப்பினை மேற்கொண்ட மாணவனுக்கு பரிசில்களை வழங்குவதனையும் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் யாழ்.குடாநாட்டில் முதலாவது இடத்தில் சித்தியெய்திய இளவாலை மாணவியை பாராட்டி பரிசு வழங்குவதனையும் சந்தைப்படுத்தல் முகாமையாளர் உபேந்திரா உரையாற்றுவதனையும் படங்களில் காணலாம்.

(படங்கள் :- காரைநகர் செய்தியாளர்)

## வாகனப்பதிவுகளை மேற்கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளைப் பொலிஸ்பிரிவினால் கடந்த 9ஆம் திகதி யாழ்.மல்லாகம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற நடமாடும் சேவையில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத் திற்கமைய தெல்லிப்பளைப் பிரதேச செயலகத்தினூடாக கடந்த வருடங்களில் வாகன உடமை மாற்றம், முகவரி மாற்றம், பதிவுச் சான்றிதழின் பிரதி பெறுதல், சாரதி அனுமதிப்பத்திரம் புதுப்பித்தல், சாரதி அனுமதிப் பத்திரம் இரட்டைப்பிரதி பெறுதல் மற்றும் சாரதி அனுமதிப்பத்திர கணனி அட்டைக்கான விண்ணப்பம் ஆகிய நடவடிக்கைகளுக்காக கொழும்பு மோட்டார் போக்குவரத்துத் திணைக் களத்திற்கு கடந்த டிசம்பர் மாதம் 31ஆம் திகதிக்கு முன் விண்ணப்பித்து இதுவரை கிடைக்கப்பெறாதவர்கள் உரிய ஆவணங்களுடன் அலுவலகத்திற்கு வருகை தந்து மோட்டார் போக்குவரத்துப்பிரிவில் தமது பதிவை எதிர்வரும் 21ஆம் திகதி வியாழக் கிழமைக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு தெல்லிப்பளை பிரதேச செயலக கணக்காளர் செல்வி. ஆர்.கலைச்செல்வி அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## தாயின் கருவில் இருக்கும் 17 வார குழந்தையும் சிரிக்கும்

## ஸ்கான் சோதனையில் நிரூபணம்

லண்டனைச் சேர்ந்த லூயிஸ் என்ற கர்ப்பிணிப்பெண் தனது கணவர் சாம்ஹென்றியுடன் பேராசிரியர் ஸ்டூவர்ட் ஹேம்பெல் என்பவரிடம் ஸ்கான் பரிசோதனைக்கு வந்தார்.

இவர் லண்டனில் உள்ள பிரபல கிங்ஸ் கல்லூரியில் உள்ள செயின் ஜோர்ஜ் வைத்திய சாலையில் மகப்பேறு மருத்துவத் துறையின் தலைவராக பணியாற்றியவர்.

இவர் லூயிஸ் வயிற்றில் வளரும் கருவை ஸ்கான் மூலம் பரிசோதித்தார். அப்போது கருவில் இருந்த குழந்தை அழகாக சிரித்தது. இதைப்பார்த்த டாக்டர் கேம்பொல் ஆச்சரியம் அடைந்தார். ஏனெனில் அது 17 வாரமேயான கருவாகும். உடனே அக்காட்சியை அவர் புகைப்படம் எடுத்தார். இதற்கு முன்பு ஸ்கான் செய்த குழந்தைகளிடமிருந்து அவர் சிரிப்பைப்பார்க்கவில்லை. மாறாக 18 மற்றும் 19 வார குழந்தைகளின் அழுகையுடன் கூடிய முகத்தைப் பார்த்திருக்கிறார்.

இந்த புகைப்படத்தை 3டி மற்றும் 4 டி வசதியுள்ள ஸ்கானர் மூலம் எடுத்து சாதனை





படைத்துள்ளார். தா[illegible] புகைப்படத்தை குழந்தையின் பெற்றோரிடம் காட்டி மகிழ்ந்தார். இது குறித்து அவர் கூறும் போது,

பொதுவாக கருவில் இருக்கும் குழந்தைகளின் சிரிப்பை 22 வாரங்களுக்குப் பிறகு தான் பார்க்க முடியும். ஆனால் நான் 5 வாரங்களுக்கு முன்பே பார்த்துவிட்டேன். இது மிகவும் மகிழ்ச்சிகரமான அனுபவம் இது ஒரு சாதனையாகும் என அவர் தெரிவித்தார். (ஸ்ரீ)

## யாழ். கைத்தொழிலாளர்கள் சீனாவுக்கு விஜயம்

சீனாவின் கன்ரன் மாநகரில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை தொடக்கம் 21 ஆம் திகதி வியாழக்கிழமை வரை நடை பெறவுள்ள சர்வதேச கைத்தொழில் கண்காட்சியில் கலந்து கொள்வதற்காக யாழ்ப்பாண தொழில் முயற்சியாளர்கள் 12 பேர் அடங்கிய குழுவொன்று யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்துறை மன்றத்தின் ஏற்பாட்டில் இன்று புதன் கிழமை சீனா பயணமாகின்றது.

மேற்படி கண்காட்சியின் மூலம் பெறப்படும் அறிவு மற்றும் அனுபவங்களினூடாக சாத்தியமான புதிய தொழில் முயற்சிகளை யாழ். மண்ணில் உருவாக்குதலே இவ் விஜயத்தின் பிரதான நோக்கமாகும் என இத் தொழில் மன்றத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரி ச. யோகராஜசிங்கம் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறை தொடர் கருத்தரங்கு இன்று புதன் கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரை மண்டபத்தில் பேராசிரியர் கி.விசாகரூபன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் "யாழ்ப்பாணத்தில் அரைவாய்மொழிப் பாடல்கள்" எனும் தொனிப் பொருளில் யாழ்.பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவர்பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா கருத்துரை வழங்கவுள்ளார். இதில் ஆர்வலர்கள் அனைவரையும் பங்குபற்றுமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (ஸ்ரீ)

## தேசிய உதைபந்தாட்ட அணியின் 25 பேர் கொண்ட குழாமில் யாழ்.வீரர் தெரிவு



(கரவெட்டி)

இலங்கை தேசிய அணியில் இடம்பிடித்த யாழ்ப்பாண வீரர் எம்.பிறேம்குமார் அண்மையில் கொழும்பில் தேசிய உதைப்பந்தாட்ட பயிற்சி முகாமில் 25 பேர் கொண்ட தேசிய அணியில் வீரராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவ்வீரர் யாழ்.மாவட்டத்தில் சிறந்த உதைப்பந்தாட்ட வீரராக திகழ்ந்து வருவதுடன் வதிரி டைமன், பருத்தித்துறை உதைப்பந்தாட்ட லீக், கரவெட்டி பிரதேச செயலக அணி, யாழ். மாவட்ட அணி, வடமாகாண அணிகளில் தனது திறமையை அடுத்தடுத்து வெளிக்காட்டியதுடன் இலங்கை உதைப்பந்தாட்ட சம்மேளனத்தில் அங்கம் வகிக்கும் லீக் அணிகளுக்கிடையில் நடை பெற்றுவரும் உதைபந்தாட்ட தொடரில் 5 போட்டிகளில் 13 கோல்களை அடித்து தனது திறமையை மீண்டும் நிருபித்தார்.

இவர் தேசிய அணியில் இடம்பிடித்து தனது திறமையை வெளிக்காட்டி யாழ் மாவட்டத்திற்கு பெருமை சேர்ப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஸ்ரீ-24)

## இயற்கை அனர்த்த கட்டுப்பாடு குறித்து விசேட பயிற்சிகள்

இயற்கை அனர்த்தங்களை கட்டுப்படுத்தும் சர்வதேச தினத்தை முன்னிட்டு நாட்டில் தெரிவு செய்யப்பட்ட 12 மாவட்டங்களில் ஆழிப்பேரலை அனர்த்தத்திற்கு முகம் கொடுப்பது தொடர்பிலான விசேட பயிற்சிகளை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் ஏற்பாட்டின் கீழ் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் நிலையத்தின் பணிப்பாளர் காமினி ஹெட்டி ஆராய்ச்சி நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே இதனைத் தெரிவித்தார்.

தெரிவு செய்யப்பட்ட 12 மாவட்டங்களிலும் இந்தப் பயிற்சி நடவடிக்கைகள் இன்று இடம்பெறவுள்ளதாகவும் பி.ப.3 மணிக்குப் பின்னர் சமிக்ஞைகள் ஒலிக்கவிடப்படவுள்ளதுடன் அதன் பின்னர் குறித்த பகுதிகளில் உள்ள மக்கள் அங்கிருந்து நீக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதற்கான பயிற்சி கொழும்பு ,கம்பஹா ,புத்தளம் , களுத்துறை , காலி ,மாத்தறை ,அம்பாந் தோட்டை ,அம்பாறை ,மட்டக்களப்பு ,திருகோணமலை ,யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் மேற்கொள்ளப் படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)


# சேரத்துடிக்கிறார் ரம்லத்; நழுவப்போகிறார் நயன்தாரா?

"அம்மா... அப்பா எங்கம்மா?" ஷூட்டிங் போயிருக்கார் ... நாளைக்கு வந்துருவார்டா செல்லம்!"-எத்தனை நாளைக்குத் தான் ரம்லத், இந்தப் பதிலையே தன் குழந்தைகளுக்குச் சொல்லிக்கொண்டிருக்க முடியும்? அதான் நீதிமன்றப் படியேறி விட்டார். பிரபுதேவாவும் நயன்தாராவும் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை!.

அதன் முதற் கட்டமாக, ரம்லத்தை சமாதானப்படுத்தும் முயற்சியில் விறுவிறுவென இறங்கியுள்ளனர். இது குறித்து கோடம்பாக்கம் வட்டாரத்தில், "ரம்லத்தைச் சமாதானப்படுத்த பேச்சுவார்த்தைகள் நடக்குது. 'ஆர்.ஏ.புரம் ஏரியாவில் காளியப்பா மருத்துவமனை அருகில் தன் பெயரில் இருக்கும் பிரமாண்ட வீடு, 3கோடி பணம் எல்லாம் கொடுக்கிறேன். வீட்டுச் செலவுகளுக்கு மாதம் 3இலட்சம் கொடுக்கவும் தயார்' என்றும் சொன்னாராம்.ஆனால்,ரம்லத் எதையும் ஏற்றுக்கொள்ளும் மனநிலையில் இப்போது இல்லை. இரண்டு தாலிகளுக்காக இந்தப் பேரம் நடக்கிறது" என்றனர்.

தற்போது ரம்லத்துக்கு சட்ட ரீதியான அனைத்து உதவிகளையும் செய்து ஆதரவாக இருப்பவர், பழம் தயாரிப்பாளரான ஏ.எல்.சீனிவாசனின் மருமகள் ஜெயந்தி கண்ணப்பன். அவரைச் சந்தித்தோம்.

"பிரபுதேவா குடும்பத்துக்கும் எங்க குடும்பத்துக்கும் நல்ல நட்பு உண்டு. ஆழ்வார்பேட்டையில் அவங்க வீடு இருந்தது. பிரபுதேவாவும் ரம்லத்தும் காதலிக்கிற காலத்தில் எங்க வீட்டில் தான் அடிக்கடி



ஜெயந்தியுடன் ரமலத்

சந்திப்பாங்க. அவங்க வெளியே போக,என்னோட கார் கொடுத்து அனுப்பி இருக்கேன்.

அதனால்,இரண்டு பேருக்குமே என் மேல் தனிப்பாசம்.பிரபுதேவா-ரம்லத் காதலுக்குப் பிரச்சினை வந்தபோது... நான்,கலைப்புலி தாணு,வாசு மூன்று பேரும் தான் சப்போர்ட் பண்ணினோம். பெரிய போராட்டத்துக்குப் பின்னர் தான் ரம்லத்தைக் கைபிடிச்சார். அவர் இன்னிக்கு நயன்தாரா பின்னாடி போவார்னு நான் எதிர்பார்க்கவேயில்லை. தன்னை நம்பி வந்தவங்களுக்கு செய்யும் துரோகம் இல்லையா இது? 'நாடோடிகள்' படத்தில் நண்பர்கள் சேர்த்து வைத்த ஒரு காதல் கல்யாணத்துக்குப் பின்னர் பிரியும் போது, கோபம் கொண்டு அதைத் தட்டிக்கேட்பார் சசிக்குமார். கிட்டத்தட்ட அதே. உணர்வுதான் எனக்கும்!" என்றவரிடம், பிரபுதேவா ஏதாவது சமாதானம் பேசுகிறாரா என்று கேட்டோம்.

"அவர் எனக்குப் போன் பண்ணலை. அவருக்கு ஆதரவா சிலர் என்கிட்ட பேசுறது உண்மைதான்.. ஆனா, எந்த சமரசத்துக்கும் நான் இடம்கொடுக்கலை.ஏன்னா, இது ஒரு பெண்ணோட வாழ்க்கை. ரம்லத்துக்குக் கண்டிப்பா நீதி கிடைக்கும்னு நம்புறேன். பலருக்கு அது ஒரு பாடமாகவும் இருக்கும்!" என்றார் அக்கறையாக!

## இரண்டு தாலிகளுக்காக நடக்கிறது பேரம்!

இது இப்படி இருக்க நயன்தார மனநிலை குறித்தும் விசாரித்தோம். நயனுக்கு நெருக்கமான மலையாள சினிமா புள்ளிகள், "கேரள சினிமாவில் தாராவை முதன்முதலாக அறிமுகப்படுத்தியது, இரண்டு குழந்தைகளுக்கு தந்தையான டைரக்டர் ஷாஜி கைலாஷ் இருவருக்கும் உண்டான நெருக்கம் பற்றி மலையாள மண்ணில் கதைக்காத டீக்கடைகளே இல்லை.

ஷாஷிக்கு சொந்தமான ரிசார்ட்டில் இருவரும் அடிக்கடி நெருக்கம் காட்டினர். அப்படி இருந்த ஒரு சமயத்தில்,படம் பிடித்து வீடியோ கிளிப்பிங் வெளியிட்டார்கள். அந்த வீடியோ காட்சி போலியானது என்றார்கள் முதலில். அப்புறுமாக நயன்தாரா படத்துக்குப் பணியாற்றிய பிரபல கமராமேன் ஒருவரே, 'இது நயன்தாராவேதான்...' என்று சான்றிதழ் கொடுத் தார்.

நயன் தமிழ் சினிமாவில் சரத்குமார் நடித்த "ஐயா" படத்தில் அறிமுகமானார்.

அப்போதும் ஷாஜி அந்தப் படப்பிடிப்பு நடந்த திருநெல்வேலிக்கு அடிக்கடி சந்தோஷ விசிட் அடித்தார். தான் காதலிக்கும் மனிதருக்கு அள்ளி அள்ளிக் கொடுப்பார் நயன். ஷாஜி கைலாஷுக்கு இதுவரை 50 இலட்சத்துக்கு மேல் அள்ளிக் கொடுத்தார்.


அடுத்து "சந்திரமுகி" படத்தில் நடித்ததும் உச்சிக்குப் போனார். கோடம்பாக்கத்தில் பிஸியாக இருந்ததால், அடிக்கடி ஷாஜியை சந்திக்க முடியாமல் தவித்தார். அப்போது தான் முன்னணி ஹீரோவின் மச்சான் தொடர்பு கிடைத்தது.

அந்த நேரத்தில் தான் விரல் நடிகரின் தொடர்பும் கிடைத்தது. உதடு கடித்த போஸ்டர் மூலம் உலகத் தமிழர்களுக்குத் தங்களின் காதலை பறைசாற்றினார். நயனின் கதை விவகாரங்களில் அத்துமீறி மூக்கை நுழைத்தார் நடிகர். ஒரு கட்டத்தில் இருவருக்கும் முட்டிக் கொண்டது. விரல் நடிகரை வெறுப்பேற்றும் நோக்கத்தில் வேண்டுமென்றே அவரது போட்டியாளரான பெரிய இடத்து மாப்பிள்ளையுடன் ஜோடி சேர்ந்தார்.



நயன்தாரா-பிரபுதேவா

காந்தமாக ஒட்டிக் கொண்டார் மாப்பு. வீட்டுக்கே செல்லாமல் நடிகை தங்கிய ஸ்டார் ஹோட்டல் அறையிலேயே சொக்கிக் கிடந்தார். நடிகரின் மனைவி கண் கலங்கினார். விடயம் பெரிய ஸ்டார் வரை போக நடிகையை அழைத்துக் கடுமையாக டோஸ்விட்டார். அப்படி செய்யாமல் இருந்தால் இப்போது ரம் லத்துக்கு ஏற்பட்ட நிலைமை பெரிய ஸ்டார் மகளுக்கு வந்திருக்கும் .



ரமலத்துடன் பிரபுதேவா

"வில்லு"படத்தில் ஒப்பந்தமானார். பொதுவாக ஹீரோயின்கள், ஹீரோவோடு தான் நெருக்கமாக இருப்பார்கள். விதிவிலக்காக அந்தப் படத்தின் டைரக்டரான பிரபுதேவாவிடம் ஐக்கியமானார். நயனின் படப் பிடிப்பு எங்கு நடந்தாலும் அங்கே கரெக்டாக பிரபு ஆஜர்.

"பாடிகார்ட்" படப்பிடிப்பு எர்ணாகுளத்தில் நடந்த போது அங்கேயே டேரா போட்டார். அடுத்து "பாஸ் (எ) பாஸ்கரன்" ஷூட்டிங் கும்பகோணத்தில் நடந்தது. அங்கேயும் பிரபு விசிட் செய்தார். இப்போது பிரபுதேவா-நயன்தாரா விவகாரம் தீப்பற்றி எரிகிறது.

இந்த சூழ்நிலையிலும் நீரோ மன்னன் பிடில் வாசித்த கதையாக நயன்தாரா சைலன்ட்டாக இன்னொரு காரியத்தையும் செய்து வருகிறாராம். சென்னையில் ஒரு பிரபல வங்கியின் மேனேஜராக இருப்பவர் "கன்னிப் பருவத்திலே"படத்து ஹீரோ பெயர் கொண்டவர். கேரளக்காரான அவருக்கும் நயன்தாராவுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறதாம்.

சமீபத்தில் தாரா நடித்த விளம்பரத்தின் வரவு - செலவு களை அருகில் இருந்து இவர்தான் கவனித்துக் கொண்டாராம்.நயன்தாராவைச் சுற்றி உள்ளஇந்தக் கூடா நட்பு பிரபுதேவாவுக்குத் தெரியவே தெரியாதாம்!

ஜூனியர் விகடன்

# நலம் தரும் நவராத்திரி



## நவராத்திரி 6 ஆம் நாள்

### இன்பங்களை வரவழைக்கும் இந்திராணி வடிவம்



நவராத்திரியின் 6 ஆவது நாளில் அம்பிகையை சிம்மாசனத்தில் அமர்ந்தபடி சர்ப்ப ஆசனம் பதித்து கையில் அட்சய மாலையுடன் கபாளம், தாமரை தாங்கியபடி அமைக்க வேண்டும். தேவியின் தலையில் பிறைசூடி இருக்க வேண்டும். தேவியின் கழுத்தில் நவகண்டி மாலையும், நாக ஆபரணமும், ரத்தின மாலையும் அணிவிக்க வேண்டும். கொலு மண்டபத்தில் பாம்பு படுக்கையில் பள்ளி கொண்ட பரந்தாமன், தாமரை மலரில் அமர்ந்த இலக்குமி மற்றும் அஷ்டலட் சுமியின் வடிவ பொம்மைகளை அதிகமாக இடம்பெறச் செய்யவேண்டும். பொம்மை களை அலங்கரிக்கும் பொழுது "வருவாயே இலட்சுமியே வந்தருள் வாயே!" "வாயாரப் பாடுகிறோம் வரம் தருவாயே!" என்று அஷ்ட லட்சுமியின் வருகைப் பதிகத்தை பாடிக் கொண்டே அடுக்கினால் பலன் உடனடியாக கிடைக்கும்.

நினைத்தது நிறைவேற அம்பிகையின் முன்னால் நீலாம்பரி ராகத்தில் பாடல் பாட வேண்டும்.

சிவல்புரி சிங்காரம்

# உள்ளூராட்சி சபைகள், மாகாணசபைகளின் கட்டுப்பாட்டிலியங்கும் பஸ் தரிப்பிடங்களை இ.போ.ச.வின் கீழ் கொண்டுவர நடவடிக்கை

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைகள் மற்றும் மாகாண சபைகளின் கட்டுப்பாட்டில் இயங்கும் பயணிகள் பேருந்து தரிப்பிடங்கள் அனைத்தையும் இலங்கை போக்குவரத்து சபையின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரும் படி ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இதே வேளை வடமேல் மாகாணத்திலுள்ள தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் பல அழிவடைந்து வருவதாக தெரிவித்த ஜனாதிபதி இவற்றைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்குமாறும் உத்தர விட்டார். மாதம்பைப் பிரதேசத்தில் இடம் பெற்ற கிழக்குமாகாண அபிவிருத்திக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

(ஸ்ரீ-2)

# பரிசளிப்பும் கலை விழாவும்

(அல்வாய்)

யா/வல்வை மகளிர் மகாவித்தியாலயத்தின் பரிசளிப்பும் கலைவிழாவும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் அதிபர் திருமதி தேவராணி நவரட்ணம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வல்வை ஒன்றியத்தலைவர் எஸ்.எக்ஸ். குலநாயகம், சிறப்பு விருந்தனராக பருத்தித்துறை கோட்டக்கல்விப் பணிப்பாளர் பா.இரகுநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். பரிசில்களை திருமதி.தேவஜோதி குலநாயகம் வழங்கிக் கௌரவிப்பார்.

(ஸ்ரீ-19)

# நாடளாவிய ரீதியிலான சனத்தொகை கணக்கெடுப்பு அடுத்த வருடம் ஓகஸ்டில் ஆரம்பிக்கப்படும்

## புள்ளிவிபரவியல் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் தெரிவிப்பு

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் 2011 ஆம் ஆண்டு சனத்தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட வுள்ளது. இதற்கு தேவையான ஆரம்பக்கட்ட ஏற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. வடக்கு-கிழக்கில் 30 வருடங்களுக்கு பின்னர் சனத்தொகை கணக்கெடுப்பு நடைபெறுவது விசேட அம்சமாகும் என்று புள்ளி விபரவியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் டி.பி.பி. சுரஞ்சனா வித்தியாரட்ன தெரிவித்தார்.

அதாவது எதிர்வரும் 2011ஆம் ஆண் டு ஓகஸ்ட் மாதத்தில் இலங்கையில் இருக்கின்ற மக்களே சனத் தொகைக்கு உள்ளடக்கப்படுவர் .அந்த வகையில் இந்தியாவில் தங்கியுள்ள இலங்கை அகதிகள் கடந்த ஓகஸ்ட் மாதத்தில் இலங்கையில் தங்கியிருக்காவிடின் அவர்கள் சனத்தொகை கணக்கெடுப்புக்கு உள்ளடக்கப்படமாட்டார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார். அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இந்த விடயங்களைக் குறிப்பிட்டார்.

பணிப்பாளர் நாயகம் அங்கு மேலும் கூறுகையில்,

வடக்கு -கிழக்கு மாகாணங்களில் கடந்த காலங்களில் நிலவிய யுத்தம் காரணமாக அங்கு 30 வருடங்களாக புள்ளி விபரவியல் கணக்கெடுப்புக்களை மேற்கொள்ள முடியவில்லை.

தற்போது யுத்தம் முடிவடைந்துள்ள நிலையில் அடுத்த வருட சனத் தொகை மற்றும் புள்ளி விபரவியல் கணக்கெடுப்பு வடக்கு-கிழக்கு உள்ளிட்ட நாடளாவிய ரீதியில் நடைபெறுமெனவும் அதற்கான ஏற்பாடுகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வரைப்படம் தயாரித்தல், கட்டடங்களை வரிசைப் படுத்தல் என தேவையான ஆரம்ப கட்ட பணிகள் அனைத்தும் இடம்பெற்றுவருகின்றன.

அந்த வகையில் அடுத்த ஆண்டு ஓகஸ்ட் மாதமளவில் சனத்தொகை கணக்கெடுப்பு நடவடிக்கைகள் ஆரம்பமாகுமெனவும் இதற்கான நாடளாவிய ரீதியில் ஒரு மாதத்துக்கு பணிபுரிய 65 ஆயிரம் தற்காலிக உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படவுள்ளனர். இதற்கான செயற்பாடுகளை பிரதேச செயலாளர்கள் மற்றும் கிராம சேவகர்கள் மேற்கொள்வர்.

இந்நிலையில் சனத்தொகை கணக்கெடுப்பு முடிவடைந்து ஒரு மாதத்தில் ஆரம்பக் கட்ட முடிபுகளை வெளியிட முடியும். அதாவது சனத்தொகை இன, மத, வயது ஆகியன அடிப்படையில் புள்ளி விபரங்கள் வெளி யிடப்படும். அதன் பின்னர் கட்டம் கட்டமாக ஏணைய புள்ளிவிபரங்கள் வெளியிடப்படும். கணக்கெடுப்பு முடிவடைந்து ஒரு வருடத்தில் இறுதி முடிபுகள் வெளியிடப்படும். எனவே இந்த வேலைத்திட்டத்தை மிகவும் சிறப்பாக செய்து முடிக்க எதிர்பார்க்கின்றோம்.

இதேவேளை சனத்தொகை கணக்கெடுப்பு எடுக்கப்படுகின்ற காலத்தில் அதாவது அடுத்த வருடம் ஓகஸ்ட் மாதத்தில் நாட்டில் இருப்பவர்களே சனத்தொகை கணக்கெடுப்புக்கு உள்ளடக்கப்படுவார்கள் .அதன் படி பார்க்கும்போது தற்போது இந்தியாவில் தங்கியுள்ள இலங்கை அகதிகள் ஓகஸ்ட் மாதத்தில் இலங்கையில் இருக்காவிடின் அவர்கள் சனத்தொகை கணக்கெடுப்பில் உள்ளடக்கப்படமாட்டார்கள் என்று தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# 3 ஆயிரத்து 338 பாடசாலைகளில் டெங்கு நோய் பரவும் அபாயம்

(கொழும்பு)

தேசிய டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு சோதனைக்கு உட்படுத்தப்பட்ட பாடசாலைகளில் 50 சதவீதமான பாடசாலைகளில் டெங்கு பரவும் அபாயம் இருப்பதாகத் தெரியவந்துள்ளது.

இந்தத் தகவலை சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ளது.நாடுமுழுவதும் உள்ள பாடசாலைகளில் இந்தச் சோதனை நடவடிக்கைகள் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்டதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்போது 6 ஆயிரத்து 964 பாடசாலைகள் சோதனைக்குட்பட்டதில் இவற்றுள் 3 ஆயிரத்து 338 பாடசாலைகளில் டெங்கு தொற்று பரவும் அபாயம் கண்டறியப்பட்டுள்ளது.

அத்துடன் 793 பாடசாலைகளில் டெங்கு குடம்பிகள் இருந்தமை சோதனைகளின் போது கண்டுபிடிக்கப்பட்டதாகவும் சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதனிடையே தொற்று நோய் பரவும் ஏது நிலைகள் கொண்ட பாடசாலைகளில் 5 ஆயிரத்து 378 பாடசாலை அதிபர்களுக்கு இது தொடர்பில் கடும் எச்சரிக்கை விடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் 390 அதிபர்களுக்கு அறிவுறுத்தல் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.டெங்கு தொற்றுஅபாயம் அதிகம் உள்ள மாவட்டமாக வடமேல் மாகாணம் இருப் பதாக நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் மூலம் கண்டறியப்பட்டதாகவும் அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதனிடையே சிறுவர்களுக்காக தயாரிக்கப்படும் விளையாட்டுப் பொருட்கள் உரிய தரத்தில் தயாரிக்கப்படுவதில்லை என கண் வைத்தியர்கள் அமையம் குறிப்பிட்டுள்ளது.

இந்த மையத்தின் தலைவர் தர்மா இருகல் பண்டார இது குறித்து கருத்துத் தெரிவிக்கையில், தரம் குறைந்த விளையாட்டுப்பொருட்கள் காரணமாக அதிகளவான குழந்தைகள் கண் நோய் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டார். நாளை அனுஷ்டிக்கப்படவுள்ள தேசிய பார்வை தினத்தை முன்னிட்டு கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)

# உலகில் ஒரு பில்லியன் மக்கள் பட்டினியால் அல்லலுறுகின்றனர்

## பட்டினிக்கான அனைத்துலக தரவுகள் மையம் தெரிவிப்பு

வறுமை, மோதல்கள் மற்றும் அரசியல் உறுதியற்ற தன்மைகள் காரணமாக இந்த வருடம் ஒரு பில்லியன் மக்கள் பட்டினியால் வாடுவதாக பட்டினிக்கான அனைத்துலக தரவு மையம் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இந்த வருடம் உலகில் ஒரு பில்லியன் மக்கள் பட்டினியுடன் போராடி வருகின்றனர். இதில் ஆசிய - ஆபிரிக்க நாடுகளில் வாழும் மக்களே அதிகமாகவும் அவர்களில் சிறுவர்களே மிகவும் கூடுதலாகக் காணப்படுகின்றார்கள்.

எமது ஆய்வில் எடுக்கப்பட்ட 122 நாடுகளில் 25நாடுகள் மிகவும் மோசமான நிலையில் உள்ளன. அவற்றில் நான்கு ஆபிரிக்க நாடுகள் மிகமிக மோசமான நிலையை அடைந்துள்ளன.

கொங்கோ குடியரசு, புறுண்டி, எரித்திரியா மற்றும் சாட் ஆகிய நாடுகளே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளன.

ஏனைய 25 நாடுகளில் இந்தியா, பங்களாதேசம் உட்பட பல ஆசிய மற்றும் ஆபிரிக்க நாடுகள் உள்ளடங்கியுள்ளன.

இந்தியா, பங்காளாதேசம், கிழக்கு தீமோர், யேமன் ஆகிய நாடுகளில் 40 விகிதமான சிறுவர்கள் நிறை குறைந்தவர்கள் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஸ்ரீ-2)

# இந்தியாவின் உதவியுடன் புதிய வைத்தியசாலைக் கட்டடம் நிர்மாணம்

(கொழும்பு)

டிக்கோயா கிளிங்கன் வைத்தியசாலைக்கு சகல வசதிகளும் கொண்ட மேலும் ஒரு புதிய கட்டடத்தை நிர்மாணித்துக் கொடுப்பதற்கு இந்திய அரசாங்கம் முன்வந்துள்ளது.

சுமார் 700 மில்லியன் ரூபா செலவில் 150 கட்டில் வசதிகளுடன் இந்தப் புதிய வைத்தியசாலை கட்டடம் நிர்மாணிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வருட இறுதிக்குள் புதிய வைத்தியசாலை கட்டடத்திற்கான நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் இதன் நிர்மாணப் பணிகள் அடுத்தமூன்று வருடங்களில் நிறைவு செய்யப்படவுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிரதி இந்திய உயர்ஸ்தானிகர் விக்ரம் மிஸ்ரி மற்றும் கண்டி உதவி இந்திய உயர்ஸ்தானிகர் ஆகியோர் டிக்கோயா-கிளிங்கன் ஆதார வைத்தியசாலைக்கு நேரடியாக விஜயம் செய்து கண்காணிப்பில் ஈடுபட்டதை அடுத்து வைத்தியசாலை அத்தியட்சகரிடம் புதிய கட்டடத்தை நிர்மாணிப்பதற்கான உறுதிமொழியையும் வழங்கியுள்ளார்.

(ஸ்ரீ-2)

# 05 ஆம் திகதியில் பிறந்த உங்கள் பலன் எப்படி?

5ஆம் திகதியில் பிறந்தவர்கள் பெரும்பாலும் சுயநலவாதிகளே. இவர்கள் எதை யும் தனக்காகவே செய்யும் மனோபாவம் கொண்டவர்களாக இருப்பார்கள். தங்கள் எண்ணங்களால்தான் இவர்களின் உயர்வும் தாழ்வும் கிடைக்கப் பெறுகிறார்கள். இவர்களின் பொருளாதார நிலை உயர்வடைந்த பின் இவர்களின் சுய உருவம் வெளிநபர்களுக்குத் தெரிய வரும். இரகசியமாகச் செயற்படும் குணம் கொண்ட இவர்களின் தொழில் எண் 6. நன்மை செய்யும் எண் 5 மட்டுமே.

5ஆம் திகதியில் பிறந்து அரசுத் துறையில் பணிபுரிவோர் பெரும்பாலும் உத்தரவு வழங்குதல், சரிபார்த்தல், பரிவர்த்தனை போன்ற துறைகளில் அதிகம் காணப்படுவார்கள். சுகவாசிகளான இவர்கள் மனம் போல் பணிபுரியும் நிலையில் இருப்பார்கள். அடுத்தவர்கள் கூறுவதை மதிக்காமல்–தான் நினைத்ததை–தான் கூறியதையே பிரதானமாக நினைத்துச் செயற்படக் கூடியவர்கள். அடுத்தவர்கள் சொல்வதைக் கேட்டுவிட்டால் தன் கௌரவம் குறைந்துவிடும் என்று நினைப்பவர்களும் இவர்களே. பிறரைத் துன்புறுத்தவோ அல்லது சிரமப்படுத்தவோ சிறிதும் தயங்காமல் செயற்படும் குணம் இவர்களி டம் அதிகமாகக் காணப்படும்.

பெண்கள் சம்பந்தப்பட்ட விடயங்களில் மிகவும் கவனமாகச் செயற்படக் கூடியவர் கள். நன்மை செய்யும் எண் ஆதிக்கமும் பிறந்த திகதி எண் ஆதிக்கமும் ஒரே எண்ணாக இருப்பதால், தொழில் எண் 6 இவர்களுக்கு நன்மைகளை வாரிவழங்கிவிட்டு பின் சோதனைகளையும் செய்யும். சோதனையில் தப்பியவர்கள் நல்ல பலன்களையும் சிக்கியவர்கள் கெடு பலன்களையும் பெறுவார்கள்.

**இவர்கள் புதன்கிழமை தோறும் தாமரை மலர் கொண்டு மகாலட்சுமியை வழிபாடு செய்து வந்தால் நன்மைகள் அதிகம் பெறலாம்.**

வற்றாத செல்வமும் வளமான வாழ்வும் உடையவர்களாக இருப்பவர்கள் 5ஆம் திகதியில் பிறந்தவர்களே. சிறு வயதில் சிரமப்பட்டாலும் 23 வயதிற்கு மேல் 68 வயது வரை அதிக நன்மைகள் பெறுபவர்கள் இவர்களே. தொழில் எண்ணும் பிறந்த திகதி எண்ணும் ஒரே எண்ணாக அமைந்து நன்மை செய்யும் எண் 6ஆக இருப்பதால், இவர்கள் சமயோசித அறிவைப் பயன்படுத்தி பிரச்சினைகளிலிருந்து தப்பி விடுவார்கள். இவர்களுக்கு உதவி செய்யும் நபர்களும் வழிகாட்டும் நபர்களும் இருப்பதால் நன்மைகள் அதிகம் பெற்று விடுகின்றனர். அடிக்கடி நண்பர்களை மாற்றிக் கொண்டே இருப்பார்கள்.

தனக்கு வேலை ஆகவேண்டும் என்றால் பணிவு தானே வந்துவிடும். வேலை முடிந்ததும் துணிவும் தானே வந்துவிடும். இவர்களின் குறிக்கோள்கள் எல்லாம் பொருளாதார நிலை, கௌரவம் இதில்தான் இருக்கும். எண் ஆதிக்கம் குறைவாக உள்ளவர்கள் மிதமான பொருளாதார நிலையை உடையவர்களாக இருப்பார்கள். இவர்களுக்கு முன்பின் யோசனை குறைவாக இருப்பதால், நன்மைகள் தாமதமாகக் கிடைக்கப் பெறுவார்கள்.

அடுத்தவர்களைப் பதம் பார்ப்பதில் தனி சுகம் அனுபவிக்கும் எண்ணம் அதிகம் இருப்பவர்கள் 50 வயதிற்குமேல் பொருளாதார வீழ்ச்சி அடைய வேண்டிய நிலை உருவாகும். இது நன்மை செய்யும் எண் 6இன் ஆதிக்கத்தாலே உருவாக்கப்படுவதும் உண்டு. எண் ஆதிக்கம் பெற புதன்கிழமை தோறும் ஆதரவற்றோர் இல்லத்திற்குச் சென்று குழந்தைகளுக்கு உணவு கொடுத்து வந்தால் நன்மைகள் அதிகம் பெறலாம்.

இந்த எண்ணில் மிகக் குறைந்த அளவே தொழிலாளர்கள் இருப்பதைக் காணலாம். எண் 5இல் பிறந்தவர்கள் பெரும்பாலும் பிறரின் உழைப்பாலும் உதவியாலும் முன்னேறும் தன்மை உடையவர்கள். எனவே தொழிலாளர்களாக இருப்பது மிகமிக அரிதாக இருக்கிறது. ஆரம்பத்தில் தொழிலாளர்களாக இருந்தாலும் மிகக் குறைந்த ஆண்டுகளே– அதாவது ஐந்து அல்லது ஒன்பது ஆண்டுகள் மட்டுமே தொழிலாளர்களாக இருப்பார்கள். சிலர் திருமணத்திற்கு முன் நண்பர்களாலும், சிலர் திருமணத்திற்குப் பின் மனைவி அல்லது மனைவி வழி உறவுகளாலும் திடீர் வாய்ப்புகளைப் பெற்று சுய தொழில் செய்யும் நிலைகிடைக்கப் பெறுவார்கள்.

அதனால் 5ஆம் திகதியில் பிறந்தவர்கள் தொழிலாளி என்ற நிலையில் இருந்து தொழிலதிபர் என்ற நிலைக்குச் சென்று விடுவார்கள். எண் ஆதிக்கம் மிகமிகக் குறைவாக இருந்தால் மட்டுமே 5ஆம் திகதியில் பிறந்த வர்கள் தொழிலாளர்களாக இருப்பார்கள். தொழில் எண் 6 மற்றும் உதவி செய்யும் எண் 5இன் ஆதிக்கம் பெற புதன்கிழமை தோறும் கருடாழ்வாருக்கு நெய்விளக்கு ஏற்றி வழிபாடு செய்து, ஏழைகளுக்கு அன்னதானம் செய்து வந்தால் நன்மைகள் கிடைக்கப் பெறுவார்கள்.

5ஆம் திகதியில் பிறந்து கலைத்துறை மற்றும் அதன் தொடர்புடைய தொழில் செய்வோர் இதற்கென பிறந்தவர்கள் என்று எண்ணும் அளவிற்குத் தொழில் ஈடுபாடு மற்றும் நடவடிக்கைகள் அமையப் பெற்றிருப்பார்கள். இவர்கள் மனதிற்கு ஏற்ப செயல்படும் தன்மையைப் பெற்றிருப்பார்கள். எதற்கும் துணிந்து செயற்பட்டு வெற்றி பெறும் குணமுடையவர்களாக இருப்பார்கள். தொழில் எண் 5 அமையப் பெற்றிருப்பதாலும் நன்மை செய்யும் எண் 6–ஆக இருப்பதாலும் இவர்கள் வாழும்வரை இன்பங்களை அனுபவிக்கும் தன்மை பெற்றவராகவும், பொருளாதாரத் தாழ்வின்றியும் இருப்பார்கள். இவர்களின் ஏற்றத் தாழ்வுக்கு இவர்களே காரணமாகவும் இருப்பார்கள்.

மனதில் சற்று அதிகார குணம் தலைதூக்கும். புதிய சிந்தனை, புதிய செயல் என்று சிந்தித்துச் செயல்படும் தன்மை பெற்றவர்கள். தொழில் எண் இவர்களுக்குத் திடீர் யோகத்தைக் கொடுக்கும், அதேவேளை, திடீர் எதிரிகளையும் உண்டாக்கிவிடும். எச்சரிக்கையாக இருந்தால் மட்டுமே அனைத்திலும் வெற்றி பெறலாம். எண் ஆதிக்கம் குறையாமல் இருக்க புதன்கிழமை தோறும் திருநங்கைகளுக்கு உதவிகள் செய்து வந்தால் நன்மைகள் பல பெறலாம்.

பிறந்த திகதி 5, விதி எண் 1ஆக இருப்பவர்களுக்கு 20 ஆண்டுகள் நற்பலன்கள் உண்டாகும். பிறந்த திகதி 5, விதி எண் 2ஆக இருப்பவர்களுக்கு 24 ஆண்டுகள் நற்பலன்கள் உண்டாகும். பிறந்த திகதி 5 விதி எண் 3 ஆக இருப்பவர்களுக்கு 19 ஆண்டுகள் நற்பலன்கள் கிடைக்கும். பிறந்த திகதி 5, விதி எண் 4ஆக இருப்பவர்களுக்கும்; பிறந்த திகதி 5, விதி எண் 5ஆக இருப்பவர்களுக்கும் வாழ்நாள் முழுவதும் அதிகபட்ச யோகங்கள் கிடைக்கும். பிறந்த திகதி 5, விதி எண் 6ஆக இருப்பவர்களுக்கு 33 வருடங்கள் நற்பலன்கள் கிடைக்கும். பிறந்த திகதி 5, விதி எண் 7ஆக இருப்பவர்களுக்கு 19 ஆண்டுகள் நற்பலன்கள் கிடைக்கும். பிறந்த திகதி 5, விதி எண் 8ஆக இருப்பவர்களுக்கு ஆறு வருடங்களுக்குப் பின் இடைவெளிவிட்டு ஆறு வருடங்கள் என நான்கு முறை நற்பலன்கள கிடைக்கும், பிறந்த திகதி 5, விதி எண் 9–ஆக இருப்பவர்களுக்கு 21 ஆண்டுகள் நற்பலன்கள் கிடைக்கும்.

குறிப்பு :– பிறந்த திகதி எண், விதி எண், தொழில் எண், நன்மை செய்யும் எண் ஆகிய வற்றின் ஆதிக்கத்தைப் பொறுத்தும் தொழில் நிலைகள் மாறுபடும்.

(தொடரும்)

**எஸ்.என்.ஹரிஜி**



பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர் தரப்பாடசாலை நவோதய வார இறுதி நாள் நிகழ்விலும் பரிசளிப்பு விழாவிலும் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட வடமாகாண கல்வித்திணைக்கள நவோதய திட்டப்பணிப்பாளர் கே.செல்வன் உரையாற்றுவதையும் அங்கு இடம் பெற்ற ஆக்கப் பொருள் கண்காட்சியை விருந்தினர்கள் பார்வையிடுவதையும் பிரதம விருந்தினர் மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

## வடக்கு மாகாண மீளாய்வு அபிவிருத்திக் குழுக்கூட்டம்

(கொழும்பு)

வடக்கு மாகாண மீளாய்வு அபிவிருத்திக் குழுக்கூட்டம் எதிர்வரும் 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வவுனியா இராணுவ முகாம் தலைமையகத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கலந்து கொள்ளவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான கலந்துரையாடல் யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை,வடக்கு மாகாணத்தின் அரசாங்க அதிபர்களுடன் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் கலந்து கொண்ட வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் எதிர்வரும் 19 ஆம் திகதி நடைபெறவுள்ள வடக்கு மாகாண அபிவிருத்திக் கூட்டம் தொடர்பாக ஆராய்ந்துள்ளனர். (ஸ்ரீ–2)

## இந்தியாவிலிருந்து படகில் வந்த அகதிகள் தலைமன்னாரில் கைது

இந்தியாவிலிருந்து படகு மூலம் இலங்கைக்கு சென்ற பத்து இலங்கை அகதிகள் தலைமன்னாரில் வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழ்நாட்டின் இராமேஸ்வரம் கரையின் ஊடாக குறித்த அகதிகள் படகு இலங்கை நோக்கிபயணித்துள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

கைது செய்யப்பட்டவர்களில் பெண்களும் அடங்குவதாகவும் பத்து, பதினைந்து வருடங்களுக்கு முன்னர் இந்தியாவில் சரணாகதி அடைந்தவர்களே இவ்வாறு மீளவும் படகு மூலம் இலங்கைக்கு சென்றிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

போர் இடம்பெற்ற காலத்தில் பாதுகாப்பு கருதி இவர்கள் படகு மூலம் இந்தியா சென்றிருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

தலா பத்தாயிரம் ரூபா பணம் செலுத்தி குறித்த நபர்கள் இலங்கைக்கான பயணத்தை மேற்கொண்டுள்ளதாக லங்காதீப பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.(ஸ்ரீ–2)

# சர்வதேச புள்ளிவிபரவியல் தினம் 20 ஆம் திகதி அனுஷ்டிப்பு

(கொழும்பு)

சர்வதேச புள்ளி விபரவியல் தினம் இம்மாதம் 20ஆம் திகதி இலங்கையில் அனுஷ்டிக்கப் படவுள்ளது. இது தொடர்பான பிரதான வைபவம் இலங்கை மன்றக்கல்லூரியில் பிரதி நிதியமைச் சர்களின் தலைமையில் நடைபெற வுள்ளது.

சேவை தொழில், செயற்பாடு மற்றும் நம்பகத்தன்மை என்ற தொனிப்பொருளின் அடிப்படையில் இம்முறை சர்வதேச புள்ளி விபரவியல் தினம் அனுஷ்டிக்கப் படவுள்ளது.

இது தொடர்பாக விளக்கமளிக்கும் நோக்கில் அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் திணைக் களத்தின் பணிப்பாளர் நாயகம் டி.பி.பி.சுரஞ்சனா வித்தியாரட்ன குறிப்பிடுகையில்,

அபிவிருத்தித் தரவுகள், வேலைத்திட்டங்களை மேற்கொள்வதற்கான தரவுகள்,நாட்டில் பல்கலைக்கழகங்களுக்கு தேவையான தகவல்கள் மற்றும் மாணவர்களுக்குரிய தகவல்கள் என்பனவற்றை எமது புள்ளி விபரவியல் திணைக்களமே வெளியிட்டு வருகின்றது.

அதாவது,பல்வேறு வகையான கணக்கெடுப்புகளை ஒவ்வொரு கால கட்டத்திலும் நாங்கள் மேற்கொள்கின்றோம். விலைச் சுட்டெண்.கள் கைத்தொழில் விபரங்கள் விவசாய தகவல்கள் மற்றும் பல்வேறு வகையான விபரங்களை எமது திணைக்களம் வெளியிடுகின்ற தரவுகள் மூலமே மக்கள் பெற்றுக்கொள்கின்றனர்.

அந்த வகையில் சர்வதேச புள்ளி விபரவியல் தினத்தை நாங்கள் எதிர்வரும் 20ஆம் திகதி இலங்கை மன்றக் கல்லூரியில் அனுஷ்டிக்கவுள்ளோம்.

பிரதி நிதியமைச்சர்களான கலாநிதி சரத் அமுனுகம மற்றும் சந்திரசிறி கஜதீர ஆகியோர் இந்த நிகழ்வில் பிரதம அதிதிகளாக கலந்து கொள்ளவுள்ளனர்.

மேலும் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் அதிகாரிகளும் கலந்து கொள்வார்கள்.

புள்ளி விபரங்கள் தொடர்பில் மக்களை தெளிவுபடுத்தும் நோக்கிலேயே சர்வதேச புள்ளி விபரவியல் தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது என்றார். (ஸ்ரீ-2)

# எழுத்து மூல அறிக்கை சமர்ப்பிக்க அனுருத்த ரத்வத்தைக்கு அனுமதி



முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தைக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்ட மனு தொடர்பிலான எழுத்து மூல அறிக்கையை ஒக்டோபர் 18 ஆம் திகதி சமர்ப்பிப்பதற்கு பிரதிவாதியின் சட்டத்தரணிக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

மேல் நீதிமன்ற நீதிபதி சுனில் ராஜபக்ஷ முன்னிலையில் இம்மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது முன்னாள் பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை சார்பாக ஆஜராகிய சட்டத்தரணி ரியன்சி அரசகுலரத் தினம் எழுத்து மூல அறிக்கை சமர்ப்பிக்கும் திகதியை மாற்றும் படி கோரியிருந்தார்.

இதன் போது ஆஜராகியிருந்த பிரதி சொலிஸிட்டர் நாயகம் இக் கோரிக்கைக்கு எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. அனுருத்த ரத்வத்தை தான் எவ்வாறு சொத்துக்களை உழைத்தார் என இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் விசாரணையின் போது சந்தேகம் இல்லாத முறையில் விளக்கத் தவறிவிட்டதாக குற்றம் சுமத்தப்பட்டு இவ் வழக்கு நடைபெறுகின்றது. (ஸ்ரீ-2)

# நோர்வேயின் மனிதாபிமான நிறுவனத்திற்கு எதிராக இலங்கையரசு அதிரடி நடவடிக்கை

கடந்த 30 வருடங்களாக இலங்கையில் மனிதாபிமான பணிகளில் ஈடுபட்டு வரும் நோர்வே நாட்டு அமைப்பான போரூட் நிறுவனத்திற்கு எதிரான நடவடிக்கைகளை இலங்கை அரசு முடுக்கிவிட்டுள்ளது என ஒஸ்லோவில் இருந்து வெளியாகும் பத்திரிகைகள் செய்தி பிரசுரித்துள்ளன.

1981ஆம் ஆண்டு முதல் இந் நிறுவனம் இலங்கையில் மனிதாபிமானப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றது. இந்நிறுவனத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதியாக தற்போது ஆனி பாங் சித்தி உள்ளார்.

இவர் அங்கு தொடர்ந்து கடமையாற்றவோ,தங்கியிருக்கவோ முடியாது என்று இலங்கை அரசு அறிவித்துள்ளது. நாட்டைவிட்டு வெளியேறுகின்றமைக்கு இன்று வரை அவகாசமும் கொடுத்துள்ளது. ஆயினும் இலங்கை அரசின் இத் தீர்மானத்திற்கான காரணம் என்ன என்பது தெரியவில்லை. என்று போரூட் நிறுவனம் அறிவித்துள்ளது. இலங்கை அரசின் தீர்மானம் அதிர்ச்சியையும் ஏமாற்றத்தையும் தந்துள்ளது என நிறுவனத்தின் ஊடகப்பிரிவு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# குடிவரவு சட்டங்களை மீறிச் செயற்பட்ட இலங்கையர்கள் பிரித்தானியாவில் கைது

(கொழும்பு)

குடிவரவு சட்டங்களை மீறிச் செயற்பட்ட சில இலங்கையர்களை பிரித்தானிய எல்லை முகவர் நிறுவனம் மற்றும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பிரித்தானியக் குடிவரவுச் சட்டங்களை மீறிச் செயற்படல் மற்றும் நிதி மோசடிகளில் ஈடுபடல் ஆகிய குற்றச்சாட்டுக்களின் பேரில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சசெக்ஸ், கென்ட் மற்றும் சர்ரே ஆகிய பிரதேசங்களில் பொலிஸார் திடீர் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டதன் மூலம் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் 21 இடங்களில் திடீர் சுற்றி வளைப்புத் தேடுதல்கள் நடத்தப் பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சட்டவிரோத புகலிடக் கோரிக்கையாளர்களினால் மேற்கொள்ளப் படக்கூடிய குற்றச் செயல்களை தடுக்கும் நோக்கில் நாடு தழுவிய ரீதியில் இவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக அந்நாட்டு குடிவரவு, குடியகல்வு அமைச்சு அறிவித்துள்ளது. (ஸ்ரீ-2)

# கட்சி மறுசீரமைப்பு குறித்து வெள்ளியன்று முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்படும்

## ஐ.தே.க.அறிவிப்பு

(கொழும்பு)

கட்சி மறுசீரமைப்பு நடவடிக்கைகள் குறித்து எதிர்வரும் 15ஆம் வெள்ளிக்கிழமை முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட உள்ள தாக ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை ஐக்கிய தேசிய கட்சியின் செயற் குழுக் கூட்டம் நடை பெறவுள்ளது.

கட்சியின் கொள்கைகளை கிராம மட்டத் தில் பிரச்சாரம் செய்யும் நோக்கில் கிராம சாரிக்கா என்ற திட்டம் முன்னெடுக்கப்பட வுள் ளதாக ஐக்கிய தேசியக்கட்சியின் ஊடாகப் பேச்சாளர் கயந்த கருணாதிலக்க தெரிவித் துள்ளார்.

கட்சியின் பொதுக்கூட்டம் எதிர்வரும் டிசம்பர் மாதம் நடத்தப்படவுள்ளதாகவும் அடுத்த வருடம் நடைபெறவுள்ள உள்ளூ ராட்சி மன்றத் தேர்தல்களை எதிர்கொள்ளத் தயார் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

கட்சிக்குள் நிலவிவரும் முறுகல் நிலைமைகளுக்கு விரைவில் தீர்வு காணப்படும் எனவும் வேட்பாளர்களை தெரியும் நடவடிக்கைகள் விரைவில் ஆரம்பிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்..

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் களில் போட்டியிடுவதற்காக 15 ஆயிரம் பேர் விண்ணப்பித்துள்ளதாக் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

2010.10 13

- 0054 - உரோமப் பேரரசன் குளோடியஸ் அவனது நான்காவது மனைவியினால் நஞ்சூட்டிக் கொல்லப்பட்டதினால் அவளது மகன் நீரோ உரோமப் பேரரசனானான்.
- 1492 - கொலம்பசும் அவரது குழுவினரும் பஹாமாசில் தரையிறங்கினர்.
- 1582 - கிரெகொரியின் நாட்காட்டி அறிமுகப்படுத்தப்பட்டதை அடுத்து இத்தாலி, போலந்து, போர்த்துக்கல், மற்றும் ஸ்பெயின் ஆகிய நாடுகளில் புதிய நாட்காட்டியில் இவ்வாண்டின் இந்நாள் இடம்பெறவில்லை.
- 1884 - அனைத்துலக நேரம் கணிக்கும் இடமாக கிறீனிச் தெரிவு செய்யப்பட்டது.
- 1885 - ஜோர்ஜியா தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டது.
- 1917 - யாழ்ப்பாணம் மாநகராட்சிப் பகுதி மத்திய, மேற்கு, கிழக்கு என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டன.
- 1923 - துருக்கியின் தலைநகர் இஸ்தான்புலிலிருந்து அங்காராவுக்கு மாற்றப்பட்டது.
- 1943 - இரண்டாம் உலகப் போர்: புதிய இத்தாலிய அரசு ஜெர்மனி மீது போரை அறிவித்தது.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: லாத்வியாவின் தலைநகர் ரீகா சோவியத் படைகளால் கைப்பற்றப்பட்டது.
- 1953 - இலங்கைப் பிரதமர் பதவியை டட்லி சேனநாயக்கா துறந்தார்.
- 1972 - மொஸ்கோவுக்கு வெளியே ஏரோபுளொட் விமானம் ஒன்று வீழ்ந்து நொருங்கியதில் 176 பேர் கொல்லப்பட்டனர்.
- 1972 - உருகுவாய் விமானம் ஒன்று ஆர்ஜெண்டீனாவுக்கும் சிலிக்கும் இடையில் அண்டீஸ் மலைகளில் மோதியது. டிசம்பர் 23 ஆம் நாள் 45 பேர்களில் 16 பேர் மட்டும் மீட்கப்பட்டனர்.
- 1976 - பொலீவியாவைச் சேர்ந்த போயிங் சரக்கு விமானம் ஒன்று சாண்டா குரூஸ் நகரில் வீழ்ந்ததில் தரையில் நின்ற 97 பேர் (பெரும்பாலானோர் குழந்தைகள்) உட்பட 100 பேர் கொல்லப்பட்டனர்.
- 1990 - சிரியப் படைகள் லெபனான் மீது தாக்குதலை ஆரம்பித்தது.


## பிறப்புகள்

- 1911 - அசோக் குமார், இந்திய நடிகர், (இ.2001)
- 1925 - மார்கிரட் தாட்சர், இங்கிலாந்து முன்னாள் பிரதம மந்திரி
- 1925 - லென்னி புரூஸ், அமெரிக்க நகைச்சுவை நடிகர் (இ.1966)
- 1977 - பால் பியர்ஸ், அமெரிக்க கூடைப் பந்து ஆட்டக்காரர்.
- 1978 - ஜெர்மெயின் ஓனீல், அமெரிக்கக் கூடைப்பந்து ஆட்டக்காரர்
- 1982 - இயன் தோப், அவுஸ்திரேலிய நீச்சல் வீரர்.

## இறப்புகள்

- 0054 - குளோடியஸ், உரோமப் பேரரசன் (பி-கி.மு 10)
- 1987 - கிஷோர் குமார் பின்னணிப் பாடகரும், நடிகரும், (பி. 1929)

**1792 - அமெரிக்க வெள்ளை மாளிகைக்கான அடிக்கல் வோஷிங்டன், டிசியில் இடப்பட்டது.**



# மியன்மார் நாட்டில் 20 ஆண்டுகளுக்கு பின்னர் தேர்தல் நடத்தப்படவுள்ளது

மியன்மாரில் 20 ஆண்டுகளுக்குப் பின் தேர்தல் நடப்பதன் மூலம் ஜனநாயகம் மலரும் நிலை ஏற்பட்டுள்ளது என அந்நாட்டு எதிர்க்கட்சி தெரிவித்துள்ளது. மியன்மாரில் நீண்டகாலமாக இராணுவ ஆட்சி நடக்கிறது. கடந்த 1990 இல் அங்கு தேர்தல் நடந்தது. அதில் ஆங் சான் சூகியின் ஜனநாயக தேசிய லீக் கட்சி வெற்றி பெற்றது. ஆனால், இராணுவ ஆட்சியாளர்கள் இந்த வெற்றியை ஏற்றுக் கொள்ளவில்லை. சூகி கட்சியினரை பதவியேற்க அனுமதி மறுத்ததுடன், அவரை சிறையிலுமடைத்தனர். கடந்த 20 ஆண்டுகளாக சிறையிலும் ,வீட்டுக் காவலிலும் அவர் அடைக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் , ஐ.நா.மற்றும் உலக நாடுகளின் நெருக்கடியை அடுத்து அடுத்த மாதம் 7 ஆம் திகதி தேர்தல் நடத்தப்படும் என மியன்மார் அரசு அறிவித்துள்ளது. இது குறித்து மியன்மார் எதிர்க்கட்சியான தேசிய ஜனநாயக அமைப்பின் தலைவர் தான் நெயின் கூறுகையில் , பல ஆண்டு இடைவெளிக்குப் பின் தேர்தல் நடப்பதன் மூலம் மியன்மாரில் ஜனநாயகம் மலரும் நிலை ஏற்பட்டுள்ளது என்றார்.

தேர்தல் முறையான விதிமுறைகளின் படி நடத்தப்படவில்லை எனக் கூறி சூகி கட்சியினர் தேர்தலை புறக்கணித்துள்ளனர். இதற்கிடையே சூகியின் வீட்டுக் காவல் எதிர்வரும் நவம்பர் மாதம் 13 ஆம் திகதியுடன் முடிவுக்கு வருகிறது.

அவருக்கு பொது மன்னிப்பு அளித்து விடுவிக்கப்படுவதற்கான வாய்ப்பு உள்ளதா என்பது குறித்து மியன்மார் மக்கள் பரபரப்பாகப் பேசி வருகின்றனர். (ஸ்ரீ-2)

# நிதி திரட்ட புதிய உத்தியை கையாளும் தலிபான்கள்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் புகலிடமாகியுள்ள தலிபான் தீவிரவாதிகள் தங்களது பயங்கரவாத செயல்களுக்கு நிதி திரட்ட புதிய உத்தியை கையாளத்தொடங்கியுள்ளனர்.

உலக நாடுகளின் கெடுபிடியால் நிதி கிடைப்பதில் தலிபான்களுக்கு சிக்கல் ஏற்பட்டுள்ளது. இதனால் அவர்கள் தங்களது வழக்கமான பாணியை கைவிட்டு வி.ஐ.பி.களைக்கடத்தி வந்து மிரட்டி பணம் பறிக்கும் புதிய உத்தியை கையாளத் தொடங்கி யுள்ளனர்.

தலிபான்கள் வி.ஐ.பிக்களை குறி வைக்க தொடங்கியுள்ளதால் பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் உள்ளிட்ட தலிபான்கள் மற்றும் தலிபான்களின் ஆதரவாளர்கள் ஆதிக்கம் மிகுந்த நாடுகளில் வசிக்கும் வி.ஐ.பிக்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர். தலிபான்களிடம் தாங்கள் சிக்கிக்கொள்ளாமல் இருக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

குறிப்பாக பாகிஸ்தானில் உள்ள வி.ஐ.பிக்கள் கடும் எச்சரிக்கையாகவுள்ளனர். எந்த நேரத்திலும் தலிபான்கள் தங்களுக்கு வலை விரிக்கலாம் என்ற அச்சமும் கவலையும் அவர்களைத் தொற்றிக்கொண்டுள்ளன. இதை சில'முக்கிய வி.ஐ.பிக்களின் முகத்தில் காண முடிகிறது. (ஸ்ரீ-2)

# ருவாண்டாவின் கிளர்ச்சிக்குழு தலைவர் பிரான்சில் கைது



ருவாண்டாவின் எப்.டி.எல்.ஆர். கிளர்ச்சிக் குழுத் தலைவர் கல்லிக்ஸ்டி மபாரிசிமானார் பிரான்ஸில் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யுத்தம் குற்றச் செயல்களில் ஈடுபட்ட குற்றத்திற்காக மபாரிசிமானா கைது செய்யப்பட்டுள்ளதாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

மபாரிசிமானாவிற்கு எதிராக படுகொலைகள், பாலியல் வல்லுறவு உள்ளிட்ட 11 குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எப்.எல்.டி.ஆர். கிளர்ச்சிக் குழுவினர் பாரியளவில் பாலியல் வல்லுறவுச் சம்பவங்களில் ஈடுபட்டதாக அண்மையில் ஊடகங்களில் குற்றம் சுமத்தப்பட்டிருந்தபோதிலும் எவ்வாறெனினும் குறித்த கிளர்ச்சிக்குழு இக் குற்றச்சாட்டுக்களை நிராகரித்துள்ளன.

டுட்சி மற்றும் ஹூட்டு இனத்தவர்களின் மீது எப்.எல்.டி.ஆர். கிளர்ச்சிக்குழு இன வன்முறைகளை கட்டவிழ்த்துவிட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளதுடன் மனித உரிமை மீறல் மற்றும் யுத்தக் குற்றச் செயல்களில் ஈடுபட்டதாக மபாரிசிமானவிற்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கொங்கோவில் இடம்பெற்ற பாரிய பாலியல் வல்லுறவுச் சம்பவங்களுக்கு தண்டனை விதிப்பதற்கு மபாரிசிமானாவின் கைது முக்கியமானதாக அமையும் என சர்வதேச நீதிமன்றம் கருத்து வெளியிட்டுள்ளது.(ஸ்ரீ-2)



சீனத் தொலைக்காட்சி நிறுவனமொன்று திறமையானவர்களை வெளிக் கொண்டு வரும் போட்டியினை நடத்தியது. சிறுவயதில் விபத்தினால் இரு கை களையும் இழந்த இந்த 23 வயது லீயூவியீ எனும் பியானோ கலைஞன் தனது இரு கால் விரல்களால் பியானோவை வாசித்து சாதித்து காட்டினார்.

# சீன அரசாங்கம் மாற்றுக் கருத்துக்களை வரவேற்பதில்லை -தலாய்லாமா தெரிவிப்பு



சீன அரசாங்கம் மாற்றுக் கருத்துக்களை வரவேற்பதில்லை என திபெத்தின் ஆன்மீகத் தலைவர் தலாய்லாமா தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாகவே சிறைத்தண்டனை அனுபவித்து வரும் லியூ எக்ஸியாபோவிற்கு நோபல் சமாதான விருது வழங்கப்பட்டமைக்கு எதிர்ப்பு வெளியிட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

திறந்த சமூகமொன்றை கட்டியெழுப்புவதன் மூலமே சீன மக்களை காப்பாற்றக் கூடிய ஒரே வழி என தெரிவித்துள்ளா.

கடந்த 1989ஆம் ஆண்டிற்கான நோபல் சமாதான பரிசு தலாய்லாமாவிற்கு வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.


சீன அரசாங்கத்தின் கொள்கைகளில் மாற்றம் தேவை என அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார்.

கொயோடோ ஊடக நிறுவனத்திற்கு அளித்த செவ்வியின் போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை சிறைத்தண்டனை அனுபவித்து வரும் லியூ எக்ஸியாபோவின் மனைவியும் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் இதற்கான காரணம் கணவருக்குக் கிடைக்கப்பெறவுள்ள நோபல் சமாதான விருதினை தியனமன் சதுக்கத்தில் உயிர் நீத்தவர்களுக்கு அர்ப்பணிப்பதாக எக்ஸியாபோவின் மனைவி அறிவித்ததனை அடுத்து சீன அரசாங்கம் அவரை வீட்டுக் காவலில் வைத்துள்ளது.

நோபல் சமாதான விருது சரியான முறையில் வழங்கப்படவில்லை எனவும் இது தொடர்பில் நோர்வே தூதுவரை அழைத்து உத்தியோகபூர்வ எதிர்ப்பை வெளியிட உள்ளதாகவும் சீனா அறிவித்துள்ளது. (ஸ்ரீ-2)



பிரான்ஸ் வந்திருந்த பிரித்தானிய முன்னாள் பிரதமர் டோனி பிளேயரை (இடது) அந்நாட்டு ஜனாதிபதி நிக்கோலஸ் சர்கோஸி பாரீஸ் ஜனாதிபதி மாளிகையில் வரவேற்பதை படத்தில் காணலாம்.

# 370 கோடி ஆண்டில் பிரபஞ்சம் அழியும்

(வோஷிங்டன்)



எதிர்வரும் 2012 ஆம் ஆண்டில் உலகம் அழிந்து விடும் என்று பரபரப்பாக செய்திகள் வந்து ஓய்ந்துள்ளன.

ஆனால் உலகம் அழிய 370 கோடி ஆண்டுகள் ஆகும் என்று அமெரிக்க ஆய்வாளர்கள் கணித்துள்ளனர் .

கலிபோர்னிய பல்கலைக்கழக இயற்பியல் துறை விஞ்ஞானி ரபேல் பவுசோ தலைமையிலான குழுவினர் பிரபஞ்சம் குறித்து ஆய்வில் ஈடுபட்டுள்ளனர் .


அவர்கள் கூறியதாவது,

அண்ட வெளியில் நீர்க்குமிழி போன்ற சில இரசாயன குமிழிகள் உருவாகி உள்ளன. அவை வடிவில் பெரியதாகி வருகின்றன. பலகுமிழிகள் உடைந்து மறைந்து விடுகின்றன. அவற்றில் ஏராளமான குமிழிகள் நாளுக்கு நாள் பெரிதாகி வருகின்றன. நீர் கொதிக்கும் போது ஏற்படும் குமிழிகள் போல் அவை உள்ளன. இது போன்ற குமிழிகள் எண்ணிக்கையில் அடங்காத அளவுக்குப் பெரிதாகும் போது அண்டவெளி உட்பட எல்லாமே அழியும். அதற்கு 370 கோடி ஆண்டுகள் ஆகும் என ரபேல் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

இந்த ஆய்வை அவுஸ்திரேலிய பல்கலைக்கழ்க விஞ்ஞானிகள் கிண்டலடித்துள்ளனர். அமெரிக்க ஆய்வுக்குழு ஏதோ புள்ளியியல் விபரங்களை வெளியிட்டுள்ளது. பிரபஞ்சம் பற்றிய அவர்களுடைய கணக்கில் உள்ள பிரச்சினைகளுக்கு முடிவே கிடைக்காது. அதனால் பிரபஞ்சம் உண்மையில் அழியும் என்ற முடிவுக்கு வந்துள்ளனர் என்று கிண்டல் செய்துள்ளனர். (ஸ்ரீ-2)





வடமாகாண கைத்தொழில் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் நேற்றுக் காலை நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் , அமெரிக்க வர்த்தக குழு பிரதிநிதி மைக்கல் டிலானி மங்கள விளக்கேற்றுவதையும் , வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி, அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் எம். விக்கிரமசூரிய, அமெரிக்க வர்த்தக குழு பிரதிநிதி மைக்கல் டிலானி ஆகியோர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-எஸ்.கரன்,என்.குமார்)

## வடமராட்சி தெற்கு-மேற்கு பிரதேச சர்வதேச சிறுவர் தின விழா

வடமராட்சி தெற்கு- மேற்கு பிரதேச சர்வதேச சிறுவர் தின விழா எதிர்வரும் 18 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு கரவெட்டி பிரதேச செயலர் சி.சத்தியசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவிற்கு பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் கலந்து கொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராஜா , சிறுவர் பாதுகாப்பு திட்ட முகாமையாளர் கே.மகேந்திரன் , கௌரவ விருந்தினராக மாவட்ட நன்னடத்தை அலுவலர் எஸ்.சிவகரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இவ்விழாவில் 2010 ஆம் ஆண்டு 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான கௌர விப்பு நிகழ்ச்சியும் சிறுவர் தினம் தொடர்பாக நடைபெற்ற போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்ச்சியும் சிறுவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. (ஸ்ரீ)

## மீளக்குடியேறிய விவசாயிகளுக்கு நீரிறைக்கும் இயந்திரம் கையளிப்பு

(பூநகரி)

பூநகரியில் இருந்து இடம் பெயர்ந்து மீளக்குடியேறி விவசாயத்தில் ஈடுபட்டுள்ள பூநகரிப்பகுதியைச் சேர்ந்த 200 பயனாளிகளுக்கு அலையன்ஸ் அபிவிருத்தி நிதியத்தால் (ADP) நீர் இறைக்கும் இயந்திரம் வழங்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை பூநகரி பிரதேச செயலக வளாகத்தில் இடம் பெற்றது.

மேலும் மட்டுவில் நாடு மேற்கு, மட்டுவில் நாடு கிழக்கு, கொல்லகுறிச்சி, நல்லூர், ஆலங்கேணி, கரியால நாகபடுவான், கிராஞ்சி, ஜெயபுரம் ஆகிய கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கே இவ் உதவி வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் அலையன்ஸ் அபிவிருத்தி நிதிய தேசிய இணைப்பாளர், 66 ஆவது டிவிஷன் சிவில் அலுவலர் கேணல் கருணரட்ணா, பூநகரி பதில் உதவி அரசாங்க அதிபர் எஸ்.சத்தியசீலன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-84)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

### மாவிலங்கு

Botanical Name - Crataeva religiosa
Family - Capparidaceae
Engl - Three Leaved caper
Sinh - Lunu-warana

இது சிறிய அல்லது நடுத்தர மரவகையைச் சேர்ந்தது. பல கிளைகளைக் கொண்டது. இலை 3 பிரிவுகளைக் கொண்ட தனி இலைகளாகும் 5-15 செ.மீ. நீளமும் 3.8 - 6.3 செ.மீ அகலமுடையது நீள்வட்ட வடிவானவை. நுனி கூரானது. பட்டை சாம்பல் நிறமுடையது. மரத்தின் உயரம் கிட்டத்தட்ட 6-10 மீற்றராகும்.

பெரும்பாலும் பட்டை மள மளப்பாகவும் சிறிதான நீண்ட வட்ட வடிவ சுருக்கங்களை கொண்டிருக்கும். பூக்கள் வெண்மை நிறமானவை ஏராளமான பூக்கள் காணப்படும். பழங்கள் நீள்வட்ட வடிவானவை. செந்நிறமுடையது. விதைகள் பழத்தின் சதையில் புதைந்து இருக்கும்.




### பரம்பலும் ,இனவிருத்தியும்:

கூடுதலாக கோயில்களைச் சுற்றி பயிரிட்டு வளர்ப்பார்கள். விதைகள் மூலம் இனவிருத்தி செய்யலாம் எல்லாவகை மண்களிலும் வளரக் கூடியது.

### மருத்துவப் பயன்கள்:

பஞ்ச வில்வங்களில் ஒன்றாகும். இதனுடைய இலைகள், பட்டைகள், வேர்கள் மருத்துவ குணம் மிகுந்தவை.

◆ ஒரு கைப்பிடி இலைகளை எடுத்து 5 கிராம் சுக்கு (வேர்க்கொம்பு) 5 கிராம் சீரகம் , 500 மில்லி நீரில் போட்டு கால் பங்காக காய்ச்சி 60 மில்லி அளவு தினம் 3 வேளை சாப்பாட்டிற்கு முன்பு உட்கொண்டு வர வாதக் காய்ச்சல் , செரியாமை , வாய்வு குணமாகும். வாதக்காய்ச்சல் என்பது மூட்டுகளைக் தாக்கி ஏற்படும் காய்ச்சலாகும்.

◆ இலைகளை அரைத்து பற்றிட வீக்கம் வாத வீக்கம் தணியும்.

◆ 100 கிராம் இலைகளை 500 மில்லி நீரில் போட்டு 250 மில்லியாகக் காய்ச்சி வடித்து 100 மில்லி தேங்காய்ப்பால் சேர்த்து நாளும் 30 மில்லி அளவு 10-20 நாட்கள் குடித்துவர முடக்கு வாதம் குணமாகும்.

◆ இதன் இலைகளை நிழலில் உலர்த்தி இடித்து , பொடித்து , அரித்து பொடி போல் மூக்கில் வைத்து இழுக்க பீனிசம் சளி குண மாகும்.

◆ மாவிலங்கம் பட்டை, மருதப்பட்டை ஒவ்வொன்றும் 50 கிராம் போட்டு 500 மில்லி நீர் சேர்த்து 125 மில்லியாக குடி நீராக்கி 60 மில்லி அளவு காலை, மாலை 10 நாட்கள் குடித்து வர மூட்டுக்களில் ஏற்படும் வலி, வீக்கம் என்பன அகலும்.

◆ சிறுநீரகத்தில் ஏற்படும் கல்லடைப்பிற்கு மாவிங்கப்பட்டை ஓர் சிறந்த மூலிகை மருந்தாகும்.

◆ இதற்கு மாவிலங்கம்பட்டை 100 கிராம் எடுத்து , 500 மில்லி நீர் விட்டு 125 மில்லியாக வற்றக்காய்ச்சி குடிநீராக்கி 60 மில்லி காலை , மாலை குடித்துவர கல்லடைப்பு தீரும் தொடர்ந்து 10 நாட்கள் குடித்து வரலாம்.

◆ மாதவிலக்கை ஒழுங்காக்கவும் மாதவிலக்கு காலத்தில் ஏற்படும் வயிற்று வலியை நீக்குவதற்கும் மாவிலங்குப்பட்டை 30 கிராம் , உள்ளி 20 கிராம் , மிளகு 10 கிராம் சேர்த்து தேவையான அளவு நீர்விட்டு அரைத்து 10 கிராம் அளவு காலை ,மாலை தேனில் கொடுக்க மேற்படி நோய் நிலைமை தீரும்.

◆ இதன் பச்சைப் பட்டையை அரைத்து வைத்து பற்றிட கட்டிகள் கரையும்.

◆ நீரிழிவு நோயாளிகளிற்கு ஏற்படும் பாத எரிச்சலிற்கு இதன் இலைகளை அரைத்து உள்ளங்காலில் இரவில் பற்றிட்டு உறங்க வேண்டும். எரிச்சல் நன்கு தணியும்.


◆ என்பு முறிவால் ஏற்படும் வலியை குறைக்க மாவிலங்கம் இலைத்துளிர் இரண்டு பங்கு , புளியிலை ஒரு பங்கு இத்துடன் சிறிதளவு மஞ்சளும் உப்பும் கூட்டி இடித்து வைத்துக் கட்டவும்.

◆ என்பு முறிவின் பின் ஏற்படும் வலியை தணித்து அசைவுகளை சீர்படுத்த நறுவிலி , மாவிலங்கு , முருங்கை இவற்றின் பட்டைகள் ஒவ்வொன்றும் 50 கிராம் எடுத்து நன்றாக இடித்து 400 மில்லி வெந்நீரில் ஊறப் போட்டு நன்கு அரைத்து கிளறி பிசைந்து முறிந்த இடத்தில் அணைத்து மூங்கில் சிவி வைத்து கட்டி கழற்றிய பின்பு எண்ணெய் பூசிவிடவும்.

**டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S.)**
**சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை,**
**யாழ். பல்கலைக்கழகம், கைதடி.**

# கர்நாடகத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சியை அமுல்படுத்த வேண்டும்

## கி.வீரமணி கோரிக்கை



(சென்னை)


கர்நாடக மாநிலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சியை அமுல்படுத்த வேண்டும் என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி கூறி யுள்ளார்.

இதுகுறித்து அவர் நேற்று வெளியிட் டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது ,

எடியூரப்பா அரசை பெரும்பான்மையை நிரூபிக்க ஆளுநர் உத்தரவிட்ட நிலையில் 5 சுயேட்சை எம்.எல்.ஏ.க்கள் உட்பட 16 எம். எல்.ஏ.க்களை தகுதி நீக்கம் செய்துள்ளனர். கட்சித் தாவல் சட்டம் சுயேட்சை எம்.எல். ஏ.க் களை கட்டுப் படுத்தாது. மேலும் கட்சி கொற டாவின் உத்தரவை மீறி 11 பா.ஜ.க. எம்.எல்.ஏ க் கள் வாக்களித்த பின்னர் தான் அவர்களை தகுதி நீக்கம் செய்த முடியும்.

குரல்வாக்கெடுப்பு மூலம் ஒரு வாக்கு கூடு தலாக பெற்று எடியூரப்பா அரசு வெற்றி பெற்று விட்டதாக அறிவித்தது சட்ட விரோதமான செயல். சட்டப் பேரவையில் நடைபெற்ற அமளி, அடிதடி, கூச்சல், குழப்பம் நாட்டின் ஜன நாயகத்திற்கே மிகப்பெரிய களங்கத்தை உண்டாக்கிய தேசிய அவமானம் ஆகும். எனவே உடனடியாக எடியூரப்பா அரசை நீக்கிவிட்டு அங்கு குடியரசுத் தலைவர் ஆட் சியை அமுல்படுத்த வேண்டும். இவ்வாறு கி.வீரமணி தனது அறிக்கையில் தெரிவித் துள்ளார். (ஸ்ரீ)

# முதலமைச்சர் கருணாநிதிக்கு கொலை மிரட்டல் கடிதம்



(சென்னை)

முதலமைச்சர் கருணாநிதிக்கு மின் அஞ்சல் மூலம் கொலை மிரட்டல் கடிதம் வந்துள்ளது. காரில் குண்டு வைத்து கொல்வோம் என்று அந்தக் கடிதத்தில் மிரட்டல் வாசகங்கள் இடம் பெற்றுள்ளன. நேற்று முன்தினம் பகல் 1.37 மணிக்கு முதலமைச்சர் கருணாநிதியின் தனிப்பிரிவு அலுவலகத்திற்கு மின் அஞ்சல் மூலம் ஒரு மிரட்டல் கடிதம் வந்தது.

அந்தக் கடிதத்தில் முதலமைச்சர் கருணாநிதிக்கு கொலை மிரட்டல் விடுத்து வாசகங்கள் இடம் பெற்றிருந்தன. எங்கள் தலைவி ஜெயலலிதா அம்மாவோடு நீ மோது வது எங்களுக்குப்பிடிக்கவில்லை. ஆகையால் நீ உயிருடன் இருப்பதை நாங்கள் விரும்பவில்லை. நீ வெளியில் செல்லும் சமயம் உன்னை கொலை செய்வதற்கு நாங்கள் ஏற்பாடு செய்த எங்களது 3 ஆட்கள் உன்னுடனேயே இருக்கிறார்கள். நீ செல்லும் காரில் வெடிகுண்டு வைக்க உள்ளோம். இந்தத் தகவல் உறுதியான தகவல்.

என கடித வாசகங்கள் இருந்ததாக நேற்று முன்தினம் இரவு சென்னை பொலிஸ் கமிஷனர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

கடிதத்தில் கடிதம் அனுப்பியவரின் பெயர் விபரம் எதுவும் இல்லை. இந்த் மிரட்டல் கடிதம் சென்னை மத்திய குற்றப் பிரிவு பொலிஸாரிடம் கொடுக்கப்பட்டு உரிய விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. இது தொடர்பாக வழக்குப்பதிவு செய்து மத்திய குற்றப் பிரிவு பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (ஸ்ரீ-2)

# கர்நாடக மாநிலத்தில் ஜனாதிபதி ஆட்சிக்கு அம்மாநில ஆளுநர் பரிந்துரை



(பெங்களூர்)

கர்நாடக சட்டப்பேரவையில் நடந்த நம்பிக்கை வாக்கெடுப்பில் எடியூரப்பா தலைமையிலான பி.ஜே.பி அரசு வெற்றி பெற்ற சூழலில் அங்கு ஜனாதிபதி ஆட்சியை அமுல்படுத்த அம்மாநில ஆளுநர் பரத்வாஜ் பரிந்துரைத்துள்ளார்.

கார்நாடக சட்டப்பேரவையில் பெரும் ரகளைகளுக்கிடையே நேற்று நம்பிக்கை வாக்கெடுப்பு நடைபெற்றது. இதில் எடி யூரப்பா அரசு வெற்றி பெற்றதாக சபாநாயகர் அறிவித்தார்.


பி.ஜே.பி அரசுக்கு எதிராக சுயேட்சைகள் உட்பட பி.ஜே.பி:எம்.எல்ஏக்கள் போர்க் கொடி உயர்த்தியதன் தொடர்ச்சியாக நேற்றுடன் அரசுக்கு பெரும்பான்மைப்பலத்தை நிரூபிக்கும்படி, முதல்வர் எடியூரப்பாவுக்கு கர்நாடக ஆளுநர் பரத்வாஜ் உத்தரவிட்டார். இந் நிலையில் அதிருப்தி எம்.எல்ஏக்கள் 16பேரை (பி.ஜே.பி-11,சுயேட்சை- 5) தகுதி நீக்கம் செய்வதாக சபாநாயகர் அறிவித்தார். ஆளு நரின் தடை உத்தரவையும் மீறி அவர் களது பதவியை கட்சி மாறும் தடைச்சட்டத்தில் சபாநாயகர் செல்லாது என அறிவித்தார்.

அதற்கான ஆணையை சம்பந்தப்பட்ட எம்.எல்ஏக்களுக்கு அவர் அனுப்பி வைத்தார். இதைத்தொடர்ந்து சட்டப்பேரவையில் நம்பிக்கை வாக்கெடுப்பு நடைபெறுகின்ற சூழலில்,அதிருப்தி எம்.எல்.ஏக்கள் 16 பேரும் சட்டப்பேரவைக்கு அத்துமீறி நுழைந் தனர். அப்போது அவைக்காவலர்களுக்கும் அவர்களுக்குமிடையே கடும் மோதல் ஏற்பட்டது.

தேவகவுடாவின் ஜனதாத்தள எம்.எல். ஏக்களுடன் சேர்ந்து தகுதி நீக்கம் செய்யப்பட்ட 16 எம்.எல்ஏக்களும், தேவகவுடாவின் மகன் ரேவண்ணா தலைமையில் கைகலப்பில் ஈடுபட்டனர். இதில் அவைக் காவலர்களுக்கு காயம் ஏற்பட்டது. இந்த பர பரப்புக்கிடையே கர்நாடக சட்டப்பேரவையில் நடந்த நம் பிக்கை வாக்கெடுப்பில் முதல்வர் எடியூரப்பா வெற்றி பெற்றதாக சபாநாயகர் போப்பையா அறிவித்தார்.

பேரவையில் நடத்தப்பட்ட குரல் வாக்கெடுப்பில் எடியூரப்பா அரசு வெற்றி பெற்றதாக அறிவித்துவிட்டு,சட்டப்பேரவையை அவர் ஒத்தி வைத்தார். இந்நிலையில் கார்நாடக பிரச்சினை தொடர்பாக மத்திய அரசுக்கு அம்மாநில ஆளுநர் பரத்வாஜ் நேற்று அறிக்கை ஒன்றை அனுப்பினார். அதில் , கர்நாடகத்தில் ஜனாதிபதி ஆட்சியை அமுல்படுத்த பரிந்துரைத்துள்ள அவர் ,இன்றைய நம்பிக்கை வாக்கெடுப்பை போலியானது என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும் சுயேட்சை எம்எல்.ஏக்களை கட்சித்தாவல் தடைச்சட்டத்தின் கீழ் சபாநாயகர் தகுதி நீக்கம் செய்தது விதி மீறல் என்றும் அவர் குற்றஞ் சாட்டியுள்ளார். (ஸ்ரீ-2)



கர்நாடகா சட்டசபை சபாநாயகர் இருக்கை முன்பு ரகளையில் ஈடுபட்ட எதிர்க்கட்சியினரை தடுக்கும் பாதுகாவலர்கள்.

# இலங்கை அகதிகளுக்கு சாரதி அனுமதிப்பத்திரம்

தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள தாப்பாத்தி முகாமிலுள்ள இலங்கை அகதிகளுக்கு சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை அகதிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் அவர்களுக்கு சாரதி அனுமதிப்பத்திரம் வழங்க தூத்துக்குடி மாவட்ட நிர்வாகம் முடிவெடுத்தது.

அதன்படி தாப்பாத்தி முகாமிலுள்ள 170 பேருக்கு பயிற்சியாளர் உரிமம் வழங்கப்பட்டது. இவர்களில் அடுத்த கட்ட தேர்வில் தேர்ச்சி பெற்ற 90 பேருக்கு கோவில் பட்டி ஆர்.டி.ஓ அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்வாளர் சத்தியமூர்த்தி சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கினார். அவர்களில் 35 பேருக்கு இலகு ரக வாகன மோட்டார் சைக்கிள் ஓட்டும் உரிமங்களும் 55 பேருக்கு மோட்டார் சைக்கில் ஓட்டும் உரிமங்களும் வழங்கப்பட்டன. (ஸ்ரீ)

## பாரதச் செய்திகள்

# நிதித்துறை சீர்திருத்தங்களில் பின்னணியா?-பிரணாப் மறுப்பு



யாருடைய வருகையை முன்னிட்டும் இந்தியாவில் நிதித்துறை சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படவில்லை. இந்தியப் பொருளாதார நலனை முன்னிட்டே அவை செய்யப்படுகின்றன என்று மத்திய நிதியமைச்சர் பிரணாப் தெரிவித்துள்ளார்.

மத்திய அரசு வரவிருக்கும் பாராளுமன்ற மழைக்கால கூட்டத்தொடரில் நேரடி வரி குறித்த மசோதா ஒன்றையும் ஓய்வூதியம் மற்றும் காப்புறுதி தொடர்பான சட்டங்களையும் நிறைவேற்ற திட்டமிட்டுள்ளது.

ஆனால் நிதித்துறையில் மேற்கொள்ளப்படும் இந்த சீர்திருத்தங்கள் அமெரிக்க அதிபர் ஒபாமாவின் வருகையை முன்னிட்டு செய்யப்படுவதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.ஐ.எம்.எப் மற்றும் உலக வங்கியின் ஆண்டு கூட்டத்தில் பேசிய மத்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி இது குறித்து கூறுகையில்,

இந்தியப் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக இந்த சீர்திருத்தங்கள் தேவை. இதற்கும் எவருடைய வருகைக்கும் தொடர்பில்லை. வெளியில் இருந்து நெருக்கடி வந்ததா என்ற கேள் விக்கே இடம் இல்லை. இந்தச் சட்டங்களை நிறைவேற்ற காங்கிரசுக்கு பாராளுமன்றில் போதுமான ஆரதவு எண்ணிக்கை இல்லை.

ஓய்வூதியம் மற்றும் காப்புறுதி தொடர்பான சட்டங்களை நிறைவேற்ற இது ஒரு தடையாக இருக்கிறது.

கடந்த 2004 ஆம் ஆண்டி லேயே ஓய்வூதிய சீர்திருத்த மசோதா பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. ஆனால் அப்போது அது குறித்த கருத்தொற்றுமை ஏற்படாததால் அதை நிறைவேற்றமுடியவில்லை என பிரணாப் முகர்ஜி தெரிவித்தார்.

இதனிடையே ஆசியாவின் சிறந்த நிதியமைச்சர் என்ற விருது பிரணாப் முகர்ஜிக்கு வழங்கப்படுகிறது. நிதி விடயங்களில் அவர் கையாண்ட சிறப்பான தன்மை மற்றும் கச்சா எண்ணெய் விலை நிர்ணயம் ஆகியவற்றிக்காக இவ்விருது வழங்கப்படுவதாக தெரிய வருகிறது. (ஸ்ரீ-2)

# அமைச்சருக்கு இடையூறு விளைவித்ததாக கூறப்படும் மாணவர்கள் தலைமறைவு

(கொழும்பு)

பேராதனைப்பல்கலைக்கழகத்திற்கு விஜயம் செய்த அமைச்சர் எஸ். பி. திசாநாயக்கவிற்கு இடையூறு விளைவித்ததாக கூறப்படும் மேலும் நான்கு மாணவர்கள் தேடப்பட்டு வருவதாக கண்டி பொலிஸார் தெரிவித்துள்ளனர் .

விசாரணைக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்ட நிலையில் குறித்த நான்கு பேரும் தலைமறைவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர் .

இந்த நிலையில் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் அண்மையில் நான்கு மாணவர்கள் கைது செய்யப்பட்டு எதிர்வரும் 21ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஜுலை மாதம் 12ஆம் திகதி அமைச்சர் பேராதனைப்பல்கலைக்கழகத்திற்கு விஜயம் செய்த போது இடையூறு விளைவிக்கப்பட்டதாக பேராதனைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ)

# சவுதியின் தடைக்கு ஆரியவதி விவகாரமே பிரதான காரணம்

சவுதி அரேபிய எஜமானர்களால் பணிப்பெண் ஆரியவதி ஆணிகளால் உடலில் பல பாகங்களிலும் அறையப்பட்டார் என்று சுமத்தப்பட்டிருக்கும் குற்றச்சாட்டின் எதிரொலியாகவே இலங்கையிலிருந்து பணிப் பெண்களை வேலைக்குச் சேர்க்க சவுதி அரசு தடை போட உத்தேசித்துள்ளது.

இலங்கைப் பணிப்பெண்கள் பயிற்றப்படாமல் வேலைக்கு அனுப்பிவைக்கப்படுகிறார்கள் என்பதே இத்தடைக்கான காரணம் என்று சவுதி அரேபிய அரசால் வெளியில் கூறப்பட்டாலும் கூட ஆரியவதி விவகாரமே உண்மையான காரணம் என்று தெரியவந்துள்ளது.

ஆரியவதியாலும் இலங்கை அரசாலும் முன்வைக்கப்பட்டிருக்கும் குற்றச்சாட்டு நாட்டுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தி விட்டது என்று சவுதிஅரேபிய தேசிய ஆட்சேர்ப்புத் திணைக்கள உயரதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

ஆனால் சவுதியில் தற்போது இலங்கைப் பணிப்பெண்கள் 5 இலட்சம் பேர் வரையானோர் பணியாற்றி வருகின்றனர்.

இவர்களுக்கு இத்தடையால் பாதிப்பு ஏற்படாது என்று சவுதி அரசு அறிவித்துள்ளது. (ஸ்ரீ-2)

# வலய மட்ட கணித விநாடி வினாப்போட்டி முடிபுகள்

தீவகக் கல்வி வலயத்தினால் நடத்தப்பட்ட வலயமட்ட கணித விநாடி வினாப் போட்டிகளின் முடிவுகள் வலயக் கல்விப் பணிப்பாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டிகளில் முதல் 3 இடங்களைப் பெற்ற மாணவர்களின் பெயர் விபரம் வருமாறு;

**(தமிழ் மொழி மூலம்)**

**தரம் 6**

உ.சிபைனியா, க.தனுஜா றெகேமி (நெடுந்தீவு றோ.க.ம. கல்லூரி), க.கஜெந்தன் (கலாநிதி ஆ.தியாகராஜா மத்திய மகா.வித்தி யாலயம்)

**தரம் 7**

அ.திலக்ஷனாமேரி (நெடுந்தீவு றோ.க. ம.கல்லூரி), இ.பவானந்தன், சி.விதுஷா (கலாநிதி ஆ.தியாகராஜா ம.மகா.வித்தியாலயம்)

**தரம் 8**

ஆ.காயத்திரி(யாழ்ற்ரன் கல்லூரி), அ.கஜேந்திரன், தி.கீர்த்திகா(வேலணை மேற்கு நடராஜ வித்தியாலயம்)

**தரம் 9**

க.சாந்தினி (கலாநிதி ஆ.தியாகராஜா ம. மகா வித்தியாலயம்), சி.சஞ்சைக்குமார் (வேலணை மத்திய கல்லூரி), யோ.பெர்ணான்டோ ஜோண்ஜெறி (கரம்பொன் சண்முகநாத மகா வித்தியாலயம்)

**தரம் 10**

ப.மதிஸ்சன் (வேலணை மத்திய கல்லூரி), த.தேனுஜா (வேலணை மேற்கு நடராஜ வித்தியாலயம்), யோ.விதுசா (கலாநிதி ஆ.தியாகராஜா ம.மகா வித்தியாலயம்)

**தரம் 11**

வி.யதுர்சனன் (வேலணை மத்திய கல்லூரி), ந.ஜனனி (யாழ்ற்ரன் கல்லூரி), சோ.வேணுஜா (வேலணை மத்திய கல்லூரி)

**ஆங்கிலமொழி மூலம்**

**தரம்-06**

எஸ்.நவநீத்,எஸ்.ரோகினி (யாழ்ற்ரன் கல்லூரி)

**தரம்-07**

ரி.சயந்தன், எஸ்.சசிதரன்,எஸ். கமலேஸ்வரி (யாழ்ற்ரன் கல்லூரி)

**தரம்-08**

ரி.ஆரணி (யாழ்ற்ரன் கல்லூரி), ஆர்.வித்தியா, எஸ்.ராகவன் (கலாநிதி ஆ.தியாகராசா ம.மகா வித்தியாலயம்)

**தரம் 9**

ரி. நிரோஜன் (கலாநிதி ஆ.தியாகராஜா ம.மகா. வித்தியாலயம்), எஸ். சரவணன், கே. சுஜிந்தன் (யாழ்/யாழ்ற்ரன் கல்லூரி)

**தரம் 10**

ரி. கௌரீதரன், ஜி.கலைச் செல்வி, எஸ். ஐஸ்வரியா (யா/யாழ்ற்ரன் கல்லூரி)

**தரம் 11**

எஸ். டினேஸ்குமார், என்.தவரஞ்சன், கே. சிவநிரஞ்சனா (கலாநிதி ஆ. தியாகராஜா ம.மகா வித்தியாலயம்). (ஸ்ரீ-2-246)

# வன்னிமக்கள் உளத்தாக்கத்திலிருந்து மீள இன்னும் 20 வருடங்கள் எடுக்கும்

## உளநல மருத்துவர் சிவதாஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் உளப்பாதிப்புகள் முற்றாக இல்லாமல் போவதற்கு இன்னும் 20 வருடங்கள் வரையிலான காலப்பகுதி தேவைப்படுமென வவுனியா வைத்தியசாலையின் உளநலமருத்துவர் டாக்டர் எஸ்.சிவதாஸ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

போரின் போது வன்னியில் இருந்த சகலருமே கடும் உளத்தாக்கங்களுக்கு உட்பட்டனர். இதன் பின்னர் நீண்டகாலம் நலன்புரி நிலையங்களில் அடைபட்டிருந்தமை அந்தப் பாதிப்பினை அதிகரிக்கச் செய்துவிட்டது.

அதேசமயம் முகாமில் இருந்த போது பலர் நெருக்கமாக வாழ்ந்தமையால் ஒரு பாதுகாப்பான மனோநிலை மக்களிடம் இருந்தது. ஆனால் முகாமை விட்டு வெளியேறி தமது சொந்த இடங்களில் மீள்குடியேறிய பின்னர் அவர்கள் தனித்துப் போனதாக உணர்கிறார்கள். அத்தோடு அந்த இடங்களில் முன்னர் இருந்த சமூகச்சூழல் இப்போது இல்லை. அந்த இடங்களில் யுத்த காலத்தில் நிகழ்ந்த கொடூரங்கள் மீள ஞாபகத்துக்கு வருவதும் உளப்பாதிப்புக்கள் அதிகரிப்பதற்கு ஏதுவாகிவிட்டது.

இத்தகைய உள பாதிப்புகளாலேயே அண்மைக்காலமாக வன்னியில் தற் கொலைக்கு முயற்சிப்போரின் வீதமும் குடும்ப முரண்பாடுகளின் வீதமும் அதிகரித்து வருகின்றன.

மேலும் மீள்குடியேறுவதற்கு முன்னர் மக்கள் உரியபடி உளரீதியாகத் தயார் படுத்தப்படவில்லை. இதுவும் முகாமில் இருந்ததை விடவும் மீள்குடியேறிய பின்னர் மக்களிடம் மனவடுவின் தாக்கம் அதிகரிக்க ஒரு காரணம். இந்த மக்களுக்கு உரிய குணமாக்கல் வெளிகளை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் அவர்களை விரைவாக அதிலிருந்து மீளச் செய்ய முடியும் என்றார். (ஸ்ரீ)

# கிழக்குத் தீமோரில் அகதிகள் இடைத்தங்கல் முகாம் ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கை

இலங்கை ,ஆப்கானிஸ்தான் போன்ற ஆசிய நாடுகளில் இருந்து அவுஸ்திரேலியாவுக்கு அரசியல் தஞ்சம் கோரி வருபவர்களின் புகலிடக்கோரிக்கைகளை பரிசிலிக்கவென கிழக்குத்தீமேரில் அகதிகள் இடைத்தங்கல் முகாம் ஒன்றை அமைப்பதற்கான முன்னெடுப்புக்கள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அவுஸ்திரேலிய குடிவரவு அமைச்சர் கிறிஸ்பவனிற்கும் கிழக்குத்தீமோர் ஜனாதிபதி ஜோஸ் ரமேஸ்கோர்டாவுக்கும் இடையில் பேச்சுக்கள் நேற்று முன்தினம் இடம்பெற்று ஆசிய வலயத்திற்கான அகதிகள் இடைத்தங்கல் முகாம் ஒன்றை அடுத்த வருடம் அமைக்கின்றமைக்கு கொள்கை அளவில் இணக்கப்பாடு வந்துள்ளது.

அடுத்த கட்ட நகர்வுகள் தொடர்பாக மலேசியா மற்றும் இந்தோனேசியா போன்ற நாடுகளின் ஆலோசனைகளை பெறவும் தீர்மானித்துள்ளார்கள்.

இந்நடவடிக்கைகளைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்காக அவுஸ்திரேலிய கிழக்குத் தீமோர் நிபுணர் குழுவொன்று நியமிக்கப்படவுள்ளதுடன் இதற்கு ஐக்கிய நாடுகள் சபையின் உதவியும் பெறப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# புலிகளின் 11 விமானக்குண்டுகள் முல்லைத்தீவில் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகளினால் முல்லைத்தீவு உடையார்கட்டு குளக்கரையோரமாக நிலக்கீழ் பங்கர் ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 11 விமானக் குண்டுகளை யாழ்ப்பாண விசேட விசாரணைப் பிரிவைச் சேர்ந்த பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

4 அடி நீளமும் இரண்டரை அடி சுற்றளவுடன் 75 கிலோ எடையில் நான்கு விமானக் குண்டுகளும் 4 அடி நீளமும் இரண்டடி சுற்றளவுடன் 50 கிலோ எடையில் 7 குண்டுகளுமாக மொத்தம் 11 குண்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

குண்டுகள் மறைத்து வைக்கப்பட்டிருந்த இடம் தொடர்பான தகவலை புனர்வாழ் வளிக்கப்பட்டிருக்கும் விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர் ஒருவரே வழங்கியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

புலிகள் இயக்கத்தின் விமானக் குண்டுகள் கைப்பற்றப்பட்ட முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

இதற்கு முன் கொலன்னாவை எண்ணெய்க் குதங் கள் மீது புலிகளினால் மேற்கொள்ளப்பட்ட விமானத் தாக்குதலின் போது வெடிக்காத குண்டு ஒன்றும் களனிதிஸ்ஸ மின்வலு நிலையத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது ஒரு குண்டுமாக வெடிக்காத குண்டு கள் இரண்டை இராணுவத்தினர் கண்டுபிடித்திருந்தனர்.

தற்போது கைப்பற்றப்பட்டுள்ள குண்டுகள் அவற்றை ஒத்திருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இக்குண்டுகள் அனைத்தும் வெளிநாட்டில் தயாரிக்கப்பட்டு தருவிக்கப்பட்டனவாக இருக்கக்கூடும் என்று தெரிவித்துள்ள பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ஸ்ரீ-2)


# விற்பனைக்கு

காரைநகர் அபிவிருத்தி சபைக்கு சொந்தமான NPLA 0609 இலக்க தண்ணீர் வவுசர் உடன் லொறி விற்பனைக்குண்டு. மேற்படி வாகனத்தை பார்வையிட விரும்புவோர் பின்வரும் முகவரியில் பார்வையிடலாம்.

V.நடராசா
இடைப்பிட்டி,
காரைநகர்.

மேற்படி வாகனத்தை கொள்வனவு செய்ய விரும்புவோர் தங்களது கொள்வனவு விலையை குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் 20.10.2010இற்கு முன்னர் காரைநகர் அபிவிருத்திச்சபை அலுவலகம், புதுறோட், காரைநகர் என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

**மேலதிக விபரங்களுக்கு:- 0777283812**

புதுறோட்,
காரைநகர்.
12.10.2010

தலைவர்,
காரைநகர் அபிவிருத்திச்சபை.

(2670)

உடையார் வீட்டுக்கோழி முட்டை குடியான வனின் அம்மிக் கல்லை உடைத்ததாம்.

- தமிழ்ப்பழமொழி

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## கோழியைக் கேட்டு குழம்பு வைக்கும் யாழ்ப்பாணத் தமிழர் நிர்வாகம்

கோழியைக் கேட்டு குழம்பு வைக்கும் கலாசாரமே தற்போது யாழ்ப்பாணத் தமிழ் நிர்வாகத்திடம் உள்ளது.

எதற்கெடுத்தாலும் ஆளும் தரப்பிடம் கருத்துக் கேட்டு அவர்கள் மனம் கோணாத வகையில் செயலாற்றுவதே சிறந்த நிர்வாகம் என்றாகிவிட்டது.

இம் மனநிலையால் சாதாரண தமிழ் மக்கள் சொல்லொணாத் துன்பத்தை அனுபவிக்கின்றனர்.

இதற்கு மேலாக சட்டமென்பது சகலருக்கும் சமம் என்ற தத்துவத்தையும் நாங்கள் மறந்து விடுகின்றோம். சிங்கள மக்கள் என்றால் அவர்களுக்கே முன்னுரிமை என்ற நினைப்பு.

இந்த நினைப்புக்கும் அரசுக்கோ அன்றி சிங்கள மக்களுக்கோ எந்தத் தொடர்பும் கிடையாது.

மாறாக உயர் பதவிகளில் இருக்கக்கூடிய தமிழ்ப் பெருந்தகைகளின் மனப் பயமும் மனப்பிரமையுமே இத்தகைய பாகுபாட்டிற்குக் காரணமாகும்.

“மன்னவனும் நீயோ வளநாடும் உன்னதோ...” என்று கேட்கும் கம்பனின் வீரம் நமக்கும் இருந்தால் போதும் எல்லாம் சரியாகிவிடும்.

அந்த வீரம் இனப்பற்றிருக்கும் போதே ஏற்பட முடியும். இதுபற்றி எல்லாம் இவ்விடத்தில் குறிப்பிடுவதால் எந்த நன்மையும் ஏற்படமாட்டா தென்பதால் அதனை அப்படியே விட்டு விடலாம்.

ஆனால் ஒரு விடயத்தைச் சொல்லித்தானாக வேண்டும். யாழ். குடாநாட்டிற்கு வருகை தருகின்ற தென்பகுதி மக்கள் யாழ்ப்பாணத்தின் பல்வேறு இடங்களையும் சென்று பார்வையிடுகின்றனர்.

மந்திரிமனை, நல்லூர் முருகன் ஆலயம், கோட்டை, நயினை நாகபூஷணி அம்மன் ஆலயம், வல்லிபுரம், கந்தரோடை இப்படி அவர்கள் பார்வையிடும் இடங்களின் பட்டோலையில் யாழ். பொது நூலகமும் இடம்பெற்றுள்ளது.

சிங்கள ஆட்சியாளர்களால் எரிக்கப்பட்ட யாழ். பொது நூலகத்தை பார்வையிடுவதால் ஒரு மன ஆறுதல் அவர்களுக்கு இருக்குமாயின் பரவாயில்லை. பொது நூலகத்தைச் சுற்றிப் பார்த்து விட்டுச் செல்லலாம்.

ஆனால் அவர்களோ பொது நூலகத்தின் வாசிப்புப் பகுதி ,இரவல் கொடுக்கும் பகுதி என சகலதையும் சுற்றிப் பார்வையிடுகின்றனர்.

எப்படி இருக்கின்றது நிலைமை. அங்கத்துவப் பணம் செலுத்தி உறுப்புரிமை பெற்றால் அன்றி பொது நூலகத்திற்குள் நுழைவது ஆகாது என்ற நிலை இருக்கும்போது இவர்களோ நூற்றுக் கணக்கில் நூலகத்திற்குள் நுழைவதும் பார்வையிடுவதும் மட்டுமன்றி சில புத்தகங்களை தம்மோடு எடுத்துச் செல்வதுமான துயரம் நடக்கின்றனவாம்.

இதைவிட நூலகத்தைப் பார்த்து இது கண்காட்சியா ,இந்தப் புத்தகங்கள் விற்பனைக்கா வைக்கப்பட்டுள்ளன என்ற கேள்விகளால் தலை விறைத்துப் போகின்றதாம். எல்லாம் எங்கள் பலவீனமேயன்றி வேறெதுவுமில்லை.

நூற்றுக்கணக்கான யாழ்ப்பாண மக்கள் கொழும்புக்குச் சென்று கொழும்பு நூலகத்தை இப்படி பார்வையிட முடியுமா என்று ஒரு கணம் சிந்தித்தால் ஒரு போதும் நடக்காதென்பதே பதிலாகும்.

அப்படியானால் அந்தச்சட்டத்தை நாமும் நடைமுறைப்படுத்த யாரிடம் கேட்கவேண்டும்.

கோழியைக் கேட்டு குழம்பு வைக்க நினைத்தால் அதோ கதிதான்.

# ‘எனது மகளை கடத்தியவரை தெரியும்’ நேரில் கண்டால் அடையாளம் காட்டுவேன்

## ஆணைக்குழு முன் மூதாட்டி சாட்சியம்

(மட்டக்களப்பு)

எனது கணவர், மருமகனை சுட்டுக் கொன்றுவிட்டனர். மகன், மகளை கடத்தி விட்டனர். மகளைக் கடத்தியவரை எனக்குத் தெரியும். அவரிடம் மகளைக் கேட்டால் வீட்டுக்குக் குண்டு வீசி அழித்து விடுவதாக மிரட்டுகிறார் என்று மூதாட்டி ஒருவர் நேற்று முன்தினம் செங்கலடியில் நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளித்தார்.

அத்துடன் மகளைக் கடத்தியவரைக் கண்டால் அடையாளம் காட்டுவேன். எனினும் நீண்ட நாட்களாகவே அவரை இப்பகுதியில் காணக்கிடைக்கவில்லை மகளும் திரும்பவில்லை எனவும் அவர் கூறினார்.

செங்கலடிப் பிரதேச செயலகத்தில் வைத்து கற்றுக்கொண்ட பாடங்களுக்கும் நல்லிணக்கத்துக்குமான ஆணைக் குழுவின் முன்னிலையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை சாட்சியமளிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எனது கணவர் கோபாலப்பிள்ளையை 1985 ஆம் ஆண்டு இராணுவத்தினர் சுட்டுக் கொன்றுவிட்டனர். எனது மகன் வசந்தகுமாரை 1998 ஆம் ஆண்டு சீருடைதரித்தவர்கள் கடத்திச் சென்றுவிட்டார்கள்.

எனது மருமகன் விநாயகம் கமலதாசனை 2006.07.28 அன்று கிண்ணியடியில் வைத்து ரி.எம்.வி.பியினர் சுட்டுக் கொன்றுவிட்டனர். சுட்டவரை நேரில் பார்த்தால் அடையாளம் காட்டமுடியும்.

தனது மகள் கோபாலப்பிள்ளை பாக்கியலெட்சுமியை கொழும்பிலிருந்து வரும் வழியில் கருணாகுழுவைச் சேர்ந்த சீலன் என்பவரே கடத்திச் சென்றார். அவர் பற்றி இதுவரை எதுவித தகவலும் வெளிவரவில்லை. பொலிஸில் முறைப்பாடு செய்தபோது அவர்கள் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. மகள் தனது கடவுச்சீட்டை புதுப்பித்துக்கொண்டு கிரான் வந்தவுடனேயே கடத்திச் செல்லப்பட்டதாக நேரில் கண்டவர்கள் கூறினர். எனது மகள் வெளிநாடு செல்வதற்காக பெரும் தொகையான பணம் வைத்திருந்தார்.

கடத்திச் சென்ற சீலனிடம் பலமுறை சென்று கேட்டபோது இனிமேல் வந்தால் வீட்டுக்கு குண்டு வைப்போம் என மிரட்டினர்.

இவ்விடயம் சம்பந்தமாக அவர்களின் இயக்கப் பொறுப்பாளர்களைச் சந்தித்துக் கேட்டபோதும் அவர்கள் என்னை தூசணத்தினால் ஏசினார்கள் என அவர் தமது சாட்சியத்தில் தெரிவித்தார். (ச-5)

## ஆக்கத்திறன் போட்டியில் கரவெட்டி மாணிக்கவாசகருக்கு 2 முதலிடங்கள் கிடைத்தன

(யாழ்ப்பாணம்)

மாகாணமட்டத்தில் நடைபெற்ற ஆரம்பக் கல்வி மாணவர்களுக்கான ஆக்கத்திறன் போட்டியில் கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியால மாணவர்கள் இருவர் முதலிடம் பெற்றுள்ளதாக அதிபர் ராகவன் தெரிவித்தார்.

தரம்-5 திருக்குறள் மனனப் போட்டியில் பா.பானுஜா முதலிடத்தையும், தரம்-4இல் சி.தர்சிகா 2 ஆம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

வாய்பாடுமனனப் போட்டியில் தரம்-4 மாணவி ம.கோபிகா முதலிடத்தையும், தரம்-5இல் ந.விதுஷன் இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டனர். இவர்கள் வலயமட்டப் போட்டியில் முதலிடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

## சுனாமிக்கான பாசாங்கு எச்சரிக்கையும் போலி நடிப்புப் பயிற்சியும்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை பிரதேச செயலகத்துக்குட்பட்ட வல்வெட்டித்துறை வடமத்தி (J/389) பொலிகண்டி கிழக்கு (J/393) ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் இன்று புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு யாழ்.மாவட்ட செயலக அனர்த்த முகாமைத்துவப் பிரிவினரால் சுனாமிக்கான பாசாங்கு எச்சரிக்கை மற்றும் போலி நடிப்புப் பயிற்சி செயற்பாடு மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்தப் பயிற்சி சம்பந்தமாக பொது மக்கள் அமைதியாக இருக்குமாறு இது ஒத்திகைச் செயற்பாடு ஆகையால் இதில் எவரும் குழப்பமடையத் தேவையில்லை என்றும் பொதுமக்கள் அறிவுறுத் தப்படுகின்றார்கள் என யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ரூபினி வரத லிங்கம் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## முதலுதவிச் சங்கத்தின் தகுதிநிலை விரிவுரையாளர் பயிற்சி

(முல்லைத்தீவு)

இலங்கை முதலுதவி சங்கத்தின் தகுதி விரிவுரையாளர்களுக்கான பயிற்சிப் பட்டறையில் முல்லைத்தீவு வலயப் பாடசாலைகளில் இருந்து பங்குபற்றும் ஆசிரியர்களுக்கான பயிற்சிப் பட்டறை இன்றும் நாளையும் காலை 10.00 மணி தொடக்கம் 3.00 மணிவரை முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சிப் பட்டறையில் ஆசிரியர்களைக் கலந்துகொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்ட ஆணையாளர் வி.மோகன தாஸ் அறிவித்துள்ளார். (ச-3)

## வயல்களை உழுது பண்படுத்த அதிக கூலி கொடுக்கும் நிலை

### கிளிநொச்சி விவசாயிகள் கவலை

கிளிநொச்சி மாவட்டத்தில் காலபோக நெற்செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் அப்பகுதி மக்கள் அதிக பணம் செலுத்தியே வயல்களை உழுதுவருவதாக தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளின் பயன்பாட்டிற்கென விவசாய அமைச்சினால் சிறிய உழவு இயந்திரங்கள் (லாண்ட் மாஸ்ரர்) வழங்கப்பட்டது.

இவை கிராமங்கள் ரீதியாக விவசாய சங்கங்களிடம் கையளிக்கப்பட்டு மானிய அடிப்படையில் வயல்களை உழும் பணிகளை மேற்கொள்ள வேண்டும் எனப்பணிப்புரை வழங்கப்பட்டது.

எனினும் கிளிநொச்சி மாவட்டத்தின் பல பகுதிகளில் இவ் உழவு இயந்திரங்கள் பாவிக்கப்படுவதில்லை என விவசாயிகள் குற்றம்சாட்டியுள்ளனர்.

மீளக்குடியேறிய தாம் அடிப்படை வசதிகள்அற்ற நிலையில் விவசாயச்செய்கையில் ஈடுபடுவதாகவும் அதிக கூலி கொடுத்து உழவு இயந்திரங்களை பயன்படுத்தி வயல்களை உழுது வருவதாகவும் தெரிவித்தனர். (ச)

## ஆடு திருடிய இருவருக்கு 10 ஆயிரம் ரூபாய் ஆட்பிணை

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை நெடுங்குளம் பகுதியில் நேற்று முன்தினம் ஆடுதிருடிய சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட இருவரும் தலா 10 ஆயிரம் ரூபாய் ஆட்பிணையில் விடுதலை செய்யப்பட்டனர்.

கொழும்புத்துறை நெடுங்குளம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 9.00 மணியளவில் ஆடு திருடிய குழு ஒன்றை பொதுமக்கள் துரத்திச் சென்ற போது இருவர் அப்பகுதியிலிருந்த கிணறு ஒன்றுக்குள் விழுந்தனர்.

அதன் போது பொதுமக்களால் மடக் கிப்பிடிக்கப்பட்ட இருவரும் நையப்புடைக்கப்பட்டனர். பின்னர் இருவரும் பொலிஸாரிடம் ஒப்படைக்கப் பட்டனர். இவர்கள் இருவரையும் நேற்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போது குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து தலா 10 ஆயிரம் ரூபாய் பெறுமதியான ஆட்பிணையில் விடுதலை செய்யப்பட்டனர். (ச-5)

## சுவாமி விவேகானந்தரின்

### மன உறுதியுடன் இருங்கள்



★ ஒவ்வொரு மனித இதயத்தின் உள்ளும் மிக ஆழத்தில் ஆதி அந்தமில்லாத இறைவன் ஒளிந்து கொண்டிருக்கின்றான். அவனை உணர்ந்தவனே உண்மையை உணர்ந்தவன் ஆவான்.

★ தன்னுடைய பலவீனங்கள், குற்றங்கள், பாவங்கள் எல்லாவற்றையும் வேறொருவரின் மேல் சுமத்துவது மனித இயல்பாக இருக்கிறது. நம்முடைய தவறுகளை உணர மறுப்பது தான் இதற்குக் காரணம்.

★ எத்தனை நல்ல நூல்களை வாசித்தாலும் நம்மால் தூயவராக முடியாது. உண்மையை நாம் உணர வேண்டுமானால், தீவிரமாகச் சிந்திக்க வேண்டும். அப்போது மெய்யுணர்வு நம்முள் மலரத் தொடங்கும்.

★ உங்களுக்குப் பிடித்ததை கடைபிடிப்பதுபோல, மற்றவர்களும் அவரவருக்கு விருப்பமானவற்றை பின்பற்றும் சுதந்திரத்தைக் கொடுங்கள். ஏனென்றால், சுதந்திரம் இல்லாத எதுவும் வளர்ச்சி அடைவதில்லை.

★ எந்த விஷயத்தையும் நன்கு ஆராய்ந்து பாருங்கள். கொண்ட கொள்கை மற்றும் குறிக்கோளில் மனவுறுதியுடன் இருங்கள்.



யா/நவாலி மகா வித்தியாலய நூற்றாண்டு விழாவின் இரண்டாம் நாள் நிகழ்வுகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீட பீடாதிபதி பேராசிரியர் க.தேவராஜா நூற்றாண்டு விழா மலரை வெளியிட்டு வைக்க முதற்பிரதியை வித்தியாலய பழைய மாணவியும் ஓய்வுபெற்ற உப அதிபருமான திருமதி திரேசா ஹென்றி பெற்றுக்கொள்வதையும் காத்தவராயன் கூத்து நிகழ்வையும் படங்களில் காணலாம். (படங்கள் :- நவாலி நிருபர்)

## சிறப்பு பட்டிமன்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கந்தர்மடம் அருள்மிகு ஸ்ரீ ஞான வைரவர் ஆலயத்தில் விஜயதசமியை முன்னிட்டு எதிர்வரும் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு 9 மணிக்கு கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வின் சிறப்பு நிகழ்வாக 'சொல்லின் சிகரம்' பொன். சுகந்தன் தலைமையில் யாழ்.பட்டிமன்றக் குழுவினர் வழங்கும் சிறப்பு பட்டிமன்றம் நடைபெறவுள்ளது. (ஸ்ரீ-2)

## நவராத்திரி விழா

வடமராட்சி தெற்கு- மேற்கு பிரதேச செயலக உத்தியோகத்தர் நலன் புரிச்சங்கத்தினால் ஏற்பாடு செய் யப்பட்டுள்ள நவராத்திரி விழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு பிரதேச செயலர் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெறுவதுடன் ''சொல்லடி சிவசக்தி'' என்னும் தலைப்பில் செஞ்சொற்செல்வர் திரு.ஆறு.திருமுருகன் வழங்கும் சிறப்பு சொற்பொழிவும், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை உப அதிபர், சங்கீத பூஷணம் எஸ். குமாரசாமி வழங்கும் ''வாணி இசையமுதம்'' என்னும் தெய்வீக இசை விருந்து நிகழ்ச்சியும் இடம் பெற வுள்ளன. (ஸ்ரீ)

## யாழ்.செய்திகள்

## கைகழுவுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்

(அல்வாய்)

வடமராட்சி வலயத்தில் உள்ள பாடசாலைகளில் நாளை, மறுதினம் வெள்ளிக்கிழமை ''கை கழுவுதல்'' தொடர்பான அறிவுறுத்தல்கள் அவ்வப்பகுதியில் உள்ள சுகாதாரப் பரிசோத கர் மற்றும் குடும்பநல உத்தியோகத்தர் ஆகியோரின் அனுசரணையுடன் மாணவர்களுக்கு நடத்தப்படவுள்ளது.

அன்றைய தினம் யாழ்.வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் காலை 8.30 மணிக்கு இதனை சிறப்பாக நடாத்துவதற்கு கல்வி அமைச்சினால் ரூபா.10 ஆயிரம் இப்பாட சாலைக்கு ஒதுக்கப்பட்டு சுகாதார அமைச்சினால் இலவசமாக சவர்க்காரமும் வழங்கப் படவுள்ளது என வடமராட்சி வலயக்கல்வி பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2-19)

## பரிசளிப்பு விழாவும் கணனிநிலைய திறப்புவிழாவும்

(பூநகரி)

பூநகரி ஞானிமடம் அ.த.க.பாடசாலையின் வருடாந்த பரிசளிப்புவிழாவும் கணனி. நிலைய திறப்பு விழாவும் நாளை வியாழக்கிழமை மு.ப 10 மணிக்கு பாடசாலை அதிபர் திருமதி தவமலர் கனகசபை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் கிளிநொச்சி வலயக் கல்விப்பணிப்பாளர் த.குருகுலராஜா பிரதம விருந்தினராக கலந்து கொள்வதுடன் வடக்கு மாகாண கல்வித்திணைக்களத்தால் ஆரம்பப்பிரிவு கணனிமூலை செயற்றிட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கணனி நிலையத்தை திறந்து வைக்கவுள்ளார். (ஸ்ரீ-84)

## விஞ்ஞானப் புதிர் போட்டியில் வெற்றியீட்டியோர் விபரம்

(அல்வாய்)

வடமராட்சி வலயக்கல்வி அலுவலகத்தால் வடமராட்சிகல்வி வலய பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட விஞ்ஞானப் புதிர் போட்டியின் முடிவுகள் வலயக்கல்வி பணிப்பாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் ஒவ்வொருபிரிவிலும் முதல் 3 இடங்களைப் பெற்றவர்களின் பெயர் விபரம் வருமாறு;

**விஞ்ஞான புதிர்ப்போட்டி**
**(ஆங்கில மொழி மூலம்)**

**தரம்-6**

கே.சிவகலை (யா/மெத்டிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை), பி.தயாபரன், ஜே.மிதுர்சன் (யா/ஹாட்லிக் கல்லூரி)

**தரம்-7**

ரி.தயாரூபன் (யா/ஹாட்லிக் கல்லூரி), எஸ்.டிலுக்ஷனா (யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை), எம்.சங்கீர்த்தனா (யா/வட மத்திய மகளிர் கல்லூரி).

**தரம்-8**

ஆர்.திருபரன், எஸ்.கஜானன் ( யா/ஹாட்லிக் கல்லூரி ), யு.சகானா( யா/வட இந்து மகளிர் கல்லூரி).

**தரம்-9**

கே.மகிந்தன் (யா/ஹாட்லிக் கல்லூரி), எஸ்.பாவனா (யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை), எம்.ஆரணி ( யா/நெல்லியடி ம.ம.வித்தி).

**தரம்-10**

ரி.கோகுலன் (யா/ஹாட்லிக் கல்லூரி), கே.மாதங்கி (யா/ நெல்லியடி ம.ம.வித்தி), இ.தரிஷ்மி(யா/ விக்னேஸ்வராக் கல்லூரி).

**தரம் -11**

ஆர்.தர்மிகா( யா/வட மத்திய மகளிர் கல்லூரி ), கே.வர்ணிகா( யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை), எஸ். நிதுர்சன்(யா/ஹாட்லிக் கல்லூரி).

**தமிழ்மொழி மூலம்**

**தரம்-6**

ஆர். கனிதரன்( யா/ விக்னேஸ்வராக் கல்லூரி ), எஸ். மதுசுஜா (யா/உடுப்பட்டி பெண்கள் கல்லூரி), எஸ்.சிவதர்சன்( யா/ஹாட்லிக் கல்லூரி).

**தரம்-7**

எஸ்.சுகிர்தன்( யா/ஹாட்லிக் கல்லூரி ), வி.நிதூசன் ( தும்பளை சிவப்பிரகாச மகா வித்தி ), பி.கனிமாருதன்( யா/ஹாட்லிக் கல்லூரி).

**தரம்-8**

எஸ்.சிவகரன்( யா/ஹாட்லிக் கல்லூரி ) ஏ.திருபரன் (யா/உடுப்பட்டி அ.மெ.கல்லூரி), ஆர்.வினித்குமார்( யா/ நெல்லியடி ம.ம. வித்தி).

**தரம்-9**

எம்.சிவதர்சன், ஆர். கோகுலன்( யா/ஹாட்லிக் கல்லூரி ) , பி.சோதிகா( யா/நெல்லியடி ம.ம.வித்தி).

**தரம்-10**

கே.கபிலன்( யா/ஹாட்லிக் கல்லூரி ) ஆர்.ஸ்ரீதிவாகரன்( யா/ நெல்லியடி ம.ம. வித்தி ), ரி.சஞ்ஜியா ( யா/ வல்வெட்டி இ.த.க.பா).

**தரம்-11**

எஸ்.தினேஷ்( யா/ஹாட்லிக் கல்லூரி ) ஆர்.ரம்மியா( யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை), கே.பிரணவன்( யா/நெல்லியடி ம.ம.வித்தி) . (ஸ்ரீ-19)

## பஸ்சேவைகளை விரிவுபடுத்தி தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்

(திருநெல்வேலி)

வடமராட்சி கிழக்கு பகுதிக்கு பருத்தித்துறையில் இருந்தும் யாழ்ப்பாணத்தில் இருந்தும் சேவையில் ஈடுபடுத்தபட்டுள்ள பேருந்து சேவைகளை வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்று மாமுனைவடக்கு பகுதியூடாக சேவையில் ஈடுபடுத்துமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இந்த பஸ் சேவையானது தற்போது செம்பியன் பற்று தெற்கு, மாமுனை தெற்கு போன்ற பகுதிகள் ஊடாகவே சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றது.

எனவே இப்பஸ் சேவையை வடக்கு பகுதியின் கரையோர பகுதிகள் ஊடாக மேற்கொள்வதன் மூலம் அப்பகுதி மக்களுக்கான சிறந்த சேவையை வழங்குமாறு அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஸ்ரீ)

## வீட்டு மின்னிணைப்பு பயிற்சிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் கீழ் வீட்டுமின் இணைப்பு பயிற்சி நெறிக்கு (NVQ சான்றிதழ்) யாழ்ப்பாணம் பயிற்சி நிலையத்தில் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் க.பொ.த.(சா/தரம்) வரை கல்வி கற்றிருத்தல் வேண்டும். அத்துடன் விண்ணப்ப முடிவுத் திகதியன்று 16 தொடக்கம் 35 வயதிற்கு உட்பட்டவராக இருக்க வேண்டும்.

இப்பயிற்சி நெறிக்கு தகுதியுடையோர் தமது முழுப்பெயர் , முகவரி , பிறந்த திகதி , தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் கல்வித் தகைமைகள் என்பவற்றைக் குறிப்பிட்டுச் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை மாவட்ட முகாமையாளர் , NAITA,இல7, கோவில் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு எதிர் வரும் நவம்பர் மாதம் 4 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டுமென இவ்வதிகார சபையின் மாவட்ட முகாமை யாளர் கி.கிருஷ்ணபாலன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## காண்பியக் கலைகளின் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத்துறை கலைவட்டத்தினரால் பால பொதுப்பிட்டிய எனும் தென்னிலங்கை காண்பியக் படைப்பாளி ஒருவரின் வேடவுடை எனும் பெயருடைய காண்பியக் கலைகளின் காட்சி நுண்கலைத்துறை கலைப்பீடத்தில் இன்று புதன்கிழமை தொடக்கம் எதிர்வரும் 21 ஆம் திகதி வியாழக்கிழமை வரை காலை 11 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை நடைபெறவுள்ளது என யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறைத்துறை கலைவட்ட காப்பாளர் அ.நோ. கிருஷ்ணவேணி அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## வாணி விழாவும் பரிசளிப்பு விழாவும்

(அல்வாய்)

யா/திக்கம் சித்தி விநாயகர் வித்தியாலயத்தின் வாணி விழாவும் பரிசளிப்பு நிகழ்வும் நாளை வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் க.ரவீந்திரன் தலைமையில் நடை பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலையின் பதில் மாவட்ட வைத்திய அதிகாரியும் பல்வைத்திய நிபுணருமான வைத்திய கலாநிதி வே.ஜெயராசா, சிறப்பு விருந்தினர்களாக வித்தியாலய முன்னாள் அதிபர் திருமதி.ஸ்ரீ.சிவராஜா, வடமராட்சி வலய முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் சி.தில்லைநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஸ்ரீ-19)

## பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

இலங்கை முதல் உதவிச்சங்கத்தின் தகுதி நிலை விரிவுரையாளர்களுக்கான பயிற்சி பட்டறை முல்லைத்தீவு வலய பாடசாலைகளிலிருந்து தெரிவாகிய ஆசிரியர்களுக்கு இன்றும் நாளையும் காலை 10 மணி தொடக்கம் மாலை 3 மணி வரை மு/முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

எனவே, இதில் சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு இலங்கை முதல் உதவி சங்கத்தின் கிளிநொச்சி மாவட்ட ஆணையாளர் வி.மோகனதாஸ் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)


யாழ்.பல்கலைக்கழக புவியியற்றுறையினரால் நடாத்தப்படும் கருத்தரங்கு தொடர் இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக புவியியல்துறை விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் சூழலியலாளர் பொ.ஐங்கரநேசன் ''மரபணுமாற்றத் தொழில் நுட்பமும் விவசாயத்தில் அதன் தாக்கமும்'' என்ற பொருளில் கருத்துரை வழங்கவுள்ளார்.

இதில் ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு யாழ்.பல்கலைக்கழக புவியியற்றுறைத் தலைவர் பா.இராஜேஸ்வரன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

### பெங்களூர் டெஸ்டில்

# ஆஸி. போராட்டம்; இந்தியா ஆதிக்கம்



## சச்சின் டெண்டுல்கர் இரட்டைச் சதம்



(பெங்களூர்)

சுழல் கூட்டணியின் துல்லிய பந்துவீச்சின் மூலம் அவுஸ்திரேலிய அணி நேற்றைய நான்காம் நாள் ஆட்டநேர முடிபில் அதன் இரண்டாவது இன்னிங்ஸில் 7 விக்கெட்டுக்களையிழந்து 202 ஓட்டங்களை எடுத்தது.

முன்னதாக இந்திய அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 495 ஓட்டங்களை எடுத்து 17 ஓட்டங்கள் வித்தியாசத்தில் முன்னிலை பெற்றது.

இந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய அணி 2 டெஸ்ட், 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகிறது.

இதில் முதலாவது டெஸ்ட்டில் வெற்றி பெற்ற இந்திய அணி தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்ற நிலையில் இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் கடந்த சனிக்கிழமை பெங்களூரில் ஆரம்பமானது.

இபபேட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 478 ஓட்டங்களை எடுத்தது.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இந்திய அணி நேற்று முன்தினம் மூன்றாம் நாள் ஆட்ட நேர முடிபில் அதன் முதலாவது இன்னிங்சில் 5 விக்கெட்டுக்களையிழந்து 435 ஓட்டங்களை எடுத்தது.

இந்நிலையில் நான்காம் நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இந்திய அணிக்கு டெண்டுல்கர், தோனி சிறப்பான இணைப்பாட்டத்தை வழங்கினர்.

இதில் சச்சின் டெண்டுல்கர் 337 பந்துகளில் தனது 6 ஆவது டெஸ்ட் இரட்டைச் சதத்தைப் பூர்த்தி செய்ய இந்திய அணி முதலாவது இன்னிங்ஸில் முன்னிலை பெற்றது.

எனினும் சச்சின் டெண்டுல்கர் 363 பந்துகளில் (22 பவுண்டரிகள், 2 சிக்ஸ்சர்கள் அடங்கலாக) 214 ஓட்டங்களைக் குவித்து அறிமுக வீரர் ஜோர்ஜின் பந்து வீச்சில் போல்ட் முறையில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து வந்த பின்வரிசை வீரர்கள் அடுத்தடுத்து ஆட்டமிழக்க இந்திய அணி முதலாவது இன்னிங்சில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 495 ஓட்டங்களை எடுத்தது.

இதில் அணித்தலைவர் மகேந்திர சிங் தோனி 36 ஓட்டங்களை எடுத்தார்.

பந்துவீச்சில் மிச்சல் ஜோன்சன் 3 விக்கெட்டுக்களையும் அறிமுக வீரர் ஜோர்ஜ், ஹயூரிச் ஆகியோர் தலா 2 விக்கெட்டையும் ஹல் பென்ஹயூஸ், மைக்கல் கிளார்க், வோட்ஷன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து முதலாவது இன்னிங்ஸில் 17 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பின்னிலையிலிருந்த அவுஸ்திரேலிய அணி இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாட களமிறங்கியது.

ஆரம்பத் துடுப்பாட்ட ஜோடி வோட்ஷன் - ஹட்டிச்சின் சிறப்பான இணைப்பாட்டம் வழங்கி நம்பிக்கையளிக்க அவுஸ்திரேலிய அணி 50 ஓட்டங்களை எட்டியது.

இதில் ஷேன் வோட்ஷன் 32 ஓட்டங்களை எடுத்தபோது பிரஜன் ஓஜாவின் பந்து வீச்சில் எல்.பி.டபிள்யு முறையில் ஆட்டமிழந்தார்.

அடுத்து அணித்தலைவர் பொன்டிங் களமிறங்க மறுமுனையில் சைமன்ஸ் ஹட்டிச் 24 ஓட்டங்களுடன் ஹர்பஜன் சிங்கின் பந்து வீச்சில் விக்கெட் காப்பாளர் தோனியிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய மைக்கெல் கிளார்க் 3 ஓட்டங்களுடன் வந்த வேகத்திலேயே ஓஜாவின் பந்துவீச்சில் விக்கெட் காப்பாளர் தோனியால் ஸ்ரொம் செய்யப்பட்டு ஆட்டமிழந்து வெளியேற அவுஸ்திரேலிய அணி 65 ஓட்டங்களை எடுத்து 3 விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது.

இந்நிலையில் நான்காவது விக்கெட்டுக்காக பொன்டிங்குடன் இணைந்த மைக்கெல் ஹசி நிதானமாகத் துடுப்பெடுத்தாடி நம்பிக்கையளிக்க அவுஸ்திரேலிய அணி சரிவிலிருந்து மீண்டது. இந்த ஜோடி நான்காவது விக்கெட்டுக்காக 61 ஓட்டங்களை எடுத்த போது மைக்கெல் ஹசி 20 ஓட்டங்களுடன் ஓஜாவின் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யு முறையில் ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த நோர்த்தும் 3 ஓட்டங்களுடன் ஹர்பஜன் சிங்கின் பந்துவீச்சில் போல்ட் முறையில் வெளியேறினார்.

தொடர்ந்து பெய்ன் களமிறங்க மறுமுனையில் அணித் தலைவர் ரிக்கி பொன்டிங் 83 பந்துகளில் அரைச்சதத்தைப் பூர்த்தி செய்தார்.

இந்த ஜோடி 6 ஆவது விக்கெட்டுக்காக 50 ஓட்டங்களை இணைப்பாட்டமாக எடுத்த போது ரிக்கி பொன்டிங் 117 பந்துகளில் (7 பவுண்டரிகள், ஒரு சிக்ஸ்சர் உட்பட) 72 ஓட்டங்களை எடுத்து சகீர்கானின் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யு முறையில் ஆட்டமிழந்தார்.

மறுமுனையில் பெய்ன் 23 ஓட்டங்களுடன் சிறிசாந்தின் பந்துவீச்சில் விக்கெட் காப்பாளர் தோனியிடம் பிடிகொடுத்து ஆட்டமிழக்க அவுஸ்திரேலிய அணி நேற்றைய நான்காம் நாள் ஆட்ட நேர முடிபில் அதன் இரண்டாவது இன்னிங்சில் 7 விக்கெட்டுக்களையிழந்து 202 ஓட்டங்களை எடுத்தது. இதில் ஜோன்சன் 7, ஹயூரிச் 8 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

பந்துவீச்சில் பிரஜன் ஓஜா 3 விக்கெட்டுக்களையும் ஹர்பஜன் சிங் 2 விக்கெட்டுக்களையும் சகீர் கான், சிறிகாந்த் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இதன் மூலம் அவுஸ்திரேலிய அணி இரண்டாவது இன்னிங்சில் 3 விக்கெட்டுக்கள் கைவசமுள்ள நிலையில் 185 ஓட்டங்கள் வித்தியாசத்தில் முன்னிலையிலுள்ளது.

இந்நிலையில் ஐந்தாவதும் இறுதியுமான நாள் ஆட்டம் இன்றாகும்.

### ஆஸி. ஊடகம் பாராட்டு

பெங்களூர் போட்டியில் இரட்டைச் சதம் கடந்து அசத்திய நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கரை செஞ்சரி நாயகன் என ஆஸ்திரேலிய ஊடகம் பாராட்டியுள்ளது.

இது குறித்து சிட்னி மோர்னிங் ஹெரால் பத்திரிகை வெளியிட்டுள்ள செய்தியில்,

21 ஆண்டுகளாக கிரிக்கெட் அரங்கில் சாதித்து வருகிறார் சச்சின். ஆனால் இன்னும் அவரது ஆட்டத்தில் தொய்வு ஏற்படவில்லை. அவுஸ்ரேலிய அணித்தலைவர் ரிக்கி பொன்டிங் நெருங்க முடியாத அளவுக்கு ஓட்டங்கள் வேட்டை நடத்தி வருகிறார் சச்சின். அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடர்களில் தொடர்ந்து சச்சின் அசத்தி வருகிறார்.

கடந்த முறை அவுஸ்ரேலியா, இந்தியா சுற்றுப் பயணம் வந்தபோது 13 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்தார் சச்சின். இந்தமுறை 14 ஆயிரம் ஓட்டங்களை எட்டியுள்ளார். இனி அடுத்த முறை 15 ஆயிரம் ஓட்டங்களை எட்டுவார். அவர் எப்பொழுது ஓட்டங்கள் வேட்டையை நிறுத்தவார் என்பது கடவுளுக்கு மட்டுமே தெரியும் என செய்தி வெளியிட்டுள்ளது.

### 10 ஆவது முறை

நேற்றைய போட்டியில் இந்திய வீரர் சச்சின், அறிமுக வீரர் பீட்டர் ஜோர்ஜ் பந்து வீச்சில் போல்டானார். டெஸ்ட் அரங்கில் அறிமுக பந்துவீச்சாளரிடம் சச்சின் விக்கெட்டை பறிகொடுப்பது இது பத்தாவது முறை.

குறிப்பாக அவுஸ்திரேலியாவை சேர்ந்த 3 அறிமுக பந்துவீச்சாளர்கள் பீட்டர் சிடில், கமரூன்வையிட், பீட்டர்ஜோர்ஜ், சச்சின் விக்கெட்டை கைப்பற்றியுள்ளனர்.

### புதிய சாதனை

நேற்று 214 ஓட்டங்கள் குவித்த சச்சின் டெஸ்ட் அரங்கில் 6 வது முறையாக இரட்டைச் சதம் அடித்து அசத்தினார். இதன் மூலம் சக வீரர் சேவாக் இலங்கையின் அத்தப்பத்து, ஜெயவர்த்தன, பாகிஸ்தானின் மியாண்தத் ஆகியோரின் சாதனையை சமன் செய்தார்.

தவிர அதிக முறை இரட்டைச்சதம் அடித்த வீரர்கள் வரிசையில் 4 வது இடத்தைக் கைப்பற்றினார். டெஸ்ட்டில் அதிக இரட்டைச் சதம் கடந்த வீரர்கள்,

பிரட்மன் (ஆஸி) 52 போட்டிகளில் 12 இரட்டைச் சதம், லாரா (மே.இ.தீவுகள்) 131போட்டிகளில் 9 இரட்டைச் சதம், ஹம்மண்ட் (இங்கிலாந்து) 85 போட்டிகளில் 7 இரட்டைச்சதம், சங்ககார (இலங்கை) 91 போட்டிகளில் 7 இரட்டைச்சதம், சேவாக்(இந்தியா) 81 போட்டிகளில் 6 இரட்டைச்சதம், அத்தப்பத்து (இலங்கை) 90 போட்டிகளில் 6 இரட்டைச்சதம், ஜெயவர்த்தன (இலங்கை) 113 போட்டிகளில் 6 இரட்டைச் சதம், மியாண்தத் (பாக்) 124 போட்டிகளில் 6 இரட்டைச்சதம், சச்சின் (இந்தியா) 171போட்டிகளில் 6 இரட்டைச்சதம்.

# அதிக தங்கம் வென்று இந்தியா சாதனை

## காமன்வெல்த் போட்டியில் அசத்தல்

(புதுடில்லி)

காமன் வெல்த் போட்டியின் வரலாற்றில் இந்தியா முதன்முறையாக அதிக தங்கப் பதக்கம் (32) வென்று சாதனை படைத்துள்ளது. தவிர வெள்ளி மற்றும் வெண்கலப்பதக்கத்தையும் அதிகளவில் கைப்பற்றியுள்ளது.

இந்தியத் தலைநகர் டில்லியில் காமன் வெல்த் போட்டி நடக்கிறது. இம்முறை போட்டிகள் சொந்த மண்ணில் நடப்பதால் இந்தி நட்சத்திரங்கள் எழுச்சிகண்டனர். நேற்று இந்தியாவுக்கு மேலும் ஒரு தங்கப்பதக்கம் கிடைக்க அதிக தங்கம் வென்று சாதித்தது.

பெண்கள் 10 மீற்றர் ஏர் பிஸ்டல் அணிகளுக்கான துப்பாக்கி சுடுதல் போட்டியில் இந்தியாவின் ஹீனா சிந்து, அனு ராஜ் சிங் ஜோடி பங்கேற்றது. இதில் இந்தியா, அவுஸ்திரெலியா, கனடா ஜோடிகள் தலா 759 புள்ளிகள் பெற்று சமநிலையில் இருந்தன.

இதனை அடுத்து இலக்கை எத்தனை முறை சரியாகத் தாக்கினர் எனப் பார்க்கப்பட்டது. இதில் 14 முறை மட்டும் தாக்கிய கனடாவுக்கு வெண்கலம் கிடைத்தது. இந்தியா, அவுஸ்திரேலியா 21 முறை தங்கியிருந்த போதிலும் சிறப்பாக செயல்பட்டதன் அடிப்படையில் இந்திய ஜோடிக்கு தங்கம் வழங்கப்பட்டது.

### மற்றொரு வெள்ளி

பெண்கள் 50 மீற்றர் புரோன் துப்பாக்கி சுடுதல் போட்டியும் நேற்று முன்தினம் நடந்தது. இதில் இந்தியாவின் முதல் உலக சம்பியன் தேஜஸ்வினி சாவந்த் 594 புள்ளிகளைப் பெற்று வெள்ளிப்பதக்கம் வென்றார். அவுஸ்திரேலியா, வேல்ஸ் வீராங்கனைகள் தங்கம் மற்றும் வெண்கலத்தைக் கைப்பற்றினர்.

### சம்ரேஷ் ஏமாற்றம்

இந்திய வீரர் சம்ரேஷ் ஜங் கடந்த 2006 காமன் வெல்த் போட்டியில் 5 தங்கம் வென்று அசத்தியிருந்தார். நேற்று நடந்த 25 மீற்றர் ஸ்டாண்டர்டு பிஸ்டல் அணிகளுக்கானதுப்பாக்கி சுடுதல் போட்டியில் பங்கேற்றார்.

இதில் 1103 புள்ளிகள் பெற்ற சம்ரேஷ் சந்திரசேகர் துமார் சவுத்திரி ஜோடி வெள்ளிப்பதக்கம் வென்றது. இதேபிரிவில் சிங்கப்பூர், இங்கிலாந்து வீரர்களுக்கு தங்கம் மற்றும் வெண்கலம் கிடைத்தது.

### புதிய சாதனை

இதையடுத்து இந்திய அணி முதன் முறையாக காமன் வெல்த் போட்டிகளில் 32 தங்கம், 25 வெள்ளி, 28 வெண்கலப்பதக்கத்தை பெற்றுள்ளது.

இதற்கு முன் இங்கிலாந்தில் நடந்த காமன் வெல்த் (2002) போட்டியில் இந்தியா அதிகபட்சமாக 30 தங்கம், 22 வெள்ளி மற்றும் 17 வெண்கலம் வென்றிருந்தது.

நவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்



# அமைச்சர் எஸ்.பி.மீது சந்தேகம் வேவு பார்க்கிறது அரசாங்கம்!

## சோதிட நம்பிக்கையால் விபரீதம்

(கொழும்பு)

உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸா நாயக்கவின் மீது அரசாங்க உயர்மட்ட அங்கீ காரத்துடன் வேவு பார்க்கப்படுவதாக கூறப்படுகிறது.

நாளாந்தம் இரவு வேளைகளில் அமைச்சரின் வீட்டில் நடைபெறும் விருந்து நிகழ்வுகளே அதற்கு காரணம் என்று விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ போன்றே அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்கவும் ஜோதிடத்தின் மீது ஆழ்ந்த நம்பிக்கை கொண்டவர்.எஸ்.பி.திஸாநாயக்கவின் ஜாதக பலன்படி என்றைக்காவது ஒரு நாள் அவர் ஜனாதிபதியாக வருவதற்கான வாய்ப்பு இருப்பதாக கூறப்பட்டுள்ளது.

இப்படியிருக்கையில் அமைச்சருக்கு நெருக்கமான ஒரு சோதிடர் ஒருவர், அடுத்த வருட நடுப்பகுதிக்குள் ஜனாதிபதி மகிந்த நோய்வாய்ப்படலாம் எனத் தெரிவித்துள்ளார்.

குறித்த சோதிடர் ஜனாதிபதிக்கும் மிக நெருக்கமானவர் என்பதால் அமைச்சரும் அதனை உறுதியாக நம்பிக்கொண்டுள்ளார்.

எனவே ஜனாதிபதி மகிந்தவுக்குப் பின்னால் கட்சித் தலைமையைக் கைப்பற்றுவதற்கான திட்டங்களை இப்போதே தீட்டிச் செயற்படும் அமைச்சர் திஸாநாயக்க அதற்காக அரசாங்கத்தின் முக்கிய புள்ளிகள் மற்றும் முக்கிய வர்த்தகர்களை நாள்தோறும் வீட்டுக்கு வரவழைத்து விருந்து கொடுத்து அவர்களின் ஆதரவை திரட்ட முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக் ஷவுக்கு நெருக்கமான வட்டாரங்கள் மூலம் தகவல் கசிந்துள்ளது.

அதையடுத்து இப்போதைக்கு அமைச்சரின் அனைத்து நடவடிக்கைகள் தொடர்பிலும் கண்காணிக்கப்படுவதாக தெரியவந்துள்ளது. (ச-5)

## ஜனாதிபதியின் விஜயத்...

இவ்வாறு இந்திய அரசு செய்வதாகவும் கூறியிருக்கின்றார்.

இதேவேளை விடுதலை சிறுத்தைகள் கட்சித்தலைவர் திருமாவளவனும் இலங்கைக்கு அனுப்பப்பட்டிருக்கும் அழைப்பை திரும்பப் பெறவேண்டும் என்றும் இந்திய அரசின் தமிழ் இன விரோதப் போக்கை கண்டிக்கும் வகையில் நிறைவு விழாவை புறக்கணிக்க விருப்பதாகவும் கூறியிருக்கின்றார். இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்க ஒருங்கிணைப்பாளர் பழ நெடுமாறன் கண்டனம் தெரிவித்து வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்திய அரசின் அழைப்புதமிழகமக்களின்வெந்தஉள்ளங்களில் வேலை செருகுவதாகும் என கூறியிருக்கின்றார். (ச-5)

## மிலிந்தவுக்கு விரைவில்...

செய்தி வெளியிட்டுள்ளது.

எதிர்வரும் நவம்பரில் நடைபெறவுள்ள அமைச்சரவை மாற்றத்தின்போது மிலிந்த மொறகொடவை வெளிவிவகார அமைச்சராக நியமிக்க வேண்டும் என்பது ஜனாதிபதி மகிந்தவின் விருப்பமாகும். ஏன் எனில் வெளிநாடுகளில் அவருக்கு இருக்கும் தனிப்பட்ட செல்வாக்கின் மூலமாக சரிந்து கொண்டிருக்கும் இலங்கையின் செல்வாக்கை மீள கட்டியெழுப்ப முடியும் என்பது அவரது எதிர்பார்ப்பாகும்.

அதற்கு முன்னோடியாக மிலிந்த மொறகொடவை நாடாளுமன்ற உறுப்பினராக்கும் நோக்கில் தேசிய பட்டியல் உறுப்பினர் ஒருவரை பதவி விலக வைக்கும் பகீரத முயற்சியில் அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஈடுபட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச-5)

## உள்ளூராட்சி மன்ற எல்...

மன்றங்களின் எல்லைகளை மீள் நிர்ணயம் செய்யும் ஆரம்பகட்ட பணிகளை மேற்கொள்ளுமாறு ஏற்கனவே மாவட்டச் செயலாளர்களுக்கு அரசாங்கம் பணிப்புரை விடுத்துள்ளது.

புதிய தேர்தல் முறைமை அறிமுகப்படுத்தும் போதுவெளிப்படைத்தன்மையை அரசாங்கம்பின்பற்ற வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான கட்சியின் யோசனைத் திட்டங்கள் ஏற்கனவே முன்வைக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த சட்ட மூலம் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவினால் ஆலோசனை செய்யப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றில் சட்டமூலம் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுவதற்கு முன்னர் அரசாங்கம் எல்லைகளை மீள் நிர்ணயம் செய்யும் பணிகளை ஆரம்பித்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இரகசியமாக இந்தத்திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் கட்சிக்கு தகவல்கள் கிட்டியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ச-5)


# உடனடியே...

- எமது திறமையான மாணவர்களின் முன்னேற்றத்தின் மற்றுமொரு மைல்கல்.
- லண்டனில் உள்ள பதினைந்துக்கு மேற்பட்ட கல்லூரிகளின் அனுமதிகளைப் பெற்றுத் தருகிறோம்.

Eg:-
- Thames College of Technology
- Interlink College
- Richmond College

- அனுமதி கட்டணம் இலவசம்
- முன்கூட்டிய கட்டணம் எதுவும் அறவிடப்படமாட்டாது.
- Sponsor வசதி மிககுறைந்த விலையில்
- நம்பத்தகுந்த சேவை
- IELTS அவசியமில்லை
- சட்டத்தரணிகள்/ சமூகபிரபல்யங்களின் வழிநடத்தல்

எமது காலடியில்
Study in UK
Study in Canada

தொடர்புகளுக்கு:

**European College of higher Studies**
315 1/2, Parameshwara Junction, Palaly Road, Jaffna.
Tel.No.: 0773537378 , 0213734747


# டெங்கு ஒழிப்புக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டில் பௌத்த பிக்கு கைது

(கொழும்பு)

டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த குழுவினருக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டில் பௌத்தபிக்கு ஒருவரை வத்துகாமம் பொலிஸார் நேற்று பகல் கைது செய்துள்ளனர்.

டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு நேற்று வத்துகாமப் பொலிஸ் பிரதேச பொது சுகாதார அதிகாரிகள் மற்றும் பொலிஸார் உட்பட பலர் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைளில் ஈடுபட்டு பல்வேறு இடங்களில் பரிசோதனைளை மேற்கொண்டிருந்தனர்.

இதன் போது பௌத்த பிக்கு ஒருவர் இக்குழுவினரின் நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவித்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

பொலிஸார் அவரை கைது செய்து விசாரணைக்கு அழைத்துச் சென்று வாக்கு மூலங்களை பதிவு செய்த பின்னர் எதிர்வரும் 14 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் என அறிவித்து அவரை வீடு செல்ல அனுமதித்தனர். (ச-5)

## ஒரு இலட்சத்து 20 ஆயிர...

கில் 3 லட்சத்து 43 ஆயிரத்து 647 பேர் இடம் பெயர்ந்தனர். அரசாங்கம் மீள்குடியேற்ற நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொண்டு வருவதனால் இப்போது 22 ஆயிரம் பேர் மட்டுமே மீள்குடியேற்றத்துக்காக எஞ்சியுள்ளனர்.

வடக்கின் வசந்தம் கருத்திட்டத்தை ஜனாதிபதி மிகவும் சிறப்பான முறையில் முன்னெடுத்து வருகிறார். வடக்கில் உள்ள சிறுவர்களுக்கு இப்போது கல்வி போதிக்கப்பட்டுவருகிறது. யுத்தம் காரணமாக மூடப்பட்டிருந்த 845 பாடசாலைகள் கல்வி நடவடிக்கைகளுக்காக மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வடக்கில் எஞ்சியுள்ள 170 பாடசாலைகளை விரைவில் திறந்து வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களை மீள்குடியேற்றும் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வடக்கில் விரைவில் அமைக்கப்படவுள்ள தொழிற்சாலைகளில் தொழில் வாய்ப்பு வழங்குவதில் அரசாங்கம் புனர் வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் புலி உறுப்பினர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும் என்றும் கூறினார். (ச-5)

## காணாமல் போனோரின்...

வுள்ளோம்.

அதன் தொடர் நடவடிக்கையாக காணாமல் போனவர்களின் விபரங்களை வெளியிடக் கோரியும் அவர்களின் நிலை தொடர்பாக அறியத்தரக் கோரியும் யாழ்ப்பாணத்திலும், கொழும்பிலும் ஆர்ப்பாட்டங்கள் செய்யப்படவுள்ளன.

அதுமட்டுமன்றி பல்கலைக்கழக மாணவர்களின் பிரச்சினைகள் தொடர்பாகவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என அவர் கூறினார். (ச-5)

## பொதுநலவாய விளை...

கூறப்படுகின்றது. இதற்கிடையில் இலங்கை அரசாங் கத்தின் தகவல்படி இந்த அழைப்பிதழை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் ஏற்றுக் கொண்டுள்ளதாக கூறப்படுகிறது. இதனை அடுத்து அவர் இன்று இந்தியாவுக்குப் பயணிப்பார் என கூறப்படுகிறது.

பொதுநலவாய போட்டிகளின் இறுதி நிகழ்வு நாளை இரவு நடைபெறவுள்ளது. இதேவேளை மகிந்த ராஜபக்ஷ வுக்கு இந்திய அரசாங்கம் அழைப்பு விடுத்துள்ளமையை அடுத்து, அது பாரிய அரசியல் சிக்கலை ஏற்படுத்தலாம் என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். (ச-5)

## பொன்சேகாவுக்கு ஆதரவு...

தொடர்ந்தும் மேற்கொண்டார். கடந்த ஜனாதிபதி தேர்தலின்போது சரத் பொன்சேகாவுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு சண்டே லீடருக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டதாக ப்ரெட்ரிக்கா ஜேன்ஸ் குறிப்பிட்டார். இதற்கான விளம்பரங்களுக்காக சண்டே லீடர் பத்திரிகைக்கு வாரம் ஒன்றுக்கு 10 லட்சம் ரூபாய் ஐக்கிய தேசியக் கட்சியினரால் செய்தித் தாளுக்கு வழங்கப்பட்டதாக ப்ரெட்ரிக்கா ஜேன்ஸ் தெரிவித்தார்.

சண்டே லீடருக்கு ஐக்கிய தேசியக் கட்சி நிதி வழங்குவதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க வெளிப்படையாக தெரிவித்துவந்த நிலையிலேயே தமக்கும் இந்த விடயம் தெரிய வந்ததாக சாட்சி குறிப்பிட்டார்.

சரத் பொன்சேகா வெள்ளைக்கொடி விடயம் தொடர்பில் தாம் கேள்விப்பட்ட செய்திகளையே தமக்குக் கூறினார் என்பதை தாம் சண்டே லீடர் பத்திரிகையில் 2010 ஜனவரி மூன்றாம் திகதி பிரசுரித்ததாக ப்ரெட்ரிக்கா ஜேன்ஸ் குறிப்பிட்டார்.

அத்துடன் சரத் பொன்சேகா தாம் தெரிவித்த கருத்துக்களை அப்படியே பிரசுரிக்குமாறு தம்மிடம் கோரியதாகவும் சாட்சி தெரிவித்தார்.

இந் நிலையில் வெள்ளைக்கொடி விடயம் குறித்து சரத் பொன்சேகாவுடனான செவ்விக்காக ப்ரெட்ரிக்கா ஜேன்ஸ் பயன்படுத்திய குறிப்புப் புத்தகம் நேற்று நீதிமன்றத்தில் அவரால் சமர்ப்பிக்கப்பட்டது.

இதன் போது வாதிட்ட பிரதிவாதியான சரத் பொன்சேகாவின் சட்டத்தரணி நளின் லதுவாஹெட்டி, சாட்சி சமர்ப்பித்த குறிப்புப் புத்தகத்தின் குறிப்பேடு ஒன்றுக்கும் குறிப்புப் புத்தகத்திற்கும் இடையில் வேறுபாடு காணப்படுவதாக குறிப்பிட்டார்.

இதனையடுத்து தமது குறிப்புப் புத்தகத்தை இரண்டுமுறை பார்வையிட்ட சாட்சியான ப்ரெட்ரிக்கா ஜேன்ஸ் தமக்கு அவ்வாறான வித்தியாசம் தென்படவில்லை எனத் தெரிவித்தார்.

பின்னர் மூவரடங்கிய நீதிபதிக்ள் குழுவும் குறிப்புப் புத்தகத்தை பார்வையிட்டது. எனினும் கருத்துக்கள் எதனையும் கூறவில்லை.

இதன் போது குறுக்கிட்ட பிரதி சொலிஸிட்டர் நவரட்ன ப்ண்டா, சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியர் பொய்யான குறிப்பு புத்தகம் ஒன்றை சமர்ப்பிக்க வேண்டுமானால் அதனை இந்த வழக்கு விசாரணைக்கு முன்னரே சமர்ப்பித்திருக்க முடியும் என சுட்டிக்காட்டினார்.

நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட குறிப்புப் புத்தகத்தில் உள்ள ஏடுகள் எவையும் புத்தகத்திலிருந்து அகன்றிருக்கவில்லை என அவர் குறிப்பிட்டார். (ச-5)


வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் வாசிப்பு நிகழ்வு 13.10.2010 இன்று காலை 10.30 மணிக்கு அதிபர் திருமதி க.பொன்னம்பலம் தலைமையில் பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம நடமாடும் நூலக வாகனத்தின் மூலம் **"ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்"** (சென்னை ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தின் ஆன்மீக இதழ்) வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்க அறிமுகம் செய்யப்படும்.

- செயலர்

*முக்கிய குறிப்பு : சஞ்சிகைகள் விற்பனையாகிறது*

**சிவசம்பு களஞ்சியம்**

இல.03, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

(C-1402)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.10.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.